
Free Circulation Germany-England
மார்கழி.Dec.2019

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
Successful Publishing 25 Years IN EUROPE
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck
29 வது ஆண்டு நிறைவில்
தொடர் மலிவு விற்பனை!
தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel:0231 162377
Fax:0231 147836

## கோத்தாபய வகுக்கும் வியூகங்கள் தமிழர் தரப்பு எப்படி எதிர்கொள்ளும்?






Dortmund நகரில்
S.K.SILKS GOLD PARAADISE
நத்தார், புத்தாண்டை முன்னிட்டு ஆடைகள் அனைத்தும்
50% அரை விலை!!! 50%
(50€ மேற்பட்ட சேலைகள் மட்டும்)
14.12.2019-31.12.2019
50% OFF BIG SALE
அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்
Adler str 33 - 44137 Dortmund
Tel:0231 9501 647

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.11
Gopara Gnanam
RHEINISCHE STR 62
44137 DORTMUND
Tel: Mob:0171 330 6542
Tel:0231 53482206
Page.23
StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.37



# நான் வில்லனாக இருந்த சில கணங்கள்!

மாதவி

**ஒரு கணம் நான் Taxi Driver போலவும் அவர்கள் பின் இருந்து பயணிக்கும் காதலர்கள் போலவும் எண்ணிக்கொண்டேன்.**



சொல்லாடா நேரில் வந்தா என்ன பண்ணுவாய், வாவேன் வந்து பாரேன். வந்திடுவேன். என்ன புதுசா எதாச்சும் கேக்குதா?

இல்லை மறக்கமுடியலடி!

கொஞ்சம் பொறு இன்னுமொரு கோல் வருது அது அறுக்கப்போகுது போகாதை நில்லு. அந்த போனைக் கட் பண்ணி வந்த கோலுக்கு கதைக்கிறான்.

சரி சொல்லு!
நான் இப்ப ஓட்டத்தில் நிற்கிறேன். ஒன்றும் கதைக்க நேரம் இல்லை. வேலையைச் செய்ய விடுவாயா. பிள்ளையைப் பாத்துக்கோ. வைக்கிறேன்.
சரி இப்ப நீ சொல்லம்மா! (இது முதல் கதைத்த ஆளுடன்)

நான் நேரில் வந்தால் என்ன தருவாய். உனக்கு தேவையானதை எடுத்துக்கொண்டு நீ மாறிடுவாய். ஆடப் பாவி அப்படியா நினைச்சுக்கிட்டு இருக்காய்.
நான் அப்படிப்பட்டவன் இல்லை. எப்படியோ நீ நினைச்சுட்டாய் வா பார்க்கலாம்.
அட பொறடி இவன் ரங்கு எடுக்கிறான் அப்புறம் கதைக்கிறேன்.

சொல்லடா ரங்கு. அந்த மாற்றர் என்மாதிரி போகுது.

இஞ்சவைச்சு ஒன்னும் பண்ணேலாது நாம அவன் ஊருக்கு வரைக்க ஆளை முடிச்சிடுவோம். ஆட கொண்டு கிண்டு போடாதையடா. இல்லை வாழ்க்கையில் நம் ம நினைக்கிற மாதிரி ஏதும் பண்ணினால் போதுமடா!. அப்படி என்றால் கையைக்காலை. இப்ப விளக்கமாச் சொல்ல ஏலாது ஆனால் அதே தான்டா.

இவன் என்ன ஒரு குப்பையனாக இருக்கிறான். படங்களில் வரும் வில்லன் இவன்தானோ. முகத்தில் ஓங்கி ஒரு குத்து குத்தவேண்டும் என்று மனசு பதினெட்டு வயதிற்கு என்னை அழைத்துச்சென்று அவன் மீது வெறி ஏற்றியது. அதற்காக பதினெட்டு வயதில் நான் சண்டியன் என எடைபோட வேண்டாம். கோபம் வரும் என்பதைச் சொன்னேன்.

மனதுக்குள் அவனைத் திட்டித் தீர்த்தபடி காரோடும் போது என்ன கதை மனிதர் நிம்மதியாக பயணிக்க முடியாது ஒரே கதை... உந்தக்கதையை கொஞ்சம் குறைக்கமுடியுமா? ஏன் என்று கேட்க நினைக்கவும். அவன் நீங்கள் எங்கு போகவேண்டும் என்று கேட்கவும் சரியாக இருந்து.
இன்ர நெற்றில் புக் பண்ணி ரக்சியும் வந்து அதில் ஏறியுமாச்சு இப்ப 15 நிடம் கழிந்த பிறகு, இப்பதான் எம்மிடம் உபர் காரன் (Uber ரெக்சிக்காரன்) கேட்கிறான். அட. நீங்க எங்க போக வேண்டும் என்று. நாம் மயிலாப்பூர் என்கிறோம். இது என்ன நீங்கள் ஏறிய கொட்டல் ரி நகருக்கே திரும்பி கிட்ட வந்திட்டோம். உங்கள் ஹொட்டல் காரன் போகவேண்டிய இடம் மயிலாப்பூர் என்று எழுத வேண்டிய இடத்தில் மீண்டும் ஏறின ஹொட்டல் விலாசத்தையே திருப்பவும் போட்டுவிட்டான்.

**யாவும் கற்பனை அல்ல!**

என்னால் ஒன்றும் செய்ய முடியாது.

இப்ப இன்ரநெற்றில் எழுதினால் அதன் படிதான் நாம் கார் ஓட முடியும் ஒரு இஞ்சியும் வேறு இடத்திற்கு போக முடியாது. வேண்டுமானால் வேறு ஊருக்கு அடித்து செல்லவும் என்றான். இந்த வாகனம் போக முடியாது. சிஸ்ரம் அப்படித்தான் என்று ஒரு குண்டைத் தூக்கி எம்மீது போட்டான் அந்த றைவர் பெடியன். இவ்வளவு நேரமும் யார் யாருக்கோ வில்லனா இருந்தவன் இப்ப எங்களுக்கே வில்லங்கமான வில்லனாய்ப் போட்டான்.

சரி நீங்கள் இந்த நம்பருக்கு ஒருக்கால் அடியுங்கோ. இதுதான் ஹொட்டல் நம்பர். இந்த நம்பருக்குரியவர்தான் எமக்கு புக் பண்ணி விட்டவர் என்று நம்பரைக் கொடுத்தேன்.

அவரும் வாங்கி வைதத்தார். இருவரும் அதே வில்லத்தனதுடன் கதைத்து முடித்தார்.

நீ பிழை! நான் பிழை!! நீதான் புக்செய்தது பிழை என்ற வாதம் அவர்கள் இருவரிடையும் தொடர்ந்தது.

நாம் அப்ப நடு ரோட்டில்தான் என்று எண்ணவும், அவன் போனைக் கட்பண்ணி விட்டு, நடக்கிறது நடக்கட்டும், நம்ம முதலாளி பண்ணுறதைப் பண்ணட்டும். இடம் தெரியாத உங்களை நடுரோட்டில் விட்டுவிட்டு என்னால் போக முடியாது. நான் உங்களை மயிலாப்பூரில் விட்டுவிடுகிறேன் என்று சொல்லி விட்டு. மீண்டும் தன் கள்ளக் காதலிக்குப் போன் போட்டான். மறுபக்கத்தில் அவள் என்ன இன்று சுத்தி சுத்தி ஒரே இடத்தில் நிக்கிறியே! என்னதான்டா இப்பவேணும் என்றாள்.

அவள் தன்னைச் சுத்தி சுத்தி வருவதை நினைக்க, நான் இவ்வளவு நேரமும் சுத்தி சுத்தி ஒரே இடத்தில் நின்றதை நினைத்துக் கொண்டேன்.

அட இவனைக் கெட்டவன், ஒன்றுக்கும் உதவாதவன் என்று நான் நினைத்து அவனைத் திட்டித் தீர்த்தபடியே பயணம் செய்ய, அவனோ நடுத் தெருவில் தெரியாதவர்களை விட்டுவிட்டுப் போக முடியாது முதலாளி என்ன பண்ணினாலும் பரவாய் இல்லை, உங்களை மயிலாப்பூரில் விட்டுவிடுகிறேன் என்று சொல்லி கொண்டு போய் விட்டு விட்டும் போகிறான்.
இவன் வில்லனா! இல்லை அவன் தனிப்பட்ட வாழ்க்கையில் மூக்கை நுழைத்து திட்டித் தீர்த்த நான் வில்லனா. அந்த மயிலாப்பூர் கபலீஸ்வரனுக்கே வெளிச்சம்.

ஒன்று மட்டும் உண்மை. ஒரு கெட்வனிடமும் சில நல்ல குணங்கள் இருக்கத்தான் செய்யம் என்பதை ஏற்றுக்கொண்டது மனது.

பி.குறிப்பு: அந்தக் கள்ளக்காதலியை நான்தான் தவறுதலாக எண்ணிவிட்டேன். அது அவளது தங்கை என எக்காரணம் கொண்டும் படங்களில் வரும் திருப்பம்போல் சொல்ல மாட்டேன். அந்த இடத்தில் நான் அவனுக்கு இன்னும் வில்லன்தான்.










வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை 280



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com

“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276

# கோத்தாபய வகுக்கும் வியூகங்கள் தமிழர் தரப்பு எப்படி எதிர்கொள்ளும்?

- கொழும்பிலிருந்து ஆர். பாரதி -



இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று முடிவடைந்திருக்கும் நிலையில், பொதுத் தேர்தலை நோக்கி நாடு செல்லப்போகின்றது. பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளும் இலக்குடன் ராஜபக்ஷ தரப்பினர் காய் நகர்த்தத் தொடங்கியுள்ளார்கள். ஜனாதிபதிப் பதவி கையில் கிடைத்திருக்கும் நிலையில், பாராளுமன்றத் திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொண்டால், தம்மை யாராலும் ஐந்து வருடங்களுக்கு அசைக்க முடியாது என்ற நம்பிக்கையுடன் தமது வியூகங்களை அவர்கள் வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனையின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷ வெற்றிபெற்றுள்ள அதேவேளையில், தெளிவான சில செய்திகள் இதன்மூலமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. என்னதான் சொன்னாலும், இலங்கைத் தீவு துருவமயப் பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. சிங்கள - பௌத்த தேசிய வாதத்தை அடிப்படையாக வைத்து சிங்கள மக்கள் கோத்தாபயவுக்கு வாக்களித்திருக் கின்றார்கள். அதற்கு எதிராக கோத்தாபயவை ஏற்க முடியாது என்ற அடிப்படையிலேயே தமிழ் மக்கள் சஜித்துக்கு வாக்களித்திருக்கின்றார்கள்.

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவு களுடன் ஒப்பிடும் போது, வடக்கு கிழக்கில் தமிழ் மக்களின் வாக்களிப்பு விகிதம் அதிகரித்திருக்கின்றது. தங்களுடைய வாக்குப் பலத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாக இருந்துள்ளார்கள். தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தவர்களின் கருத்தை தமிழ் மக்கள் கருத்தில் எடுக்கவில்லை. ஜனநாயக ரீதியாக தமக்கு இருக்கக் கூடிய ஒரே உரிமையையும் கைவிட்டுவிட அவர்கள் தயாராகவில்லை. தமது உணர்வுகளை வெளிப்படுத்த தமக்குக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே இதனை அவர்கள் கருதியிருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கில் சஜித் பிரேமதாச 80 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டுள்ளார். தமிழ் மக்கள் இவ்விதம் அபாரமாக சஜித்துக்கு வாக்களித் திருப்பது, சஜித் மீது அவர்களுக்குள்ள அபிமானத்தினால் அல்ல. யார் பதவிக்கு வரக்கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருந்துள்ளார்கள். போரை முன்னெடுத்து இன அழிப்புக்குக் காரணமான ஒருவரை அதிகாரத்துக்குக் கொண்டுவரவோ, அதனை வரவேற்கவோ தாம் தயாராக இல்லை என்பதை தமது வாக்குகளின் மூலம் உறுதி யாகத் தெரிவித்திருக்கின்றார்கள் தமிழ் மக்கள். 2009 க்குப் பின்னர் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தல்களின் போதும் இதே உணர்வைத்தான் தமிழ் மக்கள் வெளிப் படுத்தியிருந்தார்கள்.

அதேவேளை, தென்பகுதியில் சிங்கள மக்கள் இராணுவப் பின்னணியைக் கொண்ட சிங்கள - பௌத்த கடும் போக்காளர் ஒருவரைத்தான் தமது தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள். ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது பாரதூரமான அதிகார துஷ்பிரயோகம், ஊழல், அச்சுறுத்தல் என பெருமளவு குற்றச்சாட்டுக்கள் இருப்பது சிங்கள மக்களுக்கும் தெரியும். ஆனால், போரை வெற்றிகொண்டவர்கள் என்பதற்கு முன்னால், அவற்றைப் பெரியதொரு விடயமாகவோ குற்றமாகவோ கருதுவதற்கு சிங்களவர்கள் தயாராகவில்லை என்பதையும் தென்பகுதி சிங்கள மக்கள் வாக்களித்திருக்கும் முறை உறுதிப்படுத் தியிருக்கின்றது.

சஜித் பிரேமதாசவை ஆதரிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அழைப்பு விடுத்திருந்தது. ஆனால், கோத்தாவைத் தோற்கடிக்க வேண்டும் என்பதற்காக சஜித்துக்கு வாக்களிப்பது என்ற முடிவை தமிழ் மக்கள் முதலிலேயே எடுத்திருந்தார்கள். கூட்டமைப்பு சொன்ன தால்தான் தமிழ் மக்கள் சஜித்தை ஆதரித்தார்கள் என்று சொல்லமுடியாது. கூட்டமைப்பு அதற்காகச் சொன்ன காரணங்களைத் தமிழ் மக்கள் கணக்கில் எடுக்கவும் இல்லை. அதில் நம்பிக்கை வைக்கவும் இல்லை. அதே வேளையில், சஜித் பிரச்சினைகளுக்குத் தீர்வைத் தருவசார் என்ற நம்பிக்கையில் இவ்வாறு வாக்களிக்கவும் இல்லை. கோத்தாவை ஏற்க முடியாது என்பதே தமிழ் மக்களின் ஒட்டுமொத்த கருத்தாக இருந்துள்ளது.
தென்னிலங்கையில் சிங்கள மக்கள் பெருமளவுக்கு வாக்களித்து கோத்தாபயவை தமது ஜனாதிபதியாகத் தெரிவு செய்திருக்கின்றார்கள். சிறுபான்மையின வாக்குகள் அவசியமில்லை, தனிச் சிங்கள வாக்குகளே ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்குப் போதும் என்பது மீண்டும் ஒரு தடவை தடவையாக நிரூபிக்கப்பட்டிருக் கின்றது.

சிறுபான்மையினரின் வாக்குகள்தான் நிர்ணயிக்கும் வாக்குகள்தான் என்ற வகையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் அர்த்தமற்றவையாக்கப்பட்டுவிட்டன.

வடக்கு கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் என அனைத்து சிறுபான்மையின மக்களும் ஒன்றிணைந்து சஜித்துக்கு ஆதரவளித்த போதிலும், கோத்தாவைத் தோற்கடிக்க முடியவில்லை.

தொடர்ச்சி 04ம் பக்கம்.










நெடுந்தீவு முகிலனின்

# யார் முதலில் பேசுவது.

மனிதர்களுக்கு மனக் கசப்பினால் மட்டுமே எல்லா
பிரச்சனைகளும் ஏற்படுவதில்லை...

சிலவேளை சகிப்பு தன்மை குறையும் போது
இரத்தக் கொதிப்பினால் வார்த்தைகளை விட கூடும்.

மன்னிப்பு கேட்க யோசிக்கும் போது
செய்த தவறே மறந்து போயிருக்கும்.

இதுவரை ஏன் பேசாமலிருந்தோம் என்பதின்
காரணத்தை அடிக்கடி மறந்துவிடுகிறோம்

சிறு விவாதங்களே உறவில் பெரிய அளவில்
விரிசலை ஏற்ப்படுத்தி விடுகிறது.

கடுமையான வார்த்தைகளால் ஒருவரை
ஒருவர் திட்டிக்கொள்வது பழக்கப்படுகிறது.

எதுவாக இருந்தாலும் பேசி தீர்வு காணாததால்
எல்லாத்துக்குமே சங்கட பட வேண்டியிருக்கிறது.

கோபமாக சத்தம் போடும் நேரத்தில் பெரும்பாலும்
மற்றவர் அமைதியாகவும் இருப்பதில்லை..

முன்னர் நிகழ்ந்த விஷயங்களைப் பற்றியே
பேசி எரிச்சலூட்டிக்கொண்டிருப்பது.

வாழ்க்கையை அழகாக மாற்றுவதே புரிதல் தான்
ஆனால் அதற்கு விட்டு கொடுப்பு மிக அவசியமே..

சந்தோசமான நாட்களையே நரகமாக
மாற்றும் சக்தி சந்தேகத்துக்கே உண்டு.

கலந்து பேசி தெளிவுபடுத்திக் கொள்ள
எதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறதோ..?

ஆளுக்கொரு விஷயத்தை மனசுக்குள்
மட்டுமே நினைத்திருந்தால் முடிவு வராது.

சண்டை போடும் போது அரைவணைப்பின்
முக்கியத்துவம் தெரியாது.
விட்டு விலகப்போகிறோம் என்றால்
அதை விட ஒரு துன்பம் இருக்காது.

ஒருவாறு எல்லாவற்றையும் மறந்து பேசலாம்
என்றால் - யார் முதலில் பேசுவது என்பதிலே
புது பிரச்சனையே தோன்றி விடுகிறது.

# ஆதலால் காதலை வெறுக்கின்றேன்.

இனி ஒரு துன்பம் என்னை தாக்காதவாறு
என்னை நான் பார்த்து கொள்கின்றேன்.

மீண்டும் அன்பை யாருக்கும் கொடுக்காமல்
என்னை நானே நேசிக்க தொடங்குகிறேன்.

எங்கேனும் பயணம் போனால்
தனி இருக்கை தேடுகின்றேன்.

என்னோடு கை கோர்த்து நடக்க
காற்றை மட்டுமே அனுமதிக்கின்றேன்.

என் தோள்கள் சாய்ந்து தூங்க
தலையனைகள் வாங்கி கொள்கின்றேன்.

கடவுச்சொல் இல்லாமல்
தொலை பேசியை பயன்படுத்துகின்றேன்.

சோக கீதம் இசைக்காமல்
குத்து பாட்டுக்கு ஆடுகின்றேன்.

கடந்த நாட்களில் அழுது கண்ணீர் முடிந்ததால்
இப்போது புன்னகையிலே திழைக்கின்றேன்.

எவரேனும் என்னை பின் தொடர்ந்தால்
நானே தொலைந்து போகின்றேன்.

செத்து செத்து பிழைக்க எனக்கு
தெரியவில்லை - ஆதலால்
காதலையே வெறுக்கின்றேன்.

03ம் பக்கத் தொடர்ச்சி

# கோத்தாபய வகுக்கும் வியூகங்கள்....

கோத்ததபயவின் நிகழ்ச்சி நிரல் எவ்வாறானதாக இருக்கும் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். சிங்கள - பௌத்த தேசியவாதத்தை மேலும் வலுப்படுத்தும் வகையிலேயே அவருடைய செயற்பாடுகள் அமைந்திருக்கும். ஜனநாயக ரீதியாக தீர்வு ஒன்றை தமிழ் மக்கள் நிச்சயமாக எதிர்பார்க்க முடியாது.

சிங்களத் தேசியவாதத்தின் தலைநகராகக் கருதப்படும் அநுராதபுரத்தில் ஜனாதிபதிப் பதவியை 18 ஆம் திகதி ஏற்றுக்கொண்ட பின்னர் கோததாபய நிகழ்த்திய உரையில் இந்தத் தொனியை அவதானிக்க முடிந்தது. ”இந்த வெற்றியைத் தரப்போகிறவர்கள் இந்தநாட்டின் பெரும்பான்மை சிங்களவர்களே என்பதை ஆரம்பத்திலேயே நாங்கள் அறிந்து வைத்திருந்தோம்” என்று பதவிப் பிரமாணத்தில் கோத்தா தெரிவித்திருந்தார். எல்லாளனைக் கொன்று யுத்தத்தை முடித்துவைத்ததாக கூறிய துட்டகைமுனு கட்டிய அனுராதபுர ”ருவன்வெளிசேய”வை தனது பதவிப் பிரமாணத்துக்கு கோத்தா தெரிவு செய்ததன் பின்னால் உள்ள தேசியவாத அரசியலையும் புரிந்துகொள்ள வேண்டும். துட்டகைமுனுவின் இடத்தில் இருந்து இதைச் செய்வதில் பெருமைகொள்வதாக பேச்சின் ஆரம்பத்தில் கோத்தா இறுமாப்புடன் தெரிவித்திருந்தார்.

அவரது உரையில் சிறுபான்மையினருக்கான தீர்வு குறித்து எதுவும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. ”இனப்பிரச்சினை தீர்வு என்கிற பேரில் புதிய அரசியலமைப்பை ஆதரிப்பவர்கள் தேசத்துரோகிகள். அவர்களுக்கு மரணதண்டனை அளிக்கவேண்டும்” எனப் பகிரங்கமாக அறிவித்த கமால் குணரட்ணவைத்தான் அவர் தன்னுடைய பாதுகாப்புச் செயலாளராக நியமித்திருக்கின்றார். கமால் குணரட்ண இறுதிப்போரில் முக்கியமான படை அணியான 53 ஆவது படை அணிக்கு தலைமை தாங்கியவர். வன்னியில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் பலவற்றில் அந்தப் படை அணியே சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

புதிய தளத்திலிருந்து பிரச்சினைகளை அணுக வேண்டிய அவசியம் தமிழர் தரப்புக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. தென்னிலங்கையில், சிங்கள பேரினவாதம் வலுவடையும் நிலையில், ஜனநாயக ரீதியான - அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை எம்மால் எதிர்பார்க்க முடியாது. நிலைமைகளை எதிர்கொள்ள புதிய உபாயங்களைத் தமிழர் தரப்பு வகுத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக சர்வதேச சமூகத்தின் - இந்தியாவின் பங்களிப்பு இதற்கு அவசியம். இதில் தமிழர் தப்பு ஒன்றுபட்டுச் செயற்படுவதும் அவசியம். அதனை அவர்கள் செய்வார்களா?





Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
என்றும்! கிட்டாத
பல சிறப்புகள்
நம் விலையில்
உண்டு!
SUMMER 20
NOW
ON SALE
Colombo
Offnungszeiten
Mo-Fr.10.00-19.30
Sa.10.00-15.00
Mo-Sa Mobile: 24.00
www.Lucky-fly.de
e.mail:siva 0108 @hotmail.com
Graphic Design Vettimaniy Ltd
Mob:No: 0179 1484 892
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171




அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்

கோத்தபாயாவின் வெற்றி

# அரசியல் பேசாத ஒருவரின் அசுர வெற்றி!





தமிழர்களை அழித்தொழித்த கோத்தபாயா எட்டாவது அரசுதலைவராக அதிகக்கூடிய பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இது இலங்கைக்கு இதுவரையில்லாத வரலாற்று வெற்றிதான். அரசியல் பேசாத ஒருவரின் வெற்றி.

இராணுவத்தில் பணியாற்றி பாதுகாப்புச் செயலாளராக இருந்த ஒருவரை இலஙகையின் அரசுத் தலைவராக தெரிவு செய்ததன் மூலம் சிங்கள மக்கள் முழு இலங்கைக்கும் ஒரு செய்தியைச் சொல்லியுள்ளனர்.

***அது இனிவருங்காலங்களில் இலங்கை அரசுதலைவரை தெரிவு செய்வதில் தமிழ் மக்களினதோ தமிழ் அரசியல் கட்சிகளினதோ ஆதரவு எதுவும் தேவையில்லை. சிங்கள மக்களாகிய நாங்களே போதும் !அரசுத்தலைவரை தேர்வு செய்வதற்கு என்பதை அறுதியிட்டுச் சொல்லியுள்ளார்கள்.***

கோத்தபாயாவிற்கு வாக்களித்தமமைக்கு கோதபாயாவின் ஒற்றைச் சொல்லே காரணம். அந்த ஒற்றைச் சொல்லு இதுதான்"பயங்கரவாதிகளை அழித்து உங்களை அச்சமின்றி வாழச் செய்திருக்கிறேன் " என்பதே.இதுதான் கோத்தபாயாவிற்கு வாக்குகளை அள்ளிக் குவித்திருக்கின்றது.
பெருபான்மை இனத்தின் அரசியல் அணுகுமுறை நிலைநிறத்தப்பட்டது பௌத்த தளத்தின் மீதுதான்.அதே வேளை இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் சிங்கள மக்களின் தனிஒருவனின் பாதுகாப்பும் அச்சமில்லாத வாழ்வுக்கான உத்தரவாதமுமே கோத்தபாயாவின் வெற்றியைத் தீர்மானித்துள்ளது.

ஒரு சனநாயகத் தோற்றமுள்ள இராணுவ ஆட்சிக்கும் ராசபக்ச மன்னர் குடும்ப ஆட்சிக்கும் கடந்தகால தமிழர்களின் அனைத்து வடிவிலான அரசியல் அணுகுமுறையும் வழிவகுத்திருக்கின்றது.
இந்தத் தேர்தல் தமிழத் தேசியக்கூட்டமைப்பை இருதலைக் கொள்ளி எறும்பு நிலைக்கும் திரிசங்கு சொர்க்க நிலைக்கும் கொண்டு சென்றிருக்கிறது.
கோத்தபாயவில் வெறுப்புக் கொண்டுள்ள தமிழ் இனத்தின் உணர்வினையே பிரதிபலித்து நின்றவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.
தமிழர்கள் இத்தேர்தலை ஆதரிக்காது (Boycott) விட வேண்டும் என்று கருத்தும்கூட நிலவியது.ஆனால் அது தவறு.
யார் வென்றாலும் பரவாயில்லை இலங்கையில் தமிழர்கள் தமக்குரிய உரிமையை நிலைநாட்ட இத்தேர்தலில் வாக்களித்தமை சரியானதுதான்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டம் முற்றுமுழுதாக தோல்வியடைந்ததன் பின் தமிழ் அரசியல்வாதிகளின் பலம் பலவீனம் யாவும் பரிசோதிக்கப்பட்டு தமிழ் அரசியல்வாதிகளையும் தமிழரையும் இனி எப்படிக் கையாளலாம் என்பதை சிங்கள அரசியல் உலகம் தெளிவாகவே எடை போட்டுள்ளது.

தமிழர்களின் அரசியலுக்காவும் உரிமைக்காகவும் போராடியவர்களின் விவேகம் கேள்விக்குறியாகி நிற்கின்றது.

பெருபான்மையினம் சிறுபான்மையினம் என்ற இரண்டிற்குமான வேலை யில்லாப் பிரச்சினைகள் பொருளாதாரக் கட்டைமைப்புகள் யாவும் சிங்கள மக்கள் சார்ந்தும் தமிழர்கள் சிந்திக்காமல் விட்டதும் பெருந்தவறு என்பதை இத்தேர்தல் வெற்றி உறுதிப்படுத்தியுள்ளது.
புத்திசீவிகளின் அறிவுரைகள் ஒவ்வொரு காலகட்டத்திலும் தீவிரப் போக்காளர்களால் நிராகரிக்கபட்டு நீர்த்துப் போவதையே தமிழரின் அரசியல் வரலாறு கண்டுள்ளது.
கோத்தபாயா அரசுத்தலைவராகவும் மகிந்த ராசபக்சா பிரதமராகவும் நாட்டை ஆள்வது என்பதும் நாடாளுமன்ற ஆட்சியமைவுக்கு அப்பால் ராசபக்ச குடும்ப ஆட்சி நிலவுவதற்கு இவ்வெற்றி வழிசமைக்கலாம்..
எதிர்காலத்தில் சிங்கள மக்களுக்கு ஏற்படும் பொருளாதர வீழ்ச்சி வேலையில்லப் பிரச்சினை விலை ஏற்றங்கள் பஞ்சம் பசி இலஞ்சம் ஊழல் போன்றவையே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துமேயன்றி ஆட்சி மாற்றததை வேறு காரணங்களால் இராசபக்ச குடும்பத்தின் கையிலிருந்து ஆட்சி மாற வாய்பில்லை.

அடுத்த அரசத்தலைவராக நாமல் ராசபக்ச வரக்கூடிய நிலை தோன்றின் வடக்குக் கிழக்கு தமிழ்மக்களின் ஏகோபித்த ஆதரவுடனேயே தெரிவு செய்யக்கூடிய சூழ்நிலை தோன்றலாம்.அடுத்த ஐந்தாண்டுக்குள் தமிழர்கள் சிங்களத்தலைமைகளை நோக்கி நகர்த்தப்படுவதற்கான அனுகூலங்கள் ஏற்படலாம்.
ஆட்சியாளர்களின் அரசியல் அணுகுமுறைக்கமையவே தமிழர்தம் அரசியலைச் செய்ய வேண்டும்.



தாயகத்தில் உள்ள மக்களுக்குத்தான் அரசியலும் அரசியல்வாதிகளும் என்பதை புலம்பெயர் தமிழர்கள் உணர்தல் வேண்டும். தமது எல்லை எதுவரை என்பது இன்னமும் அவர்களுக்குத் தெரியவில்லை.
கோதபாயவை அரசுத்தலைவராக்கியவர்கள் தமிழர்களே என்பது சீரணிக்க முடியாத உண்மை.

*ஏலையா.க.முருகதாசன்*

வெற்றிமணி
இணையத்தளத்திலும் வாசிக்கலாம்
vettimani.com



# பாலனின் பிறப்பும் வாழ்வின் சிறப்பும்



ஒருவர் பிறந்து சில ஆண்டுகள் கடந்தாலே பாலன் எனும் அடைமொழியை நாம் விலக்கி விடுவது இயல்பு. ஆனால், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு பிறந்த ஒருவரை இன்னும் நாம் "பாலன்" என்று அழைக்கிறோம். குழந்தை இயேசு என கொஞ்சுகிறோம். புல்லணையின் பாலனே என பாடுகிறோம். குடிலில் உதித்த குழந்தையே என்கிறோம். மானுடனாய் வந்த மழலையே என வியக்கிறோம். அது தான் இயேசுவின் சிறப்பு. அது தான் கிறிஸ்மஸின் இருப்பு.

எத்தனையோ தத்துவ ஞானிகள் மழலையராய் பிறந்து, மானிடராய் வளர்ந்து விட்டனர். இயேசு இன்னும் அந்த மழலை அடையாளத்துடன் கிறிஸ்மஸ் தினத்தில் நம்மோடு உறவாடுகிறார். காரணம் குழந்தையின் இயல்புகளை நாம் விட்டு விடக் கூடாது என்பதை நினைவூட்டுவதற்காக. குழந்தைகளைப் போல கள்ளம் கபடம் இல்லாதவர்களாக நாம் இருக்க வேண்டும் என்பதற்காக. "நீங்கள் சிறு பிள்ளையைப் போல மாறாவிடில் விண்ணரசில் நுழைய முடியாது" என்றார் இயேசு. மழலைகளின் மனதைப் பெறாமல் சுவர்க்க வாழ்க்கை என்பது சாத்தியமில்லை என்பது தான் மழலை இயேசு நமக்கு நினைவூட்டுகின்ற முக்கியமான செய்தி.

"குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள், அவர்களைத் தடுக்க வேண்டாம்" என ஒருமுறை சீடர்களிடம் கண்டிப்பாய்ச் சொன்னார். சிறுவர்களோடு விளையாடுவதால் இயேசுவின் நேரம் வீணாகும் என சீடர்கள் நினைத்தார்கள். சிறுவர்களோடு உறவாடுவது முக்கியமற்றது என அவர்கள் நினைத்தார்கள். ஆனால் இயேசுவோ, சிறுவர்களை அரவணைத்தார். அவர்களோடு அளவளாவுவதே ஆனந்தம் என்றார்.
குழந்தைகளை அவர்களுடைய இயல்பில் வளரவிடவேண்டும். அவர்கள் இயேசுவிடம் வரவேண்டும், இயேசுவில் வளரவேண்டும். அவர்களைத் தீமையை நோக்கி நடத்திச் செல்பவர்கள் அழிவார்கள். அத்தகைய பாவிகள் மீது இயேசுவின் கோபம் மிகப்பெரிய எரி சாட்டையாய் நெருப்பைக் கக்கியபடி ஆவேசமாய்ப் பாய்ந்து வருகிறது. "என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது" என்கிறார் இயேசு. சிறுவர்களை தவறான வழியில் நடத்துவதை விட செத்துப் போவது நல்லது என்பது தான் அதன் எளிமையான அர்த்தம். அத்தகைய மனிதர்கள் வாழவே தகுதியற்றவர்கள் என்கிறது இயேசுவின் வார்த்தை.

சிறுபிள்ளைகளை நல்ல வழியில் நடத்த வேண்டும். அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் சமூகத்தில் ஆதரவற்றவர்களாக, அனாதைகளாக திரிய வேண்டியவர்கள் அல்ல. அவர்கள் இந்த தொழில்நுட்பத்தின் அரக்கக் கரங்களில் அழிய வேண்டியவர்கள் அல்ல. அவர்களை நாம் அரவணைக்க வேண்டும். அவர்களை அன்பினால் நிரப்ப வேண்டும். அதுவே இறைவனுக்கு ஏற்புடைய செயல். இதை நான் சொல்லவில்லை, இயேசுவே சொல்கிறார்.
"சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்" எனும் அவரது வார்த்தை சிறுவர்களை ஏற்றுக் கொள்வதன் தேவையை விளக்குகிறது. அவர்களை இறைவனின் வழியில் நடத்த வேண்டியதன் முக்கியத்துவத்தைப் புரிய வைக்கிறது.
குழந்தைகள் எந்த வழியில் வேண்டுமானாலும் நடப்பார்கள், அவர்களை வழிநடத்துபவர்களின் கரங்களில் அது இருக்கிறது. அவர்கள் களிமண் போன்றவர்கள்.எப்படி அவர்கள் உருவாகிறார்கள் என்பது குயவனின் கைகளில் தான் இருக்கிறது. அவர்கள் எப்படி வார்க்கப்படுகிறார்கள் என்பது குயவனின் இதயத்தில் இருக்கிறது. குழந்தைகள் தங்களை குயவர்களிடம் ஒப்படைக்கிறார்கள். குழந்தைகள் தங்களை ஆசிரியர்களிடம் ஒப்படைக் கிறார்கள். குழந்தைகள் தங்களை பெற்றோரிடம் ஒப்படைக்கிறார்கள். காரணம், அவர்களிடம் தங்களை முழுமையாய் ஒப்படைக்கும் தாழ்மை இருக்கிறது.

"சிறு பிள்ளையைப்போலத் தம்மைத் தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்" என்றார் இயேசு. பெரியவர் என்பவர் அனுபவத்தை அதிகம் சேர்த்தவர் அல்ல. பெரியவர் என்பவர் அறிவை மூட்டை மூட்டையாய் தூக்கிச் சுமப்பவரல்ல. பெரியவர் என்பவர் வயதின் நரையை முதுமையின் முகவுரையோடு சுமந்து திரிபவரும் அல்ல. அவையெல்லாம் மண்ணுலக அடையாளங்கள். அவையெல்லாம் மண்ணுலக ஒப்பீடுகள். ஆனால் விண்ணுலகில் பெரியவராக வேண்டுமெனில் அதற்குரிய தகுதி ஒன்றே ஒன்று தான். தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். அதுவும் ஒரு சிறு பிள்ளையைப் போல தன்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். தன்னைத் தாழ்த்திக் கொள்பவர்கள் மட்டுமே தம்மை இறைவனிடம் தங்களை முழுமையாய்க் கையளிக்க முடியும்.

சிறுவர்களை இழிவாகக் கருதும் சமூகத்தின் மீதும், சிறுவர்கள் மீது பாலியல் வன்முறை போன்றவற்றை நிகழ்த்தும் தலைமுறை மீதும் இயேசுவின் கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.
"இச்சிறியோருள் ஒருவரையும் நீங்கள் இழிவாகக் கருதவேண்டாம் கவனமாயிருங்கள்! இவர்களுடைய வானதூதர்கள் என் விண்ணகத் தந்தையின் திருமுன் எப்பொழுதும் இருக்கின்றார்கள்" என்கிறார் இயேசு. குழந்தைகளுக்கு எதிராக நாம் செயல்படும் போது அவர்களுடைய வானதூதர்கள் கடவுளிடம் அவர்களுக்காய் பரிந்து பேசுகிறார்கள். அவர்களுடைய பரிந்து பேசுதல் குழந்தைகளை இழிவாய் நடத்துவோருக்கு, அழிவைக் கொண்டு வரும் என்பது சர்வ நிச்சயம்.

சிறுவர்கள் இந்த உலகில் முக்கியத்துவமற்றவர்களாக இருக்கலாம். ஆனால், இறைவன் பார்வையில் அவர்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் கூட வழி விலகிச் செல்லக் கூடாது எனும் ஆசை இயேசுவிடமும், அவரை அனுப்பிய விண்ணகத் தந்தையிடமும் இருக்கிறது. "இச்சிறியோருள் ஒருவர்கூட நெறி தவறிப் போகக்கூடாது என்பதே உங்கள் விண்ணகத் தந்தையின் திருவுளம்" என்கிறார் இயேசு.

இப்படி, இயேசு பாலனாய் பிறந்து இத்தனை நூற்றாண்டுகள் தாண்டியும் ஏன் அவரைப் பாலனாகவே பார்க்கிறோம் என்பதன் விடை அவருடைய சிந்தனைகளின் வழியாகவே நமக்கு விளங்குகிறது. கிறிஸ்மஸ் நமக்குச் சொல்வது அழகிய நட்சத்திரங்களைக் கட்டுவதோ, வண்ணக் குடில்கள் அமைப்பதோ, உயரமான கிறிஸ்மஸ் மரங்கள் நாட்டுவதோ அல்ல. குழந்தைகளைப் போல மாறுங்கள் என்பதே.

பாலன் இயேசுவின் பிறப்பு, வாழ்வின் சிறப்பாக மாற வேண்டுமெனில், நாம் பாலர்களாக மாறவேண்டும். நம் இதயத்திலிருந்து தீய சிந்தனைகளை அறுத்தெறிய வேண்டும். பாலகர்களின் குணமான கள்ளம் கபடமின்மை, தாழ்மை, மனித நேயம், அன்பு, மன்னித்து மறக்கும் குணம் போன்றவற்றை இதயத்துக்குள் நிரப்ப வேண்டும். அதுவே உண்மையான கிறிஸ்மஸ்.
இயேசு பாலனாய் பிறந்து விட்டார், நாம் எப்போது ?
அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்துகள் !

**சேவியர்**







# வரலாறும், வரலாற்றுச் சான்றுகளின் பெறுமதியும்.



திருமதி. சாந்தினி அருளானந்தம்

**திருமதி. சாந்தினி அருளானந்தம்**
முதுநிலை விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

ஒவ்வொரு நாடும் தனக்கென ஒரு வரலாற்றைக் கொண்டிருப்பதை உலக நாடுகளின் வரலாற்றை நோக்கும்போது தெளிவாகும்.

ஆயினும் சில நாடுகள் நீண்ட வரலாற்றையும், இன்னுஞ் சில நாடுகள் குறுகிய கால வரலாற்றையும் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இன்றைய காலகட்டத்தில் வரலாறு என்பது நாட்டினுடைய வரலாற்றை வரன்முறைப்படுத்துவதாக மட்டுமன்றி, அந்நாட்டில் வாழும் இனங்கள் மற்றும் குழுமங்கள், அவற்றின் மொழிகள் பழக்கவழக்கங்கள், மற்றும் பண்பாட்டு மரபுகள் என்பவற்றை அடையாளப்படுத்தவும், அவற்றின் தொடர்ச்சியைப் பேணவும் பயன்படுகின்றது. வரலாறென்பது கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு எனக் கூறப்படுகின்றபோதும், அவற்றினூடாக நிகழ்காலத்தைக் காண்பதையும், எதிர்காலத்தை வளமாக்குவதையும் கண்டுகொள்ளலாம். ஒரு நாட்டினதோ, ஒரு இனத்தினதோ வரலாற்றைக் கூறவேண்டுமானால் சான்றுகள் அவசியமாகும் சான்றுகள் இல்லையெனின் அது வெறும் கதையாகவே கருதப்படும். "சான்றுகளே வரலாற்றின் அத்திபாரம்: அதன் மேலேயே வரலாறு என்ற கட்டடம் எழுப்படும்" என்ற கருத்து வரலாற்றை சான்றுகளே நிலைநிறுத்துகின்றன என்பதனை வலியுறுத்துவதாக அமையும்.

.இலங்கை இந்துசமுத்திரத்தின் மத்தியிலே இந்தியாவுக்குமிக அருகாமையிலே மேற்கு கிழக்குக் கடற்போக்குவரத்தின் மையத்திலே காணப்படுவது அதன் வரலாற்று வளர்ச்சிக்கு ஏதுவாக இருந்தது. மேலும் அந்நாடு

கொண்டிருக்கும் புவியியல் அமைப்பும் வரலாற்றில் தாக்கத்தைச் செலுத்தியுள்ளமையை அவதானிக்கலாம். பல்வேறு வளங்களைக் கொண்ட இலங்கையானது, பண்டைக் காலத்திலேயே பிற நாட்டவரோடு வர்த்தக உறவுகளைக் கொண்டிருந்தது. இதனாலேயே பல்வேறு நாட்டவரும் காலத்துக்குக் காலம் இலங்கைக்குப் பல்வேறு பெயர்களை வழங்கியிருந்தனர். இதனால் இலங்கை அதிகமான பெயர்களைக் கொண்ட நாடாகவும் பெருமை பெறுகின்றது. இலங்கை, ஈழம், லங்கா, இலங்கா துவீபம், நாகதீப, தப்பிரபேன், இரத்தின துபீபம், செலான், பழசிமுண்டு, சிங்களத்தீவு, செரண்டிப், சிலோன் என்ற பெயர்கள் இலங்கையைக் குறிப்பதற்குப் பயன்பட்டன. இவற்றிலிருந்து அக்காலத்தில் இலங்கை பெற்றிருந்த சிறப்பை அறிந்து கொள்ளலாம். இலங்கைக்கு வந்து சென்றவர்களும், இலங்கைக்கு வந்து சென்றவர்களிடம் இலங்கை பற்றி அறிந்தவர்களும் தமது குறிப்புக்களில் இலங்கை பற்றிய செய்திகளைக் குறித்துள்ளமை இலங்கையின் வரலாற்றை அறியத் துணை செய்கின்றன. குறிப்பாக தொலமி, பிளினி போன்றவர்களுடைய குறிப்புக்களை உதாரணமாகக் கூறலாம்.



இலங்கையின் வரலாற்றை அறிந்து கொள்வதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. இவற்றை இலக்கிய ஆதாரங்கள், தொல்லியல் சான்றுகள் எனப் என பாகுபடுத்தி நோக்குவர். வரலாற்றை அறிய உதவும் இலக்கியங்களை உள்நாட்டு இலக்கியங்கள், வெளிநாட்டு இலக்கியங்கள் என்ற பிரிவுகளாக வகைப்படுத்தி நோக்குவதுண்டு. மொழியின் அடிப்படையில் பாளி இலக்கியங்கள், சிங்கள இலக்கியங்கள், வடமொழி இலக்கியங்கள், தமிழிலக்கியங்கள் எனவும், பொருளடிப்படையில் சமயம் சார்ந்த இலக்கியங்கள், சமயம் சாராத இலக்கியங்கள் என்ற வகையீடும் கவனத்திற் கொள்ளப்படுகின்றது. தனித்து இலக்கியங்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இலங்கை ஏறக்குறைய 2300 ஆண்டுகள் வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கும் வகையில் தென்னாசிய நாடுகளில் சிறப்புக்குரியதாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. தொல்லியற் சான்றுகளைப் பொறுத்தவரை கி.பி.19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே தொல்லியற்றுறையின் வளர்ச்சியினூடாக அடையாளப்படுத்தப்பட்டதைக் காணலாம்.

தொடர்ச்சி 08ம் பக்கம்



Tel: 0231- 108 763 61, 0231 584 407 63 Fax: 0231 108 763 62 Mobile:0163- 871 43 69 Rheinische str-72 44137 Dortmund

7ம் பக்கத் தொடர்ச்சி

## வரலாறும், வரலாற்றுச் ......

குறிப்பாக ஆங்கிலேயர் ஆட்சியின் போது இலங்கையில் நிர்வாகப் பணியில் ஈடுபட்டவர்கள் அரிதான எழுத்துக்கள், வெவ்வேறு வடிவங்கள் மற்றும் சின்னங்களைக் கொண்ட நாணயங்கள், அழிந்தும் அழியாத கட்டடங்கள், பல்வேறு காலகட்டங்களிலும் மனிதர்களால் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் என்பவற்றை ஆங்காங்கே அவதானித்துத் தமது குறிப்புக்களில் அவற்றைப் பதிவு செய்தனர். இவற்றின் பின்னணியில் படிப்படியாக இலங்கையில் தொல்லியல் சான்றுகள் அறியப்பட்டு, ஆராயப்பட்டுப் பல்வேறு பிரிவுகளாக வளர்ச்சி கண்டது. இவ்வகையில் தொல்லியற் சான்றுகளுள் கல்வெட்டுகள், செப்பேடுகள், நாணயங்கள், பழைய கட்டடங்கள், எலும்பு எச்சங்கள், பண்டைய பாவனைப் பொருட்கள் என்பன உள்ளடக்கப்பட்டு வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுடன் மக்களிடையே வழக்கிலுள்ள நாட்டார் வழக்காறுகளும், வாய்மொழித் தரவுகளும் வரலாற்றை அறியும் சான்றுகளாக இன்று முக்கியத்துவம் பெறுகின்றன.

இலங்கையில் வாழ்ந்த மக்கள் நீண்டகால வரலாற்றைக் கொண்டிருந்ததை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன என்பதை மேலே கண்டோம். முன்னோர் அரும்பாடுபட்டு நிலைநாட்டிய பல்வேறு அம்சங்களையும் சான்றுகளே அறியத் தருவதால் அவற்றினைப் பேணிப்பாதுகாப்பது இலங்கை நாட்டவரது தலையாய கடனாகும். இதனாலேயே தொல்பொருட்களை வரலாற்றுச் சான்றுகளைச் சேதப்படுத்துபவர்களுக்குத் தண்டனைகள் வழங்கப்படுவதைக் அவதானிக்கலாம். சிகிரியாவில் வரலாற்றுச் சின்னமான பாறையில் எழுதியமைக்காகவும், பழைய தூபி ஒன்றின் மேல் ஏறி நின்று படம் பிடித்து முகநூலில் பதிவிட்டமைக்காகவும் தண்டனைகள் வழங்கப்பட்டதை அண்மையில் ஊடகங்கள் பிரசுரித்திருந்தன. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கென பல்வேறு செயற்படுகள் மேற்கொள்ளப்படுவதோடு, சட்டங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் நாட்டின் எல்லாப்பாகங்களிலும் இத்தகைய நடைமுறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற நிலைமையும் காணப்படுகின்றது. தொல்பொருட்களைப் பாதுகாப்பதற்கென அரும் காட்சியகங்களும் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் நம்மவரிடையே வரலாற்றுச் சான்றுகள், அவற்றின் பெறுமதி என்பன பற்றிய அறிவு இன்மையால் அறிந்தும் அறியாமலும் அவற்றைக் கைநெகிழ விடும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. பழைய கட்டடங்களின் மதிப்புத் தெரியாமலே அவற்றை அழித்துப் புதிய கட்டடங்களுக்குப் பயன்படுத்தப்படும் நிலை காணப்படுகின்றது. அரிதான பொருட்களை முன்னோரின் சொத்து என்பது புரியாமலே வியாபாரிகளுக்கு விற்றுப் பணமாக்கும் செயற்பாடும் நடைபெறுகின்றது. அண்மையில் பொலநறுவைக்குச் கல்விச் சுற்றுலாவுக்காக சென்றபோது ஒரு வியாபாரி பழைய செப்புப் பாத்திரங்கள், விளக்குகள், பல்வேறு வகையான கத்திகள் என்பவற்றை விற்பனைக்கு வைத்திருந்தார்.

எங்கிருந்து அவற்றைப் பெற்றீர்கள் எனக் கேட்போது, அவர் யாழ்ப்பாணத்தில் இருந்து அவற்றைப் பெற்றதாகக் கூறினார். நாமே நமக்குரிய அரிய சான்றுகளை கைநெகிழ விட்டால் எமது வரலாற்று இருப்பை எவ்வாறு நிலைநாட்டுவது?. சான்றுகள் இல்லையெனில் எமது வரலாறு கட்டுக்கதையாகி விடுமல்லவா? எனவே எமது நாட்டுக்குரிய வரலாற்றுச் சான்றுகளைப் பேணிப்பாதுப்பது ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்பதை விளங்கிக் கொள்வது அவசியமானதாகும். கோயில்கள், பாடசாலைகள், பிரதேச செயலகங்கள், சனசமூகநிலையங்கள் என்வற்றினூடாக இளைய தலைமுறையினரிடையே வரலாற்று உணர்வினை வளர்ப்பதும், அதனூடாக நமது வரலாற்றினை நிலைநிறுத்துவதும் தற்காலத்தில் மிகத் தேவைப்பாடுடைய விடயமாக அமைந்துள்ளது.

பெருங்கற்கால ஈமச்சின்னம்
பாவனைப்பொருட்கள்
பிராமிக் கல்வெட்டு







## இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாள்





உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.யோவான்: 1: 9

தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.சங்கீதம்: 3: 16

கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள் அவர்மேல் நம்பிக்கையாயிருக் கிற மனிஷன் பாக்கியவான். சங்கீதம் : 34 : 8

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. சங்கீதம் : 150 : 6

அந்தணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தாஉகள் லுக்கா: 2 : 13 14

நமக்கு ஒரு பாலகன் பிறந்தார் நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார் கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர். ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு எனப்படும். ஏசையா: 9 : 6

தேவதூதன் அவளை நோக்கி, மரியாளே, பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய்.லுக்கா : 1: 35

தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்த ஆவி உன்மேல் வரும், உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும், ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும் லுக்கா : 1: 35

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். மத்தேயு : 1:21

தொகுப்பு: பாமினி.



# காது மந்தமானவர்களை அணுகுவது எப்படி
## காது மந்தமாவது எப்போது!



**Dr IN**

**டாக்டர் எம்.கே.முருகானந்தன்**
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
**குடும்பவைத்தியர்**

"அப்பா இப்ப முந்தி மாதிரி இல்லை. ஒதுங்கி ஒதுங்கிப் போறார். முந்தி மாதிரி எங்களோடை அதிகம் கதைக்கிறதில்லை. தனக்கு ஒண்டும் இல்லை எண்டுட்டார். உங்களிட்டை வர மாட்டன் எண்டும் சொல்லிப் போட்டார்.

நான்தான் நட்டுப்பிடிச்சு கூட்டிக்கொண்டு வந்தனான்" என்றாள் மகள் மிகுந்த மனவேதனையுடன். அப்பா முகத்தில் சலனமில்லை. விட்டேத்தியாக என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 70 இருக்கும். மன விரக்தியாக இருக்குமோ என எண்ணிய நான் "ஐயாவுக்கு என்ன பிரச்சனை" என்றேன்.

ஐயா மறுமொழி கூறவில்லை ஆனால் எனது முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தேன்.

"ஐயாக்கு காது கேக்கிறது கொஞ்சம் குறைவோ" என்று கேட்டபோது, "அப்படித் தெரியல்லை எங்களோடை வடிவாக் கதைக்கிறார்தானே" என்றாள். மேசையில் உள்ள பொருளை எடுப்பதுபோல மறு பக்கம் முகத்தைத் திரும்பிக் கொண்டு "ஐயா உங்களுக்கு எத்தனை வயசு" என்று கேட்டேன். மறுமொழி வரவில்லை. சந்தேகம் நிரூபணமாகியது. காது மந்தமாவது என்பது வயதானவர்களைப் பாதிக்கும் ஒரு முக்கியமானதும் பரவலானதும் ஆன பிரச்சனையாகும். 65 வயதுக்கு மேற்பட்டவர்களிடை 15 - 40 சதவிகிதத்தினரும், 75 வயதுக்கு மேற்பட்ட வர்களிட 50 சதவிகிதத்தினரும், 85 வயதுக்கு மேற்பட்டவர்களில் 80 சதவிகிதத்தினரும் செவிப்புலன் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறார்கள்.

எனவே வயதாகும்போது காது மந்தமாவது என்பது நியதி போலவே இருக்கிறதேயன்றி விதிவிலக்காக அல்ல என்று சொல்லாம் போலிருக்கிறது.

இது மிக மெதுமெதுவாகவே ஏற்படுகின்ற பாதிப்பு என்பதால் பலரும் ஆரம்பகட்டங்களில் தமக்கு இக்குறைபாடு உள்ளதை தாமாகவே உணர்ந்து கொள்வதில்லை. முகத்துக்கு நேர் முகம் பார்த்துப் பேசும்போது அவர்கள் புரிந்து கொள்வதால் உறவினர்களும் உணர்ந்து கொள்ளத் தாமதமாகலாம்.

**செவிப்புலன்**

செவிப்புலன் என்பது நாம் எமது சூழலுடன் தொடர்பாடுவதற்கு மிக முக்கியமான உணர் திறனாகும். இதன் இழப்பானது மனித வாழ்வின் முழுமையை, அந்த வாழ்பனுபவத்தின் பூரணத்துவத்தையே சிதைத்துவிடும். செவிப்புலன் இழப்பானது மூளையின் செயல் வீச்சைக் குறைக்கிறது, ஆரோக்கியமான உணர்வுகளை மரக்க வைக்கிறது, மனநலத்தைப் பாதிக்கிறது, கற்றலை முடக்குகிறது, தொழில்வாய்ப்பைச் சிதைக்கிறது எனப் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

**பாதிப்புகள்**

வயதானவர்களின் காது மந்தமாகும்போது மற்றவர்களுடன் வழமைபோலப் புரிந்து பேசி உறவாட முடியாமல் தடுமாறுகிறார்கள். தனிமைப்படுகிறார்கள். வழமையான நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள். இவற்றால் ஏக்கத்திற்கும் மனவிரக்திக்கும் ஆளாகுகிறார்கள். இதனால் இவர்கள் உறவினர்களிடமிருந்தும் நண்பர்களிடமிருந்தும் தாமாகவே ஒதுங்கிக் கொள்கிறார்கள். இதுதான் அப்பெண்மணியின் அப்பாவுக்கும் நடந்தது.

**காது மந்தமாதல் இரண்டு வகையானது.**

முதலாவது ஒலியானது சூழலிருந்து காதுத் துவாரம் வழியாக செவிப்பறைக் குருத்தெலும்புகள் எனக் கடத்தப்படுதலில் உள்ள கோளாறாகும்.

செவிப்பறை பாதிப்படைதல், துவாரமடைத்ததல், குருத்தெலும்புகள் இறுகதல் போன்றவற்றால் இது நேரலாம். இரண்டாவது வகை நரம்பு மண்டலம் சம்பந்தப்பட்டது. ஒலியை உணர்தல், அதனைப் பாகுபடுத்தி விளங்கிக் கொள்ளல் ஆகியவவை பாதிப்புறுவதால் ஏற்படுவது. வயதானவர்களின் காது மந்தமாகும் போது, இது மூப்படைவதின் ஒரு கட்டமேயாகும். ஒருவர் முகத்திற்கு நேரே பேசும்போது விளங்கிக் கொள்ளும் வயேதிபர், பலர் கலகல எனப் பேசும்போது புரிந்து கொள்ளச் சிரமப்படுவது ஒலியை பாகுபடுத்தி விளங்க முடியாதிருப்பதாலேயே. புறச் சத்தங்கள் அதிகமாக உள்ள இடங்களிலும் ஒலி எதிரொலிக்கும் இடங்களிலும் அவர்களால் கேட்க முடிவதில்லை. அதே போல விரைவாகப் பேசுவோரின் உரையால்களையும், புதியவர்களின் பேச்சுக்களையும் அவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

வயதானவர்களின் காது கேளாமையைக் முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சைகள் எதுவும் கிடையாது என்பது உண்மைதான். ஆயினும் அவர்களின் குறைபாட்டைத் தணிப்பதற்கு பல வழிமுறைகள் உள்ளன. அவற்றைப் பயன்படுத்த உதவுவது உறவினர்களின் கடமையாகும்.

**காது கேட்கும் கருவிகள்**

காது கேட்கும் கருவிகள் பலன் தரக்கூடும். ஆயினும் 10-15 சத விகிதமானவர்களே அக்கருவிகளைத் தொடர்ந்து உபயோகிக்கிறார்கள். இதற்குக்காரணம் அது இயற்கையான காதுக்கு மாற்றீடு அல்ல. அத்துடன் கூட்டமான இடங்களில் புறச்சத்தங்களும் குழப்பக்கூடும். அத்தருணங்களில் இரண்டு காதுக்குமே கருவியை உபயோகிப்பது பிரயோசனமாயிருக்கும்.

ஸ்பீக்கர் போன், ஒலி அதிகரித்த தொலைக்காட்சிப் பெட்டி, ஒலியுடன் ஒளியையும் உமிழும் அழைப்புமணி போன்ற பாவனைப் பொருட்கள் அவர்களைச் சூழலுக்குள் திருப்தியோடு அணைந்து இயங்க உதவக் கூடும்.

காது மந்தமானவர்களுடன் பேசும்போது நீங்கள் அவதானிக்க வேண்டியவை.

முகத்தை வேறு பக்கம் பார்த்துக் கொண்டு பேசாதீர்கள்.

அவர்களுக்கு உங்கள் முகம் தெளிவாகத் தெரியும்படியான இடத்தில் இருந்து பேசுங்கள்.

குரலை உயர்த்திப் பேசாதீர்கள். சாதாரண குரலில் பேசுங்கள். விரைவாகப் பேசாதீர்கள். ஆறுதலாகவும் தெளிவாகவும் பேசுங்கள். உங்கள் உதடுகள் வாசிக்கப்படக் கூடியவாறு பேசுங்கள். நீங்கள் பேசுவது அவருக்குப் புரியாவிட்டால் குரலை உயர்த்தி மீண்டும் மீண்டும் அதையே சொல்வதை விடுத்து வேறு சொற்களால் சொல்லுங்கள்.

கூட்டமான இடங்களில் வைத்துப் பேசாதீர்கள். ஒதுக்குப்புறமாக சத்தம் சந்தடி குறைந்த இடத்திற்கு கூட்டிச் சென்று உரையாடுங்கள்.

காது கேட்கும் கருவி உபயோகிப்பவராயின் அது சரியாக வேலை செய்கிறதா என்பதையும், உரிய இடத்திட்ட சரியாகப் பொருத்தப்பட்டிருக்கிறதா என்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.

முகம், கண்கள், கைகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி சைகை மொழிகளுடன் பேசுங்கள். உங்கள் பேச்சைப் புரிந்து கொள்ள முயற்சித்து அது முடியாததால் அவர் சோர்ந்து விட்டதை அவதானித்தால் உங்கள் உரையாடலை வேறு ஒரு தருணத்திற்கு ஒத்திவையுங்கள்.

காது கேளாமைக்குக் காரணங்கள்

மூப்படைதட்ட மட்டுமே காது கேளாமைக்கு ஒரே காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. தோழில் ரீதியாகவோ (உதா- இயந்திர ஓசைகள்), பொதுவாழ்வின்போதோ கடுமையான ஒலிகளுக்கு நீண்டகாலம் முகங்கொடுக்க நேர்வது, செவிடாவதைத் துரிதப்படுத்தக் கூடும்.

பல வகை மருந்துகள், காதுக் குடுமி, பரம்பரையாக விரைவில் காது மந்தமாதல், நடுக் காது நோய்கள் போன்றவையும் காரணமாகலாம்.

எனவே நீங்களாக முடிவெடுக்காமல் வைத்திய ஆலோசனை பெறுவது நல்லது. நன்றி. தமிழ்தகவல் - கனடா





டோட்மூண்ட் நகரில்...
K.K.L
Textilien Schmuck Haushaltsware
11.01.2020 சனிக்கிழமை
3 ம் ஆண்டு நிறைவையும்
தைப் பொங்கலையும் முன்னிட்டு
50% முதல் 70 % வரை
விலைக்கழிவில்
(சாறி, சாறி பிளவுஸ் பஞ்சாபி
சேட் குர்தா சிறுவர் ஆடை
அனைத்து ஆடைகளுக்கும்)
https://m.Facebook.com
kkl.textillenschmuck
சிறப்பு மலிவு விற்பனை!
இமிற்றேஷன் நகைகள்
அனைத்தும் கழிவு விலையில்
100 € மேல் கொள்வனவு செய்யும்
ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும்
நிச்சயம் பரிசுப் பொருட்கள் உண்டு
சேலைகளுக்கு பிளவுஸ் தைத்துக் கொடுக்கப்படும்.
அனைத்துவகை ஆடைகளும்
புத்தம் புது டிசைன்களில் கிடைக்கும்
அனைவருக்கும்
எங்கள் இனிய நத்தார்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
Rheinische str.56 - 44137 Dortmund Tel: 0231 96 98 6610



# கர்ப்பம் சுமக்கும் தாயவள் கவனத்திற்கு.



கரிணி

தாய்மை என்பது இன்னொரு உயிரின் படைப்புக்கு துணை போதல். இப்பூமியில் பல்லுயிர்களும் பல்கி பெருக தாய்மையின் பங்கு மிக முக்கியமானது. சாதாரணமாக பார்க்கின்ற போது அதன் பெறுமதி, ஆழங்கள், நுணுக்கங்கள் இயல்பாக கணிக்கப்பட்டு விடுவதில்லை. மிகச் சாதாரண இயல்பான நிகழ்வாகவே நடந்தேறி விடுகிறது. எனினும் இத் தாய்மை தான் அடுத்தடுத்த பரிணாமங்களுக்கு உருவாக்கம் கொடுக்கிறது. கோயிலின் கருவறையே தாயின் கருவறைக்குமான பெயர். அவ்வளவு புனிதத் தன்மை வாய்ந்த இடத்தில் பதியும் கருவை பேராற்றல் மிக்கதாக உருவாக்க முடியும்.

கர்ப்பிணிகள் தம் தாய்மையின் தார்ப்பணியத்தையும், அதன் பொறுப் புணர்வையும் உணர்ந்து செயற்படுதல் மிக முக்கியம். மனிதன் தன் சுயத்தின்படி நடந்து கொள்வதற்கான சுதந்திரம் வெகுவாகவே இருக்கின்றது. ஆகவேதான் பல துறைகளில் வளர்ந்தும், விரிவடைந்தும் இருக்கின்றான். அவ்வாறான மனிதன் இன்னுமொரு உயிரை உருவாக்கும் போது அதனை மேலும் வலுவாகவும், ஆளுமை மிக்கதாகவும் உருவாக்கும் விழிப்புணர்வை பெற்றிருக்க வேண்டும்.

தற்கால சமூகம் அறிவியலில் மேம்பட்டு இருக்கின்ற போது பற்பல விடயங்கள் தேடி வரும். அப்படியான பொழுதுகளில் சரிபிழை எது என்று பகுத்து உணரும் பக்குவம் வேண்டும். ஆரோக்கியம், நுண்ணுணர்வு சார்ந்த பழமைகளை உணர்ந்தறிந்து பயன் பெற வேண்டும். காலா காலமும் பொருத்தமாக அமையக்கூடிய எத்தனையோ வழி முறைகளை முன்னோர்கள் தந்து சென்றுள்ளனர். மரபு சார் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் சீராக உடல் உள சமநிலையை பேணி வந்தன.

ஒரு குழந்தை கருவில் உருவாகும் போதே அதற்கான சூழலை உள்வாங்கத் தொடங்குகிறது. புராண கதைகளில் அபிமன்யுவையும், பிரகலாதனையும் உதாரணமாக எடுத்துக்கொள்ள முடியும். இன்றைய விஞ்ஞான உலகமும் கருவில் உள்ள குழந்தையின் கிரகிக்கும் தன்மையினை ஏற்கத் தொடங்கியுள்ளது. எனவே நல்லதொரு சூழலை உருவாக்கி உணர்வின் மூலம் உள்வாங்கச் செய்தல் என்பதை இலகுவில் நடைமுறைப் படுத்த முடியும். தாயின் உணர்வு மூலம் குழந்தை அதிக உணர்திறனைப் பெறுகிறது. எனவே தாயின் உணர்வு நிலை முக்கியமானது. அவற்றில் உதாரணமாக நேர்மறையான அதிர்வுகள் உள்ள இசையைக் கேட்டல், நல்ல புத்தகங்களை வாசித்தல், மன அமைதி, சாந்தி தரும் விடயங்களில் ஈடுபடுதல், புதிர்கள் போன்ற மூளைக்கு வேலை தரும் விளையாட்டுக்கள், மனதிற்கு இனிய உரையாடல்கள், நல்லெண்ணம் என்பன அவசியமானவை. மற்றும் எதிர்மறையான திரைப்படங்கள், சின்னத்திரைகள் பார்த்தல், மனதை நடுங்கவைக்கும், பாதிக்கும் விடயங்களை கேட்டல், பார்த்தல் என்பனவற்றையும், துக்க வீட்டில் பங்கெடுத்தல், பழியுணர்ச்சி, பகை, கோபம், வெறுப்பு, தாழ்வு மனப்பான்மை, விரக்தி, சோம்பல் போன்றவற்றையும் அறவே தவிர்த்தல் வேண்டும்.

எதிர்மறையான உணர்வுகள் தரக்கூடிய இடங்களை மட்டுமல்லாது அப்பேற்பட்ட நபர்களைக் கூட தவிர்த்திருத்தல் வேண்டும். இது குழந்தையின் அற்புதமான உருவாக்கத்திற்கு மிக முக்கியமானதாக இருக்கும். முதலில் மனித குல மேம்பாட்டிற்கு எது சிறந்தது, அதிக நல்ல விளைவுகளை ஏற்படுத்தும் என்ற சுய பரிசீலனை இருக்க வேண்டும்.

அதே வேளை எவ்வாறான தன்மைகளோடு தன் குழந்தை இருக்க வேண்டும் என்ற ஆசை உள்ளதோ அதற்கேற்றாற் போல் உள்ளுணர்வோடு கருவிலிருந்தே பேணிப் பாதுகாக்க வேண்டும்.

மனக்கழிவுகளை நீக்குவதோடு, உடற்கழிவுகளையும் தேங்காது வெளியேற்ற வேண்டும். எனவே மலச்சிக்கல் ஏற்படாது பார்த்துக் கொள்வதோடு மரபணு மாற்றமல்லாத இயற்கையான பாரம்பரிய உணவுகள் உட்கொள்ள வேண்டும். அகச்சுத்தம், புறச்சுத்தம் அன்றாடம் பேணப்பட வேண்டும். தானியங்கள் விளைநிலத்தில் போட்டதும் முளைக்கும் உயிர்த் தன்மை உடையது. நல்ல தானியங்கள் மிகுதியாக பலம் தரும். முக்கியமாக ஒரு கர்ப்பிணிக்கு ஒட்டு மொத்த குடும்பமும் ஆதரவும், அன்பும் கொடுக்கும் போது மிகுதியான பேராற்றலோடு குழந்தை வளர்ச்சியுறும் என்ற பொறுப்புணர்வையும் குடும்பத்தவர்கள் கருத்திற் கொள்ள வேண்டும். அதற்காகவே சீமந்தம் என்று சொல்லப்படுகின்ற வளைகாப்பு நிகழ்த்தி பிரசவத்திற்கு அருகாமையில் இருக்கும் பெண்ணின் பதற்றத்தைப் போக்கி உற்சாகம், தைரியம், சந்தோசம் போன்றவற்றை ஏற்படுத்துகின்றனர். இந்த நிகழ்வு கருவின் ஏழாவது மாதத்தில் நிகழ்கிறது. அந்த குழந்தை மிக நுட்பமாக சூழலை கிரகிக்க தொடங்கும் காலம் இது. எனவேதான் இந்த நிகழ்வு தொடக்கம் பெண் அதிக கண்ணாடி வளையல்களை கையில் அணிந்து அந்த இசையின் மூலம் குழந்தைக்கு இனியதொரு உணர்வை சீராக இருக்கும்படி பேணுகிறார்கள்.

வீட்டில் உள்ள மூத்தோர்கள் கருவில் குழந்தை உருவாகும் போதே அதற்கேற்ற உணவுகள், கர்ப்பிணிக்கான ஆலோசனைகளாக எந்தெந்த நாட்களில், நேரங்களில் தலையில் குளிப்பது, எண்ணெய் தேய்ப்பது, எப்படி அமர்வது, எவ்வாறான விடயங்கள் செய்யலாம் அல்லது செய்யக் கூடாது போன்ற பல விடயங்களைச் சொல்லிக் கொடுக்கும் போது அவை அந்த தாய்க்கும் சேய்க்கும் பெரும் பாதுகாப்பு அரணாக விளங்கியது.

பல குழந்தைகளை பெற்ற சமுதாயத்தில் இன்று ஒரு குழந்தை பெற்றுக் கொள்வதில் கூட பல போராட்டங்களை சந்திக்கின்றனர். இவ்வாறான விடயங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள வயதானவர்கள் அல்லது மரபறிந்த மூத்தோர்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். பட்டறிவு என்பது பாட்டன் பாட்டியின் பெரும் சொத்து.

தொடர்ச்சி 30 பக்கம்




# மிலான் நகரில் ஒரு இராப்போசனம்!







**வெற்றிமணி வெள்ளிவிழாவில்**
**வெற்றிமணி வழங்கிய கௌரவம்**

**தனசேகர் பிரபாகரன்**

இன்றைக்கும் நினைவிருக்கிறது சிறுவயதில் எங்கள் பள்ளிக் கட்டிடத்தின் உள்ளே செல்லும்போது மேலே ஓர் ஓவியம் வரையப்பட்டிருக்கும், இயேசு நடுவில் இருக்க இருபுறமும் சீடர்கள் அமர்ந்து இரவு உணவு உண்ணும் ஓவியம், இது போலே பல ஓவியங்கள்.ஃபடங்களை உலகெங்கும் காணலாம். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையாக அமைந்தது மறுமலர்ச்சி காலத்தில் டாவின்சி வரைந்த "தி லாஸ்ட் சப்பர்" (வுாந டுயளவ ளுரிநச). ஐரோப்பாவில் மறுமலர்ச்சி: ரோம சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் சுமார் கி.பி 5 முதல் கி.பி. 1500 வரை ஐரோப்பா மத்திய காலமென்னும் இருண்ட காலத்தில் மூழ்கி இருந்தது, பின்னர் அறிவுசார் மாற்றங்களையும், கலை வளர்ச்சியையும் இத்தாலி தொடங்கி வைக்க உலகத்தியே திரும்பிப் பார்க்கவைத்த மறுமலர்ச்சிக் காலம் தொடங்கியது. இக்காலத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற ஓவியர் லியானார்டோ டாவின்சி வரைந்த ஓவியங்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை அவற்றுள் ஒன்று தான் கடைசி இராப்போஜனமென்னும் "தி லாஸ்ட் சப்பர்"மோனலிசா போன்ற டாவின்சி வரைந்த ஓவியங்களைப் பார்க்க நீங்கள் லூவர் போன்ற அருங்காட்சியங்களுக்கு செல்லவேண்டும் ஆனால் அவற்றிலிருந்து மாறுபட்டது இந்த ஓவியம். இதனைக்காண நீங்கள் மிலான் நகரம் செல்ல வேண்டும், சென்றாலும் அத்துணை எளிதில் பார்க்கமுடியாது. மிலான் நகரம்: இத்தாலியின் செல்வங்கொழிக்கும் நகரங்களுள் ஒன்று, பிளாரன்ஸ் நகருக்கு அருகே பிறந்து பலவிடங்களில் பணியாற்றிய டாவின்சி, மிலானின் ஸ்.ஃபோர்சா குடும்பத்தின் வேண்டுகோளுக்காக மிலான் வரவழைக்கப்பட்டார், மிலான் நகரின் வெளிப்புறத்தில் புனித டொமினிக் சபை துறவியர் இல்லத்தை அழகுபடுத்தும் விதமாக அதன் உணவுக் கூடத்தில் ஓவியம் வரைய பணிக்கப்பட்டார் டாவின்சி. விவிலியத்தில் குறிப்பிடுவதை கருப்பொருளாய்க் கொண்டு அந்த அழகிய ஓவியத்தை 1495இல் வரையத் தொடங்கி, 1498இல் நிறைவுக்குக் கொணர்ந்தார். அவர் அதிகாலையில் எழுந்து ஓவிய வேலையைத் தொடங்கினால் மாலை வரையும், பசி தாகம் என்று பாராமல் ஓவியம் வரைவதிலேயே கண்ணாயிருந்தார் என்று சம கால எழுத்தாளர் மத்தேயோ பண்டேல்லோ (ஆயவவநழ டீயனெநடடழ) என்பவர் குறிப்பிடுகிறார்.

பிரெஸ்கோ முறையை கையாளாமல் உலர்முறையை கையாண்டதால் அப்போதே ஓவியத்தின் நிறங்கள் மங்கத்தொடங்கின, பின்னாளில் பல காலகட்டங்களில் ஓவியம் சீரமைக்கப் பட்டது. இரண்டாம் உலகப் போர் 1943, ஆகஸ்டு 15ஆம் நாள் ஓவியம் இருந்த கட்டடத்தின் அருகே விழுந்த குண்டு ஓவியத்தை அழித்திருந்திருக்கும். ஆனால் அதிசயமாக ஓவியம் இருந்த சுவர் மட்டும் தப்பியது. அதனால் இன்று வரை ஓவியத்தை நமக்கு வாய்ப்பாக அமைந்தது.

இன்றைக்கு இத்தாலியின் இரண்டாவது அதிக மக்கள் தொகை கொண்ட நகரமாக விளங்குகிறது மிலான், பழமையும் புதுமையும் கைகோர்த்து நிற்கும் இந்த நகரின் மத்தியிலிருந்து சற்றே வெளியே நிற்கிறது சாண்டா மரியா டெல்லா க்ராஸியா எனும் அந்த குருமார் மடம். ஓவியம் இருக்கும் சுவர் இதற்குள் தான் இருக்கிறது. ஓவியத்தின் தன்மையைக் கருதி ஒரே நேரத்தில் 25 மட்டும் வெறும் 15 நிமிடங்கள் மட்டும் பார்வையிட அனுமதி அளிக்கப்படுகிறது. அதற்கு பலமாதங்களுக்கு முன்பே முன்பதிவு தொடங்கிவிடுகிறது. அதனால் இதனை பார்க்க பல நாட்கள் முன்பே திட்டமிட வேண்டும்.

செந்நிற கட்டிடத்தில் அந்த பிரம்மாண்டம் கண்முன்னே காட்சியளித்தது, இயேசு நடுவே அமர்ந்திருக்க இருபுறமும் முறையே திருத்தூதர்கள் பன்னிருவரும் மூன்று பேர் மூன்று பேராக நான்கு குழுவாக உள்ளனர். ஒவ்வொருவரும் வெவ்வேறு உடல்நிலை கொண்டிருந்தாலும், மொத்தத்தில் சமனாகச் சீரமைத்த விதத்தில் பன்னிருவரும் தோற்றமளிக்கினறனர். பர்த்தலமேயு, அல்பேயுவின் மகன் யாக்கோபு, அந்திரேயா.யூதாசு இஸ்காரியோத்து, சீமோன் பேதுரு, யோவான் ஒருபுறம், மற்றோருபுறம் பிலிப்பு, செபதேயுவின் மகன் யாக்கோபு, தோமா,சீமோன், ததேயு மற்றும் மத்தேயு.

ஓவியத்தில் வருகின்ற ஒவ்வொரு நபரும் எத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவர்களுடைய உடல்நிலை, கை அசைவு, முகம், உதடு, வாய், கண் ஆகியவற்றின் வழியாக ஓவியர் எடுத்துரைக்கிறார். லியோனார்டோவின் ஓவியம் "சொற்களின்றிப் பேசுகின்ற கவிதை" என்று இன்றைக்கும் கலையுலகம் பேசிக்கொண்டிருக்கிறது, அந்த அளவு பெருமைவாய்ந்த ஓவியத்தைக் காண கண்டிப்பாக ஒருமுறையாவது இத்தாலி சுற்றிவாருங்கள்.










# சொர்க்கமே என்றாலும்

# ஷோபா போல் வருமா?

மூனா

என்ன வேலைகள் இருந்தாலும் அவற்றை எல்லாம் சற்றே ஒதுக்கி வைத்துவிட்டு மாதத்தில் ஒரு தடவை தங்கள் குடும்பத்துடன் எல்லாப் பிள்ளைகளும் வீட்டுக்கு வந்து எங்களுடன் உணவு உண்டு உரையாடி விட்டுப் போவார்கள்.

அப்படியான ஒரு சமயத்தில், "நீங்கள் ஏன் தமிழாக்கள் நடத்துற விழாக்களுக்கு போறதில்லை" என்று அதி உச்சமான ஒரு கேள்வியை எனது இளைய மகன் கேட்டான். மூத்தவனும் அவனது கேள்விக்கு ஒத்து ஊதியதால் பிரச்சனை விவாதத்துக்கு வந்தது.

அவர்கள் உட்பட எனக்கும் இரண்டு பிறந்தநாள் கொண்டாட்டத்துக்கான அழைப்பிதழ்கள் வந்திருந்தன. அதனால்தான் இளைய மகன் அப்படிக் கேட்டான் என்பதைப் புரிந்து கொண்டேன். என்ன சாட்டுச் சொன்னாலும் அதை அவர்கள் ஏற்க மாட்டார்கள் என்பதில் எனக்குத் தெளிவு இருந்தது. சும்மா ஒப்புக்காக "நேரமில்லை" என்றேன்.

'சும்மா ஷோபாவிலை படுத்துக் கொண்டு ரிவி பாக்கிறதுக்கே அப்பாவுக்கு நேரம் காணாது" மூத்தவனிட ம் இருந்து ஒரு நக்கல் வந்தது. கூடவே 'களுக்' என்ற மருமகள்மாரின்ரை சிரிப்பும் சேர்ந்து வந்தன.

கொஞ்ச நேரக் கலந்துரையாடலுக்குப் பிறகு சொன்னேன், "ஓகே வாற சனிக்கிழமை நடக்கிற பிறந்த நாள் விழாவுக்குப் போவோம்" அந்தப் போவோம் என்ற வார்த்தைகளில் நான் அவர்களையும் மெதுவாக சேர்த்து விட்டிருந்தேன்.

வெள்ளை மேசை விரிப்பு. அதன் மேலே அலங்காரம் என்ற பெயரில் காகிதத்தாலான சில வேலைப்பாடுகள். அவற்றின் மத்தியில் பிளாஸ்ரிக் கப்புகள், கோலா, பன்ரா, ஸ்பிரைட் என்று ஒன்றரை லீற்றர் போத்தல்கள்... என மேசை நிறைந்திருந்தது. உளுந்து வடை ஒன்று கடலைப்பருப்பு வடையுடன் ஜோடி சேர்ந்து சம்பலோடு எங்கள் மேசைக்கு வந்தது. பக்கத்தில் இருந்த மனைவியிடம் "வடை எப்பிடி?" என்று கேட்டேன். கேட்கவில்லை என சைகையால் பதில் தந்தாள். எட்டு ஊருக்கும் கேட்கும்படி தமிழ்ப்பாட்டு ஒலித்துக் கொண்டிருந்தது.

"உங்கடை வீட்டை வரோணும் எண்டிருந்தன். இஞ்சை கண்டது நல்லதாப் போட்டுது." அடுத்த பிறந்த நாள் விழாவுக்கான அழைப்பிதழ் எங்களுக்கு அங்கேயே கிடைத்தது. நான் எனது பிள்ளைகளைப் பார்த்தேன். அவர்கள் தங்களுக்குத் தரப்பட்ட அழைப்பிதழ்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தூரத்தில் இருந்த தெரிந்தவர் என்னைப் பார்த்துச் சிரித்தார். எனது வாய் பேசாமல் இருந்திருக்கலாம். அதுவும் பதிலுக்குச் சிரித்து விட என்னைப் பார்த்துச் சிரித்தவர் பேனையை எடுத்து எதையோ கிறுக்கி விட்டு என்னை நோக்கி எழுந்து வந்தார். அவரது கையில் வெள்ளை என்வெலப் தெரிந்தது. இன்னுமொரு அழைப்பிதழ் நடந்து வருகிறது என்பது தெரிந்தது.

சாப்பிடும் போது எனக்குள் ஒரு கேள்வி பிறந்தது. கொத்துறொட்டிக்கு வெங்காயம் போடுகிறார்கள்தானே! பிறகெதற்கு லீக்ஸையும் சேர்க்கிறார்கள்? எதற்கு வம்பு என்று எதுவுமே கேட்காமலே சாப்பிட்டேன்.

ஏற்கெனவே அடுத்த கிழமைக்கான பிறந்தநாள் விழாவின் அழைப்பிதழ் வீட்டில் இருக்கிறது. இப்பொழுது இன்னும் இரண்டு சேர்ந்திருக்கிறது. சும்மா சொல்லக் கூடாது ஒரு விழாவுக்குள் இன்னொரு விழா வந்து இடைஞ்சல் தராமல் ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளையும் உனக்கு எனக்கு என்று ஒற்றுமையாக பிரித்து எடுக்க எங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

"எங்கடை காரிலை இடமிருக்கு. சனிக்கிழமை நான் வந்து உங்களைப் பிக்கப் பண்ணுறன்" என்று மூத்தவன் சொல்லி இருந்தான். அவன் சனிக்கிழமை வந்த போது நான் ஷோபாவில் அமர்ந்திருந்தேன்.

"இன்னும் வெளிக்கிட இல்லையோ?" என்று கேட்டான். அவனது கேள்வியில் பட்டும் படாமலும் எரிச்சல் இருந்தது தெரிந்தது.

"காலிலை சுளுக்கிப் போட்டுது" என்று காலில் சுற்றி இருந்த பன்டேஜைக் காட்டினேன். தாயைப் பார்த்தான்.

"அப்பா வராமல் நான் தனியாக வாறது நல்லா இருக்காது" தாய் சொன்னதும் "வரயில்லை எண்டால் ஒரு எஸ்.எம்.எஸ் ஆவது அனுப்பி இருக்கலாமே. நான் மினக்கெட்டு இஞ்சை வந்திருக்கத் தேவையில்லை" என்று சலித்துக் கொண்டான். வேலை இடத்துக்கு நேரே போய் இருமி, தும்மி, பம்மிக் காட்டித்தானே சுகமில்லை எண்டு லீவு எடுக்க வேண்டி இருக்கு. அது போலத்தான் பன்டேஜைக் காட்டினால்தானே உனக்கும் விளங்கும் என்று எனது மகனுக்குச் சொல்ல நினைத்தேன்.

மூத்தவன் போகும்போது, "அப்பான்ரை பேரிலை ஐம்பது யூரோ குடுக்கிறன். அப்பாட்டை வேண்டி வையுங்கோ" என்று தாயிடம் காசை நினைவு படுத்தி விட்டுப் போனான்.
கடைக்குப் போய் அடுத்த கிழமைக்கான பொருட்களெல்லாம் வாங்கி வந்து, வார விடுமுறையில் செய்வதற்கென ஒதுக்கி வைத்திருந்த வேலையில் இருபத்தைந்து வீத வேலையை மட்டும் முடித்து விட்டு சாப்பிட்டு 'அப்பாடி' என்று ஷோபாவில் அமர்ந்து ஐந்து நிமிடம் கூட ஆகி இருக்காது பிறந்தநாள் விழாவுக்குப் போன பிள்ளைகள் விழா முடிந்து திரும்பி வந்தார்கள்.

ஷோபாவில் அமர்ந்திருந்த என்னைப் பார்த்த மூத்தவனின் கண்களில் "நான் போற பொழுதே ஷோபாவில்தான் இருந்தாய். திரும்பி வருர போதும் அதிலேயே இருக்கிறாய். ஐஞ்சாறு மணித்தியாலமா ஒரே இடத்திலேயே இருக்கிறியே..." என்ற ஏளனம் தெரிந்தது.
சின்னவனின் கையில் வெள்ளை என்வெலப்புகள் இருந்தன. நான் அவனது கையைப் பார்ப்பதைப் புரிந்து கொண்ட அவன், "இன்னும் மூன்று விழாக்களுக்கு அழைப்புக் கிடைச்சிருக்கு, உங்களுக்கும் தந்தவையள்´" என்றான்.

கதைத்து முடிந்து அவர்கள் போன பிறகுதான் பார்த்தேன், என்னுடைய அழைப்பிதழ்களுடன் அவர்களுக்குக் கிடைத்த அழைப்பிதழ்களும் கலந்து என் மேசையில் ஒன்றாக இருந்தன.

ஷோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டேன்.

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளளோம்

NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974


www.Nandys.de
e.mail:info@nandys.de




அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்

# Importance of Religion in Life





The earliest humans fought severely for their survival. For years they led a life hiding in the caves and residing in them. Depending on the climate and other geographical factors; the humans moved from place to place until they chose the most suitable, secure, and peaceful place. In their long struggle the humans faced lot of challenges for survival in the form of venomous insects, snakes and ferocious animals. The natural disasters compelled him to quit the places and to build strong huts and sheds for shelter. Therefore, they lived without peace and at the same time were totally dependent on nature. They realized the importance of worshiping and started and continued to pray and worship gods of nature. They worshipped sun, moon, Saturn, snakes, female and male deities and obtained their Grace. They uttered various sounds which later took the form of mantra and songs which became more powerful forms of worship to get boons from god.

It is said and heard and engraved in literature that god spoke in asareeri from the sky to many people. We know how god called Thinnan through asareeri and prevented Thinnan from taking his eyes out to stop the bleeding from the eyes of Shivalingam. God Himself named him as 'Kannapan'.

The humans who were well developed in supreme spiritual level saw, spoke and lived with gods who appeared in front of them and became selfless and surrendered to gods. They led a renounced life and meditated for numberless years and received mantras from their gods after a long period of variety of austere spiritual practices('thapas') in the forest. Several others had visions of gods. Many others like 'Alvargal' and 'Nayanmargal' were directed directly by the gods to write and sing devotional songs such as 'thirupallandu', 'thevara thirumuraigal' , 'thiruvasam' and 'thirupukal'.

When Gnanasambanthar cried in search of his missing father at the lake, Goddess Parvathi came down and fed him with divine milk. Later, when Gnanasambanthar's father asked who gave him milk Sambanthar started to point the sky where Lord Shiva appeared with Parvathi on a cow and started to describe their form as 'thodudaya seviyan vidai eri'. Thirugnanasambanthar's songs elaborate the description of lord Shiva and his consort in all most all the temples in the earth. Thus, the human's belief in religion grew year by year for ages.



Bavvatharani Ravindran
Nallur

From the prehistorical years to date there have been evidences of the drawings of sun, snake, moon, planets and cow images made out of clay, wood and metals and rock pieces. Historical evidences reveal the fact that the humans and also insects like spider, monkeys, snakes and elephants too worshipped god and attained liberation-mukthi. The fear and non-protection forced the early human to surrender and worship the natural elements such as fire, air, water, earth, space and especially the sun, moon, snakes. They respected and worshipped the cow as 'ko matha' with much reverence, for the immense variety of benefits which were obtained from it as a 'katpaka tharu'. They started to pray and worship the planets especially Saturn, cobra, female and male deities.

They uttered various sounds which later took the form of mantra and songs used for praying gods. They drew pictures of gods on walls of the caves and engraved the forms of gods seated in their relevant vehicles and holding alms and weapons specific to their power and energy shown in their holy deed's acts performed to redeem good from evil. The pictures of gods and angels , renounced souls and other divine birds and animals carved, drawn and painted on walls of the caves and engraved in wood and rocks the forms of gods seated in their relevant vehicles and holding alms and weapons reveal the religious symbols , forms of gods , their weapons and their eyes and expression pouring Grace and Compassion and Divine Love to the person who adorns Him. Today we can observe lord murunga seated on peacock vehicle with vel(spear) in his arms lord Shiva with Thiri Soolam (trident) seated on cow with Parwathi. Goddess Saraswathi with Veda scripts in her hand seated on a swan, Lord Ganesh with angusa pasangusam seated on rat.

Religion is part and partial of human beings.it plays a very vital role from his birth to death.






# லண்டனில் தமிழ் உதயாவின் கவிதை நூல்கள் வெளியீடு



“எனக்கு பறவை நிழல்”

தமிழ் இலக்கிய உலகில் ஆழமாகத் தடம் பதித்த பலரும் பங்கு பற்றியும் கலந்து கொண்டும் இருந்த ஒரு அருமையான கவிதை தொகுப்பு வெளியீட்டு வழா இது. கடந்த 19.10.2019 லண்டனில் இடம்பெற்றது.

தமிழ் உதயாவிற்கான அழகாக உதயமான நாள் அது. விழா மண்டபத்தில் தமிழ் மணக்க மணக்க ஒவ்வொரு விடயமும் மிக நேர்த்தியாக அமைக்கப பட்டிருந்தது. உதயாவை முதன் முதலில் நேரடியாக சந்திக்க கிடைத்ததும் அன்று தான்.

சாகித்தியரத்னா விருது பெற்ற பேராசிரியர் சபா ஜெயராசா ஒரு மிகத் தெளிவான முறையிலே தமிழ்க் கவிதைகளின் ஆரம்ப கால வரலாறு பற்றியும்அதன் பரிணாம வளர்ச்சி பற்றியும், யாப்பிலக்கணம் சார்ந்த சந்தக்கவிதைகள் மரபுக் கவிதைகள் எவ்வாறு எப்போது எப்படியாக புதுக் கவிதைகளாக மாற்றம் பெற்றது தொடர்பாகவும் வரலாற்று சான்று களோடும்கவிதை போல பேசியிருந்தார்.

திருமதி கலா.ஸ்ரீரஞ்சன் (பூங்கோதை) திரு.சாம்.பிரதீபன், திரு.அ.இன்பன், திருமதி.றஜிதா. சாம், திரு.இளைய அப்துல்லா (எம்.என்.எம்.அனஸ்) திருமதி கௌரி பரா.திரு.யமுனா ராஜந்திரன், திரு செல்லத்தம்பி மகேந்திரன் அகியோரது அருமையான பேச்சுக்கள் நூல்பற்றி அமைந்திருந்தன.



கவிஞர் தமிழ் உதயா

இனி அவருடைய பல கவிதை நூல்களில் எனக்காக நானே தெரிவு செய்த 'எனக்கு பறவைநிழல்' பற்றிய எனது பார்வை.
கவிதைத் தலைப்பைப் பார்த்து, தெரிவு செய்யும் உரிமையை தமிழ் உதயா அவர்கள் எனக்கு தொலைபேசி வாயிலாகத் தந்ததை மிகப் பெருமையாகக் கருதுகிறேன்.
அழகான, தனித்துவம் கொண்ட இந்தக் கவிதைத் தலைப்பு என்னைக் கவர்ந்தது போலவே எவரையும் கவரக்கூடிய தன்மை கொண்டது. கவிஞர் இதை என்ன சூழலில், என்ன உணர்வில் இத்தலைப்பைப் படைத்தார் என்பது எமக்குத் தெரியாது.
இருப்பினும் இக்கவிதைத் தொகுப்பில் அநேகமான கவிதைகளிலும் ஏதோ ஒரு பறவை சிறகை விரித்துப் பறந்த வண்ணமே தான் இருக்கிறது.

பறவைகள் என்றதும் அவை எம்மனதின் நினைவுகளையும் மனித வாழ்வின் நிலையாமையையும் அதன் குறுகிய கால அல்லது தற்காலிகத் தன்மை யையும் எனக்கு நினைவூட்டுகிறது. அதே நேரம் எனக்கு விதிக்கப்பட்டது பறவையின் நிழல் தான் என்பதாகவும் இது இருக்கலாம். பறவைகளும் அதன் நிழல்களும் தற்காலிகமானவையே. இருந்தாலும் பறவைகளின் தேடல்களும் அவற்றின் தேவைகளும் தனித்தன்மை வாய்ந்தவை. தற்காலிகத் தன்மையாயினும் பலம் வாய்ந்தவை. பறவைகளுக்கும் மனித வாழ்வுக் கப்பாற்பட்ட, பற்றற்ற அல்லது நிலை யாமைக்கு முள்ள விலகல்களுக்கும் தொடர்புண்டு.

இக்கவிதைகள் அனைத்துமே ஏதோ ஒரு விதத்தில் எமது யுத்த காலத்தையும் அதனோடு சேர்ந்து பாதிப்படைந்த எமது மக்களது வாழ்வின் சகல பரிமாணங்களையும் தொகுத்துள்ளன. தமிழ் இனிக்க இனிக்க அன்பும் கரிசனையும் பொங்க எழுதப்பட்டுள்ள கவிதைகள் இவை. கவிஞர் தான் பார்த்து, உணர்ந்து கடந்து வந்த வலி சுமந்த பாதையை தேவையற்ற ஆரவாரங்களின்றி அமைதியாய் சொல்லிப் போகின்றார்.

மழையில் நனைவதற்கும், அதை உணர்வதற்கும் வித்தியாசமிருப்பது போலவே இக்கவிதைகளை வாசித்து நனைபவர்கள் நனையலாம், உணர்பவர்கள் உணரலாம். நான் இப்பறவை நிழலில் நனைந்ததை விட அதை உணர்ந்ததே அதிகமாகவிருந்தது.
-

**கலா ஸ்ரீரஞ்சன்**



# மனிதர்கள் காத்திருக்கின்றார்கள்



எப்போதும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் அந்த நீண்ட சாலையின் வலப் பக்கத்தில் அமைந்திருந்தது அந்த வளாகம். பெண்கள் பள்ளி மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியோடு முதியோர் காப்பகமும் அங்கு அமைந்திருந்தது.
உள்ளே நுழைந்ததும் ஒரு பெரிய ஆலமரம் இருக்கும். அதை ஒட்டினாற்போல அமைந்துள்ள சிறிய பாதையின் அருகில் அந்தக் காப்பகம் அமைந்திருக்கும்.

இருபத்தி மூன்று பேர் இருக்கும் அந்தக் காப்பகத்திற்கு இப்போது சென்று கொண்டிருக்கும் சிற்பிகா ஒன்றும் அந்த வளாகத்திற்குப் புதியவளல்ல. பள்ளிக் காலத்தில் அங்கு பயின்ற போதிலிருந்து மாதத்தில் ஒரு முறையேனும் அவள் அங்கு செல்வது வழக்கம். இதோ இன்று கல்லூரிப் படிப்பு முடித்து வேலைக்கும் செல்லத் தொடங்கிவிட்டாள் ஆனால் இந்தப் பழக்கம் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது.

உள்ளே சென்றவள் இன்றும் அந்தக் காட்சியைக் காணத்தவறவில்லை. படர்ந்து விரிந்த ஆலமரத்தின் ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த அந்த வயதான பெண்மணி வாசலைப் பார்த்தபடி இருந்தாள். அவள்மேல் ஒருவித இரக்கம் தோன்ற அவளருகே சென்றவள் "இன்றாவது என்னிடம் பேசுவீர்களா" என்றாள் சிறு புன்னகையோடு. அவள் பதிலேதும் பேசாது வாசலை நோக்கித் தலையைத் திருப்பிக் கொண்டாள்.

"அம்மா" என்று அழைத்தும் பயனில்லை. அவள் வாசலை வெறித்தபடி அமர்ந்திருந்தாள். பாவம் இவர், தன் பிள்ளைகள் யாரையேனும் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார் போலும் என எண்ணியபடி காப்பகத்திற்குள் சென்றாள்.

"வந்து விட்டாயா கண்ணு வா வா " என வரவேற்ற கண்ணகிப் பாட்டியைப் பார்த்துச் சிரித்தபடி உள்ளே சென்றவள் "என்ன பாட்டி ஒரே மகிழ்ச்சியாய் இருக்கின்றீர்கள்" என்று கேட்டாள். "நேற்று என் மகன் பேசினான். பெண் குழந்தை பிறந்துள்ளதாம்" என்றாள் பாட்டி. "ஓ அதுதான் மகிழ்ச்சியா, பாட்டி உங்களுக்கென்று ஒரு பேரப் பிள்ளை வந்ததும் என்னை மறந்துவிடாதீர்கள் சரியா" என்றாள்.

அடுத்த நொடி கண்ணகிப் பாட்டியின் முகம் மாறி விட்டது. " அட போ கண்ணு நீயாவது மாதத்திற்கு ஒரு தடவையோ இரண்டு தடவையோ வந்து செல்கின்றாய். அந்தக் குழந்தை கண்காணாத நாட்டில் இருக் கின்றது. இந்த உலகை விட்டுப் போவ தற்குள் ஒரு முறையாவது பார்ப்பேனா என்று தெரியவில்லை. இதில் நீ இப்படிக் கேட்கின்றாயே உன்னைப் போய் மறப் பேனா" என்று கண் கலங்கினாள்.
"பாட்டி இது என்ன பேச்சு இப்படி அழுவதானால்
இன்று உங்களுக்கு நான் புத்தகம் படித்துக் காட்டப் போவதில்லை போங்கள்" என்றாள் கோவப்படுவதுபோல.

"இல்லை கண்ணு நான் அழவில்லை.
அழுது மரத்துப் போன கட்டை,
இனிமேல் அழுது என்னவாகப்போகின்றது"
என்றாள்.


**வெற்றிமணிக்கு**
**புதிய அறிமுகம்**



**பொலிகையூர் ரேகா**

வல்வெட்டித்துறையிலிருக்கும் பொலிகண்டி என்னும் ஊரில் பிறந்து "பொலிகையூர்" ரேகாவாக இலக்கியவானில் பவனிவருகின்றார்.


கண்ணகிப் பாட்டி கடந்த ஐந்து ஆண்டுகளாக இங்குதான் உள்ளார். மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் படிக்க வைக்கும் ஆசையில் கடன்பட்டு அதை நிறைவேற்றிவிட்டுக் கணவன் இறந்துவிட தன் கல்விக்காகத் தந்தை பட்ட கடனை அடைக்கும் முயற்சியில் மகனும் வெளிநாட்டியே தங்கிவிட்டான். தனிமரமாகிப்போன பாட்டி உறவினர்களின் உதவியாளாக மாறிப்போனார்.

எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யும் பாட்டி நன்றாக இருக்கும் வரையில் எல்லோரும் பார்த்துக் கொண்டார்கள். ஒரு நாள் வீட்டின் குளியலறையில் விழுந்து இடுப்பில் பலத்த அடி விழுந்து இனிமேல் நடக்க முடியாது என்றாகிப்போக உறவுகள் எல்லாம் நலம் விசாரித்ததோடு ஒதுங்கிக்கொண்டன.
நேரில் வந்த மகன் ஆள் வைத்துப் பார்த்துக் கொள்ளலாம் என்று முடிவெடுத்து அதைச் செயலாக்கினால் வந்தவர்கள் சிலர் பார்த்துக்கொள்ளமுடியாதென ஒதுங்க, சிலர் தம் கைவரிசையைக் காட்டிச் செல்ல வேறு வழியின்றி இங்கு சேர்த்துவிட்டுத் தன் வெளிநாட்டு வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டான் அவன்.

சூழ்நிலைக் கைதியாய் இருந்த மகனைக் கண்ணகிப் பாட்டியும் இதுவரை குறை சொன்னதில்லை. கடன் கொடுத்த பின்பாவது இங்கு வந்து தாயைக் கவனித்துக்கொள்வான் என்ற நம்பிக்கையில் இருக்க் உடன் வேலை பார்க்கும் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு அங்கேயே தங்கிவிட்டான். கடமைக்கு ஓரிரு தடவை வந்து பார்த்துவிட்டுக் காப்பகத்திற்குப் பணம் அனுப்பிக்கொண்டிருக்கின்றான்.
கண்ணகிப் பாட்டியைப் போல இங்குள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு வலி நிறைந்த பின்புலம் உள்ளது. உறவினர்கள், பிள்ளைகள், அயலவர்கள் என யாரேனும் ஒருவர் கொண்டுவந்து சேர்த்தவர்களாகவோ அல்லது தாமாகவோ வந்து சேர்ந்தவர்களாக இருந்தனர்.
கண்ணகிப் பாட்டிக்கு புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த சங்கழகிப் பாட்டி "பாப்பா அந்தம்மாவின் பெயர் பொன்னுத்தாயி தெரியுமா" என்றாள்.
சங்கழகிப் பாட்டி கொஞ்சம் ஊர் வம்பு பேசுபவர். அந்தப் பழக்கம் வீட்டில் சிக்கலை ஏற்படுத்த வேறு வழியின்றி மகன் கொண்டு வந்து சேர்த்துவிட்டுப் போயிருந்தான். தாயைப் பார்க்க வந்து செல்லும்போதெல்லாம் மகன்தான் அழுதுகொண்டு செல்வான். பாட்டி இங்குள்ள சூழலுக்குப் பழகிப்போயிருந்தாள் ஆனால் அந்த வம்பு பேசும் பழக்கம் மட்டும் மாறவில்லை.

தொடர்ச்சி 26 ம் பக்கம்


**Easy Holiday**
**Travels & Tours**



உலகின் எப்பாகங்களுக்கும் சென்று வருவதற்கான விமான பயணச்சீட்டுகளை குறைந்த விலையில் நிறைந்த மனதுடன் தருகின்றோம்

தொடர்புகளுக்கு: Thureiraj Rukshan


2020
Juni - August
கோடைகால
மலிவு விற்பனை

தாய்நாடு Sri Lanka சென்று உங்கள் விடுமுறையை சந்தோசமாக கழிக்க நாம் வழங்கும் ஓர் இனிய வாய்ப்பு!!!
இதோ விமான பயணச்சீட்டுக்கள்
Only ab 499 Euro!!!

எம் மக்களின் அபிமானம் வென்ற
**Easy Holiday**
**Travels & Tours**
தாய்நாடு சென்றுவர மலிவு விலையில்

- விமானச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதிகள்
- வாகன வசதிகள்
- வீசா உதவிகள் (இந்தியா இலங்கை)
- ஹோட்டல் வசதிகள்

Westring 36
44623 Herne
Germany



Mob:0152 1365 4331 - 0152 04153138
Tel:02323 965 4426 Fax:02323 9654427
e.mail: ezholiday16@gmail.com

# பழமை பேசுதல் சுகம்தருமா பயன் தருமா ?

முதுமை என்பது நமது வாழ்க்கைப் பாதையிலும் காத்திருக்கும்.




சேவியர்



ஒருவனுக்குக் காதல் தோல்வி ! சில ஆண்டுகள் திகட்டத் திகட்டக் காதலித்து விட்டு, வழக்கம் போல தாடியைத் தடவியபடி ஓரமாய் உட்கார வேண்டிய காலம். உட்கார்ந்து உட்கார்ந்து தாடியும் நரைத்துப் போய், கால்களும் மரத்துப் போயிருக்கும் காலத்தில் அவனுடைய கண்ணுக்கு முன்னால் கலியுகக் காதலர்கள் பறந்து திரிகின்றனர். இந்தக் காலத்துக் காதல் புனிதமானது. அது தீண்டாமைக் கொடுமைகளைக் கடந்தது. அது பழைய காதலனுக்குப் புரிவதில்லை.

எங்க காலத்துல காதல்ன்னா எப்படி தெரியுமா ? என பேச ஆரம்பிப்பார். அப்போதெல்லாம் சன்னல் வழியே தான் கண்கள் பேசிக்கொள்ளும் என்பார். உடனே இளசு ஒன்று, இப்பவும் அப்டித்தான்.. "வின்டோஸ்" வழியே விழிகள் பேசிக்கொள்கிறது என்பார். அப்போதெல்லாம் நாங்க தொட்டுப் பேசறது கூட கிடையாது, என்பார் அவர். அப்பல்லாம் நீங்க பேசறதே இல்லை அப்புறம் என்ன தொட்டுப் பேசறது என்பார் இவர்.

அந்தக் காலத்துல காதல் புனிதமானது என்பார் பழையவர். புனிதமானது எல்லாம் கோயில்ல இருக்கணும், காதல்ல எதுக்கு இருக்கு என்பார் இளையவர். காதலி எழுதற எழுத்துப் பிழையே அழகானதுப்பா என்பார் பழையவர். வீடியோ கால் காலத்துல எதுக்கு எழுத்தும், பிழையும் என்பார் இளையவர். ஒருத்தி கிட்டே மனசைக் கொடுக்கிறது தான் எங்க காலக் காதல் என்பார் அவர். மனசென்ன கடலை மிட்டாயா குடுத்ததும் தீர்ந்து போக என நக்கலடிப்பார் இவர்.

காலங்களின் இடைவெளி எப்போதுமே உரசிக் கொண்டே தான் இருக்கும். இது இன்று நேற்று நடந்ததல்ல. தலை முறை தலைமுறையாக, முந்தைய தலைமுறையைப் பற்றிய புகழ் பாக்கள் ஒலித்துக் கொண்டே தான் இருக்கின்றன. "நான் காதலில் கசிந்துருகினேன்" என ஒருவர் சொல்வதில் அப்படியே உண்மை இருக்க வேண்டுமென்பதில்லை. அவர் காதலில் அடிபட்டு, மிதிபட்டு, விரட்டப்பட்டு, தோற்றுப் போனவராகவும் இருப்பார். தோற்றுப் போன நினைவுகளை மாற்றி, தேற்றிக் கொள்ளும் நினைவுகளுக்காக தனது கனவுக் கதவைத் திறந்து அவர் சுகமான நினைவுகளை உருவாக்குகிறார்.

நாம் பனங்காயில் வண்டி செய்து ஓட்டிய நினைவுகளை பிள்ளைகளிடம் பகிர்ந்து கொள்கிறோம். பிள்ளைகள் நாளை ஃபோர்ட்நைட் வீடியோ கேம் விளையாடுவதைப் பற்றி அடுத்த தலைமுறையிடம் சொல்வார்கள். அவர்கள் விர்ச்சுவல் விளையாட்டுகளின் உயர்நிலை பற்றி தொடரும் தலைமுறைக்குப் பகிர்ந்து கொள்வார்கள். இது ஒரு வாழையடிப் பாதைப் பயணம். தவிர்க்க முடியாத யதார்த்தம்.

காலங்களின் நெடுவீதியைக் கடந்து வந்தவர்கள் தங்களுடைய பயணத்தின் வழியில் தொலைத்தவை ஏராளம் ஏராளம். பால்யத்தின் பரவச நினைவுகள். இளங்காதலின் நிராகரிப்பு நிமிடங்கள். பெற்றோரின் அரவணைப்புக் கணங்கள். நண்பர்களின் குதூகலத் தருணங்கள். கனவுகளின் மகரந்தச் சேர்க்கைகள். என அவர்கள் தொலைத்தவை ஏராளம் ஏராளம். மறைந்து போன மனிதர்களை நேரில் சந்திக்க முடியாதபோது அவர்கள் நினைவுகளின் வழியே கைகுலுக்கிக் கொள்கின்றனர். தொலைந்து போன வருடங்களை மீண்டும் சந்திக்க முடியாதபோது அவர்கள் அந்த ஞாபகங்களின் ஒலியை மறு ஒலிபரப்பு செய்கின்றனர்.

இது ஒரு வகையில் உளவியல் ஆறுதல். என் காலத்தில் எல்லாம் நன்றாக இருந்தது எனும் நம்பிக்கையின் வருடல் அவர்களுக்கு வெப்பத்தின் கணங்களை விட்டு வெளியேற துணை செய்கின்றன. அதனால் தான் பெரியவர்கள் ஆக ஆக அவர்களுடைய பழங்கதைகளின் பகிர்தல் அதிகமாகிக் கொண்டே போகிறது. முதுமை நம்மை உணர்வுகளோடு நெருக்கமாக்கி, உணவுகளிலிருந்து பிரித்தெடுக்கிறது. முதுமை நம்மை உறவுகளோடு இறுக்கமாக்கி, செல்வங்களிலிருந்து விலக்கி வைக்கிறது. அதனால் தான் மனதின் காயங்களுக்கு பழங்கதைகள் மயில்பீலிச் சாமரம் வீசுகின்றன.

அவர்களுடைய காலத்துக்கு ஒரு டைம் மெஷின் மூலம் போய்ப் பார்த்தால் அவர்கள் பட்ட கஷ்டங்களும், அவமானங்களும் வண்டி வண்டியாக கொட்டிக் கிடப்பதைப் பார்க்கலாம். அந்த எதிர்மறை வலிகளையெல்லாம் விலக்கிவிட்டு அவர்கள் பழைய காலத்தின் பாசிடிவ் சிந்தனைகளில் சிக்கிக் கொள்வதன் காரணம் அவர்கள் விரும்பிய வகையில் தங்கள் பால்யத்தை சிந்தனைகளில் நட்டு வைப்பதே. காலப்போக்கில் அவர்களுடைய எதிர் மறை சிந்தனைகள் விலகிப் போவதை பேடிங் அஃபக்ட் பயஸ்" என உளவியலார்கள் கூறுவார்கள்.

பழைய காலத்தில் நம்மை வார்தெடுத்த வலிகளும், நம்மை துவைத்தெடுத்த தோல்விகளும் மறைந்து போக, பழைய காலத்தின் இனிய நினைவுகள் மட்டுமே இதயத்தின் வடிகட்டியில் ஒரு வாசனை திரவியமாய் தங்கி விடுகிறது. அது தான் பெரியவர்களின் பேச்சுகளிலிருந்து சிரிப்பும், சிலிர்ப்புமாய் புறப்படுகிறது.

பழைய நினைவுகளைப் பகிரப் பகிர அவை மீண்டும் மீண்டும் மனதில் வலுவடைகின்றன. "அவ சந்திரமுகியா நின்னா, சந்திரமுகியா நடந்தா, சந்திரமுகியைப் பேசினா, சந்திரமுகியாவே மாறிப் போயிட்டா" மாதிரி, பழைய காலத்தை பாசிடிவ் ஆகப் பேசிப் பேசி அதையே உண்மையென மனம் நம்பி அதில் லயிக்க ஆரம்பித்து விடுகிறது.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



# பழமை பேசுதல் சுகம்தருமா பயன் தருமா ?



யாராவது உங்களிடம் அப்படிக் கதைகள் பேசினால் அவர்களருகில் அமர்ந்து அவர்களுடைய பால்யத்தின் கதைகளைக் கேளுங்கள். குறிப்பாக முதியவர்கள் அத்தகைய கதைகளைப் பேசினால், விழிகளில் வியப்பும், இதயத்தில் ரசிப்புமாக அவர்களுடைய கதைகளைக் கேளுங்கள். அதை சிலாகியுங்கள். அதை வியந்து பேசுங்கள். இவையெல்லாம் அந்த முதியவர்களின் மனதில் சொல்லொண்ணா ஆறுதலை மழைபோல இறக்கும். அவர்களுடைய வெறுமையான பொழுதுகள் மகிழ்வினால் நிரப்பப்படும்.

”பழைய கதையைப் பேசாதீங்க” என உதாசீனப்படுத்தும் ஒவ்வொரு கணமும் நாம் அவர்களை காயப்படுத்துகிறோம். அவர்களுடைய அழகிய ஓவியத்தில் கரியைப் பூசுகின்றோம். அது அவர்களுடைய மெல்லிய மனதில் கீறல்களை உருவாக்கி விடுகிறது. அவர்களுடைய உணர்வுகளின் வாய்க்கால்களில் பாறைகளைப் புரட்டி வைக்கிறது. அதற்குப் பதிலாக, ”உங்க பால்யத்துல வாழாம போயிட்டேனே” எனும் ஏக்கத்தைப் பதிவு செய்யுங்கள். அவர்களுடைய சிந்தனை வயல்களெங்கும் சிரிப்புகள் விளையும்.

பழங்கதைகள் பேசுவோர் நிகழ்கால யதார்த்தத்தை உதறிவிட்டு தன்னைச் சுற்றிய மனிதர்கள் அனைவரும் கடந்த காலத்தில் தான் வேர்களைப் பதிக்க வேண்டும் என நினைக்கும் போது தான் பிரச்சினை உருவாகிறது. நான் இப்படி இருந்தேன், எனவே நீயும் அப்படித் தான் இருக்க வேண்டும். எனது பால்யம் இப்படி இருந்தது எனவே உனது பால்யமும் இப்படித் தான் இருக்க வேண்டும். எனது வாழ்க்கையில் நான் இத்தகைய முடிவுகளைத் தான் எடுத்தேன், நீங்களும் இத்தகைய முடிவுகளைத் தான் எடுக்க வேண்டும் என கடந்த காலத்தின் சாவிகளால் நிகழ்காலத்தைப் பூட்ட நினைக்கும் போது தான் சிக்கல்கள் உருவாகின்றன.

உலகம் மோசமான நிலையை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாக உலகின் 70% மக்கள் நம்புகிறார்கள். அதிலும் குறிப்பாக தங்களுடைய வாழ்க்கையே மோசமாகப் போவதாக 55 சதவீதம் மக்கள் நம்புகின்றனர். அந்த நம்பிக்கை தான் அவர்களை பழைய காலத்தின் இடுக்குகளில் இளைப்பாற வைக்கின்றன. அதனால் தான் பழசைத் தாண்டிய விஷயங்களெல்லாம் தவறு எனும் சிந்தனை அவர்களிடம் முளைக்கிறது. அந்த சிந்தனையை ஊக்குவிப்பது போல பெண்களுக்கும், இளையவர்க்கும் எதிரான வன்முறைகளும், சமூக அவலங்களும் அவர்களை அலட்டுகின்றன.

குறிப்பாக தொழில்நுட்பத்தின் வளர்ச்சி எல்லோர் கைகளிலும் ஆறாவது விரலாக ஒரு ஸ்மார்ட்போனை புதைத்து வைத்திருக்கிறது. அதை அனிச்சைச் செயலாகத் தடவிப் பார்ப்பதை தவறாமல் செய்கிறது இன்றைய தலைமுறை. தொழில்நுட்பம் கொண்டு வந்திருக்கும் வாழ்வியல் மாற்றங்கள் எக்கச்சக்கம். அவற்றையெல்லாம் ஒற்றை உதறலில் அகற்ற நினைப்பது நடக்காத காரியம்.



கடந்த தலைமுறைக்குத் தவறிழைக்கக் கிடைத்த வாய்ப்புகளை விட, இன்றைய சிறுவர்களுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கிறது. தலையில் துண்டு போட்டு காலைக்காட்சியில் ரகசியப் படம் பார்த்த கதைகளெல்லாம் வரலாறாகிவிட்டன. இப்போது விரல்நுனியில் விரசம் அவர்களுக்கு டிஜிடல் வடிவில் கிடைக்கிறது. இந்த சூழலில் அவர்கள் இதயத்தில் மனிதத்தையும், உடலில் புனிதத்தையும் காக்க நாம் என்ன செய்ய வேண்டும் என யோசிக்க வேண்டும். நான் அப்படி இருந்தேன் என்பதெல்லாம் இங்கே பயனளிக்காது.

எனது தோட்டத்தில் இப்படிப் பூக்கள் விளைந்தன, அதை இப்படிப் பராமரித்தேன். உனது தோட்டத்தில் பூக்கள் விளைவிப்பதும், களைகள் விளைவிப்பதும் உனது விருப்பத்தைப் பொறுத்தது. நான் என் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறேன் எனுமளவில் இந்தப் பகிர்தல் இருக்கும் போது எல்லம் இனிமையாகிறது.



பழங்கதைகள் பேசுவோரின் உணர்வுகளை மதிப்போம். ஏனெனில் அவர்களது களங்கமற்ற வாழ்க்கையின் அடையாளம் அங்கே தான் நிரம்பியிருக்கிறது. அவர்களின் முதுமை நாட்களில் அவர்களின் இதயம் மகிழ்வில் திளைக்க உதவுவோம். ஏனெனில், முதுமை என்பது நமது வாழ்க்கைப் பாதையிலும் காத்திருக்கும்.






# சிறுநீர் மகத்துவம் பற்றி கரைத்துக் குடித்தவர்

பத்திரிகைத்துறையில் எனது முதலாவது பேட்டிக்காக ஒரு தட்டிப்படலையை திறந்தேன். தாம்பூலத் தட்டம் என்னை மங்களகரமாய் வரவேற்றது.
நான் சந்திக்கச் சென்றவர் ஒரு பிரமுகரல்ல.பிரசித்தமானவருமல்ல. அதனால் நேர முன் அனுமதி கோரியிருக்கவில்லை. எனினும் வீட்டில் இருப்பாரா செவ்விக்குச்சம்மதிப்பாரா என்ற மயக்கம் என்னிடம் இருக்கவில்லை.
வாழ்வில் அவர் சாதனை படைக்கவில்லை. ஆனால் வாழ்வே அவருக்குச் சாதனையானது. அவரை கண்டேன். அவருக்கு வயது நூறு. நாணத்துடன் சிரித்தார். சோர்வையும் தளர்ச்சியையும் முதுமை அவருக்குஅளிக்கவில்லை. செய்யாத வைத்தியமில்லை காட்டாத மருத்துவரில்லை என்ற சித்தாந்தம் அவருக்குத் தெரியாததும் தேவையற்றதும் என்பதை பார்த்த மாத்திரத்திலேயே கணிக்க வைத்தார்.

முழு பாக்கு ஒன்றை லாவகமாக அவரது பற்களால் அரைக்க முடிந்தது. பாட்டிக்கு எழுத படிக்க தெரியவில்லை. ஆனால் உயிர் வாழும் மந்திரத்தை உயிர் எழுத்து வரிசைப்படி சொன்னார் பாருங்கோ
அது ! அது ! அது ! எனது நெஞ்சை தொட்டு இன்னமும் என்னுள் உயிர் வாழ்கின்றது.

அகத்தை சீரகத்தால் சீராட்டு.
ஆறாவது நாளெல்லாம் பசித்திரு.
இஞ்சி தின்று நஞ்சினைப்போக்கு.
ஈயாடாத சூடான உணவெடு.
உள்ள மட்டும் தேனைக்குடி.
ஊரின் உறவில் உறுதி பேண்.
எழுந்த பின்பு சூரியனை எழுப்பு.
ஏறு முகத்தில் எல்லாம் நினை.
ஐம்புலனுக்கும் பயிற்சி கொடு.
ஒரு திங்களாவது கூடி சிரி.
ஓய்வு நேரத்தை குடும்பத்துக்காக்கு.
ஔதடமே லங்கணமாக்கு.


மொராஜி தேசாய்

இவ்விதம் - சாமானியரான பாட்டி பதில்களால் சாணக்கியரானது நெஞ்சைத் தொட்டது. மொராஜி தேசாய் இந்திய பிரதமராக இருந்தபோது ஒரு தடவை இங்கிலாந்துக்கு வருகை தந்திருந்தார்.
அவரிடம் பேட்டி எடுப்பதற்கு அனுமதியும் அவகாசமும் கோரியதே ஒரு பேட்டியாகவும் போட்டியாகவும் அமைந்தது. பிரதமரை சந்திக்கப்போகின்றேன் என்ற பரவசம் மனதில் நிரம்பியது. ஆடை பாதி ஆள் பாதி என்பது நினைவுக்கு வந்தது. புது சூட் வாங்கினேன். ஆளுமை பாதி என்ற பின் பாதி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இந்தியா பற்றியும் தேசாய் பற்றியும் ஜனதாகட்சி பற்றியும் அயல் நாடுகளில் இந்தியா விரும்பும் ஆதிக்கம் பற்றியும் கேள்விகளை நன்கு ஆராய்து தயாரித்தேன். பிரிட்டிஷ் நூலகத்திலும் இந்திய தூதரக நூலகத்திலும் இதற்காகவே ஒரு வாரத்தை பயன் படுத்தியிருந்தேன்.

மூளையுள்ள முட்டாள்களுக்கு மட்டுமே தயாரிப்பற்ற கேள்விகள் இலகு என்பது வேறுகதை.பாகிஸ்தான் பற்றியும் சீனா பற்றியும் சொல்ல விரும்பவில்லை என்றார். தென் இந்தியா பற்றி சொல்ல எதுவும் இல்லை என்றார்.
மலரும் தமிழீழும் பற்றி எதனையும் சொல்லத் தெரியாது என்றார். அணு ஆயுத உற்பத்தி கங்கை நதி இணைப்பு போன்றனவற்றிக்கு பதில் சொல்ல முடியாது என்றார். மேலும் பல கேள்விகளுக்கு யெஸ் நோ என ஒற்றைச் சொல்லில் பதிலளித்தார். காத்திரமான பதில்களுக்காக காத்திருந்த எனக்கு ஆத்திரம் இதயமூலையில் கொப்பளித்தது.
அவர் மூத்திரம் குடிப்பது நினைவில் வர சற்று சங்கடத்துடன் அது பற்றிக் கேட்க வேண்டும் என்ற முட்டு முடுக்கியது. எவ்வித ஆசூசமோ அசௌகரியமோ இல்லாமல் சிறுநீர் மகாத்மியம் பற்றி சுமார் இருபது நிமிடத்திற்கு பொழிந்து தள்ளினார் பிரதமர்.

ஏழு வெற்றுப் போத்தல்களை முதலில் எடுக்க வேண்டுமாம். தினமும் அதிகாலையில் ஒன்றின் பின் ஒன்றாக அவற்றை சிறு நீரால் நிரப்ப வேண்டுமாம். முதலில் வரும் சிறுநீரையும் இறுதியாக வரும் சிறுநீரையும் போத்தலினுள் விடாது தவிர்த்து இடையில் உள்ளதையே போத்தலில் அடைக்க வேண்டும் என்ற நிபந்தனை வேறு. ஏழு போத்தல்களும் ஏழு நாட்களில் நிரப்பப்பட்ட பின்னர் அது தேனாமிர்தமாகி ஷியாம்பு கல்பம் எனும் பெயர் பெற்று சகல ரோக நிவாரணியாகிவிடும் என்றார். முதலாவதாக நிரப்பப்பட்ட போத்தலை எட்டாவது நாள் பருகவேண்டும்.
முறையே அடுத்த அடுத்த போத்தல்களும் காலிசெய்தலும் நிரப்பலும் பருகலும் மீண்டும் மீண்டும் தொடர வேண்டும். யூரின் தெரபி செய்யும் போது தண்ணீரோ வேறு எந்தவிதமான பானங்களோ பருகக்கூடாதாம்.

பிரதமரின் பிரதான பிரமாத பதிலில் இது ஒரு சொட்டு.
இவ்விதம் -சாணக்கியரான பாட்டன் பதில்களால் சாமானியரானது நெஞ்சைச் சுட்டது. இதைத் தவிர தற்பொழுதெல்லாம் முட்டாள்தனமாக நடந்துகொள்கின்றேனா என்று அடிக்கடி பரிசோதனை செய்துகொள்ளும் புத்திசாலித்தனம் நெஞ்சைத் தொடுகின்றது. புத்திசாலிதான் என்று அவ்வப்போது முடிவே செய்துகொள்ளும் முட்டாள்தனம் நெஞ்சைச் சுடுகின்றது.

**இளவாலை எஸ்.ஜெகதீசன்.**













# சோஸ்ற் தமிழ்க் கல்வி கலாசார அமைப்பின் கலைவிழாவும், கண்காட்சியும்

சோஸ்ற் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பு 26.10.2019 அன்று மாணவ மாணவிகளின் கலைநிகழ்வுகளோடும், தாயகத்தை நினைவூட்டும் அரும் கண்காட்சியையும் திரு திருமதி தெய்வேந்திரம் இந்து தலைமையில் நடாத்தியிருந்தார்கள். மங்கள விளக்கேற்றல் அகவணக்கத்துடன் திரு தெய்வேந்திரன் திருவள்ளுவருக்கு மாலை அணிவித்து கடவுள்வாழ்த்து பாடலோடு நிகழ்சிகள் ஆரம்பமாகின. கம் காமாட்சிஅம்பாள் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ஆறுமுகம் பாஸ்கரகுருக்கள் ஆசியுரை வழங்கினார்.சோஸ்ற் நகர மேயர் திருமதி மக்கிங்சன் கலை நிகழ்வுகளையும், கண்காட்சியையும் பராட்டி வாழ்தினர். தொடர்ந்து வெற்றிமணி சிவத்தமிழ் ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் இவர்களது 27 ஆண்டுகால சேவையை பராட்டி வாழ்த்தினர். இடையிடையே எஸ்சன் நுன்கலைக்கல்லூரி அதிபர் திரு. நயினைவிஜயன் பண்ணாகம்.கொம் திரு கிருஸ்ணமூர்த்தி,தமிழர்அரங்கம் உரிமையாளர் திரு சபேசன் இவர்களுடன் பல ஜேர்மானிய பிரமுகர்களின் சிறப்புரை விழாவுக்கு சிறப்புச் சேர்த்தது. பாடசாலை மாணவர்களோடு, பலவெளி நகர கலைஞர்கள் விழாவைச் சிறப்பித்திருந்தார்கள்.பரதம், வீணை, இசைநடனங்கள், கரகம், காவடி மயில்நடனத்துடன் கடவுளும், மனிதனும் என்ற வில்லுப்பாட்டும், சிறப்புபட்டிமன்றம் திரு சபேசன் நடுவராக திரு பொ.பரமேஸ் திருமதி துரையரங்கன்,திரு கிருஸ்ணமூர்த்தி திருமதி நயினைவிஜயன்,பங்கேற்றனர். நிகழ்வுகள் யாவும் சிறப்பாக அமைந்திருந்தன.






# குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை!



குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்கிற பழமொழி கூறுவது உண்மை அல்லவா!

அதாவது இப்பழமொழியின் விளக்கம்: ஒவ்வொருவரும் செய்யும் வேலைகளில் நாம் குற்றம் கண்டு பிடித்துக்கொண்டு பிழை கூறிக் கொண்டே இருந்தால் எங்களைச் சுற்றி ஒருவருமே இருக்கமாட்டார்கள். விட்டுப் போய் விடுவார்கள். ஆகவே ஒருவர் செய்கின்ற சிறிய தவறுகளை அதாவது குற்றங்களை பெரிது படுத்தாமல் சில சகிப்புத்தன்மையுடன் நாம் அனைவரும் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். இப்படி வாழ்வோமேயானால் எங்களது வாழ்வு வண்ணமயமாக இருக்கும். முக்கியமாக சகிப்புத்தன்மையிலும் மற்றும் விட்டுக்கொடுப்பிலும் வாழ்க்கை அழகாக அமையும் அல்லவா? குற்றம் கண்டு பிடிப்பதை விட விட்டுக் கொடுப்பது அழகானது!

குற்றம் கண்டு பிடிப்பவர்களின் வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கும். இவர்களைத் திருப்தி படுத்துவது இலகுவான விடயமல்ல. மற்றும் குற்றம் கண்டு பிடிப்பவர்கள் பல பிரச்சினைகளுக்குள் மூழ்கி விடுகிறார்கள். அவர்களால் மீண்டு வரமுடியாத நிலை மிகவும் கவலைக்குரிய விடயம்.

சில உதாரணங்களைப் பார்ப்போம்:



றஜினா தருமராஜா

ஒரு தொழிலாளி தனது வேலைகளை ஒழுங்காக செய்து கொண்டு வருகிறார். ஆனால் அவரின் முதலாளி அவர் செய்யும் அனைத்திலும் குற்றம் கண்டு பிடிக்கிறார். அத்தொழிலாளி விருப்பமின்றி தானே வேலைக்கு வருகின்றார். சிலர் இதனாலேயே மன நோயினால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இம்முதலாளியுடன் எவருமே வேலை செய்ய மாட்டார்கள். இம்முதலாளி எவருமே இல்லா மல் தனிமரமாகத் தான் வேலை செய்வார்.
அடுத்ததாக ஒரு குடும்பத்தில் வாழும் கணவரும் மனைவியும் குற்றம் கண்டு பிடித்துக் கொண்டு இருந்தால் வாழ்க்கை நன்றாக இருக்குமா? இல்லை அல்லவா?
மனைவி சமைக்கும் அனைத்து உணவு வகைகள் சரி இல்லை சுவையாக இல்லை என்று கணவன் குற்றம் கண்டு பிடித்தால் மனைவி விருப்பமின்றி அல்லவா சமைப்பார்! கொஞ்சம் சகிப்புத்தன்மை இருந்தால் மனைவியிடம் நன்றாக சமைத்தாய் எனக் கூறி வாழ்க்கையை அழகாக்குங்கள். அதே போல் கணவன் மனைவிக்கு அன்பளிப்பு அதாவது சேலை போன்றவை வாங்கி வருகிறார். சேலையின் அழகு முக்கியம் அல்ல. கணவன் அன்பளித்த செயலே முக்கியமானது.




ஆகவே குற்றம் கண்டு பிடிக்காமல் மனைவி என்பவர் மகிழ்ச்சி அடைந்து வாழப் பழக வேண்டும்.

குற்றம் கண்டு பிடிப்பவர்களே குற்றவாளிகள். குற்றம் என்பதனை முதலில் உங்களிடம் தேடிக் கொள்ளுங்கள். நீங்கள் குற்றம் கண்டு பிடிக்க நினைத்தால் ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.
எதிர் பக்கம் நிற்பவர்களின் மனநிலையை உணர்ந்து புரிந்து கொள்ளுங்கள். குற்றம் என்பதனை அகற்றி விட்டுவிட்டு மனதினை சுற்றத்திற்காகச் சுத்தம் ஆக்கிக் கொள்ளுங்கள்!




# இனிமேல் நான் நயந்தாரவின் விசிறி அல்ல



ராம் பரமானந்தன்



கிராமத்து அழகியாக வந்து பட்டினத்துத் தாரகையான நயந்தாரவின் மாற்றம், பல தமிழ் நடிகைகளின் வரலாற்றை ஒத்தது. இருந்தும் இவரது தனிப்பட்ட சர்ச்சைகள், அதற்குள் குறிப்பிட்ட நடிகர் நடன-இயக்குனருடன் காதல்தொடர்பு, அவரது பெயரைப் பச்சைகுத்தி, மாதத்திற்கொரு மதம் மாறி, நினைத்ததைப் பேசியும், நினைத்துப் பேசாமல் விடும் நயன்தாராவின் சுபாவம் என்னை ஒரு வகையில் தட்டியது. சில்க் சுமிதா காலத்தில் இருந்து, நினைத்ததைச் செய்வதுபோல் தெரியும் நடிகைகளைக் காணாத எமக்கு, நயன்தாரா ஒரு மாற்றமாக வந்தார். நிச்சயமாக நயன்தாராவின் அழகிற்கு ஈடு இல்லை, ஹம்சத்வனி ராகத்தில் வரும் இவரது நகைக்கடை விளம்பரம் வந்தால், இருந்து பார்த்து முடித்து எழும்பிச் செல்லும் பலரில் நானும் ஒருவன். “அறம்” “இருமகன்” திரைப்படங்களின் பின், பெண்களுக்கு முக்கிய இடம் கொடுத்த திரைப்படங்களினால் நான் நயந்தார விசிறி ஆனேன். கனமான கதாபாத்திரங்களை இவர் நெறியாள்வதை நான் கண்டேன். முக்கியமாக உண்மைக்குரலில் பேசியது அருகிப்போன நடிப்புத்திறனாக ஏற்றுக்கொண்டே கவர்ச்சியைக் குறைத்து அர்த்தங்களைக் கூட்டிய நயன்தாரா, “கோலமாவு கோகிலா” திரைப்படத்தினூடாக நாம் அனைவரும் எதிர்பார்த்திருந்த பெண்ணிய action-comedy யை வழங்கினார்.

இருந்தும் அண்மைய காலத்தில் நயனின் திரைப்படங்களைப் பார்ப்பதை நான் நிறுத்திவிட்டேன். ஏனெனில், இங்கே ஐரா படத்தின் Trailer பார்த்ததும் நயந்தாரா இதில் இரட்டைவேடம் நடித்திருக்கிறார் என புரிந்துகொண்டேன். ஒரு வேடத்தில் மேற்கத்தேய உடைகளையும் நவீன சுபாவத்தையும் கொண்டவராகவும், இன்னொரு வேடத்தில், கிராமத்துத் தோற்றதுடனும் இருந்தார். இவரது வேடம், முக்கியமாக கிராமத்து நயன்தாராவின் மேனி இருட்டானதாகத் தெரிந்தது. நவீன ஊடக விழுமியங்களில் கருமையான மேனி கொண்டவர்களாக வேடம் போடுவது கடுங்குற்றம். அதை எங்களது நயன்தாரா செய்திருப்பாரா என்ற கேள்வி எனக்குள் எழும்பப் படத்தின் சுவரொட்டியை Google செய்து பார்த்தேன், அங்கே இரு நயன்தாராக்களில் ஒருவர் கறுத்த மேனி வேடம் போட்டிருந்தார். ஐரா படத்தில் யமுனா (நயன்தாராவின் முதற் கதாபாத்திரம்) என்கிற ஒரு இளம்பெண் பவானி என்னும் பேயைச் சந்திக்கிறார். பவானியின் வாழ்க்கை பரிதாபங்களின் சங்கமம். பவானி பிறந்ததும், அவரது அப்பா மீண்டும் ஒரு பெண்குழந்தையை ஈன்றதை நினைத்து அழுகிறார். அந்தத் தந்தை இறக்க, ஊர்மக்கள் பவானியின் விதியினால் தான் அவர் இறந்ததாகச் சொல்கிறார்கள். (சின்ன வயது பவானியாக நடிகை கறுப்பழகி Gabrella வருகிறார்) இவரைத் திருமணம் பேச வருபவர்கள் அனைவரும், அவள் கறுப்பாக இருப்பதையும், ராசியில்லாமல் இருப்பதையும், சுட்டிக்காட்டி மறுத்துச் செல்கின்றனர். (வயது வந்த பவானியாக நயன்தாரா நடிக்கிறார்). அவள் தன்னைத்தானே கண்ணாடிமுன் நின்று தாழ்த்திப் பேசுகிறாள். பவானியின் அத்தான் அவரை பாலியல் பலாத்காரம் செய்யப் போனதை அக்கா விடமும், தாயிடமும் சொல்ல அவர்கள் மருமகனை நம்பி பாவானியை வீட்டை விட்டு துரத்துகின்றனர். பவானி பட்டினத்திற்கு வந்து கூலி வேலைகளைச் செய்து பிழைக்கிறார். கூலி வேலை செய்யும் போதும் பவானி சித்திரவதைகளை சந்திக்க ஓரிடத்தில் தனது இளமைக்காலத்து காதலன் அமுதனைக் கண்டு, இருவரும் மணம் புரிய சம்மதிக்கின்றனர். தனது கல்யாணத்திற்கு தயாராகிச் செல்லும் பவானி, யமுனாவின் துடுக்குத்தனத்தால் ஆரம்பித்த ஒரு விபத்தினால் இறக்கிறார். திரைப்படத்தின் பொறியியல் ஒகேயாக இருந்தாலும், கதையின் முடிவு வித்தையானதாக இல்லை. எனது ஆய்விற்கு முடிவு முக்கியமானதுமல்ல.

@karupazhahi_gabrella_official என்கிற Instagram முகவரியினூடாக Gabrella என்னும் இளம் நடிகை கறுப்பு மேனி அழகானது எனவும், அதை பழிக்கக்கூடாது எனவும் பறைசாற்றுகிறார். சிறிய காணொளிகள் மூலம் தனது நடிப்புத்திறனை சர்ச்சையான விடையங்களை நடித்துக்காட்டி வெளிப்படுத்துகிறார். இந்தியா முழுவதும் இவரது திறமையை சிறப்பிக்கிறது. இருந்தும் ஐரா இயக்குனர் சர்ஜுன் Gabrella வை பவானியெனும் பரிதாபமான பெண்ணாகவே நெறியாள விட்டுருக்கிறார். Gabrella வின் அழகான, சராசரி தமிழ்ப்பெண்ணின் தோற்றங்கள் சிறப்பிக்கப்படாமல், துரதிஷ்டமான வாழ்வின் அடையாளமாக காட்டப்பட்டன.



அதைவிட, வயதுவந்த பவானியாக நயன்தாரா நடித்ததினால், வருங் காலத்தின் முக்கிய நடிகை ஒருவரின் Screen Time தேவையின்றி குறைக்கப்பட்டதுபோல் எனது உணர்வு. என்றுமே அனுகூலங்கள் நிறைந்தவர்கள் வென்று செல்ல, ஏனையோர் பாதாளமே முடிவென இருப்பது ஐரா படத்தின் முடிவெடுப்புகளிலும் தெரிகிறது. கப்ரெல்லாவின் விசிறிகள் நயன் தாராவின் விசிறிகள் படத்தை பார்க்கவேண்டும் என்னும் திட்டம் இங்கே வெளிவருகிறது. தமிழ் மக்களிடையே கறுப்பு மேனி அழகில்லை என்பது யதார்த்தம். வெள்ளையாவதற்கு எது உண்ணவேண்டும், எதைப் பூசவேண்டும் என்பதை, இளையவர்களிடம் இன்னும் எடுத்துரைக்கின்றனர்.

தொடர்ச்சி 39 ம் பக்கம்



# திருக்குறள் காட்டும் காதல்!

இரா.சம்பந்தன்





திருக்குறளிலே இந்தக் காட்சி வருகின்றது. அவர்கள் நீண்ட காலம் காதலித்து மணந்து கொண்டவர்கள். பணம் படைத்தவர்களும் அல்ல. உழவு அவர்களின் தொழில். அவன் மீது அவளும் அவள் மீது அவனும் மிகுந்த அன்புடையவர்கள். அன்று வயல் வேலைகளை முடித்துக் கொண்டு அவன் வீடு வருகின்றான். வீட்டு வேலைகளை முடித்துக் கொண்டு அவளும் அவனை எதிர் கொள்கின்றாள்.

அவள் முகத்திலே வழமையான சிரிப்பு இல்லை. எதுவும் பேசாமல் உணவு பரிமாறுகிறாள். அவன் உண்டபின் விளக்கை அணைக்காமலேயே பாயில் சரிந்து விடுகிறாள் அவள். அவள் மனத்தில் ஏதோ கோபம் இருக்கின்றது என்று தெரிகின்றது அவனுக்கு. ஆனால் அது எதற்காக என்று அவனுக்கு விளங்கவில்லை.

மெதுவாக அவள் பாதங்களைத் தொட்டான் அவன். துள்ளி எழுந்தவள் கால்களை இழுத்துக் கொண்டு அவனை நேரே பார்த்தாள். இப்போது அவள் கண்களில் முத்து முத்தாகக் கண்ணீர் அரும்பி முத்துக் கட்டியிருந்தது.. துடித்துப் போனான் அவன். ஏன் ஏனென்று கைகளைப் பற்றிக் கொண்டு கேட்டான்.

காலையிலே வயலுக்குப் போகும் போது என்ன சொல்லிவிட்டுப் போனாய்? இந்தப் பிறப்பிலே என்னை விட்டுப் பிரிய மாட்டேன் என்று சொன்னாயா இல்லையா? என்றாள் அவள்.

இப்பவும் தான் சொல்கின்றேன் இந்தப் பிறப்பிலே உன்னை விட்டுப் பிரியமாட்டேன். இதிலே என்ன தவறு இருக்கு நீ ஏன் அழுகிறாய் அவனும் சிரித்துக் கொண்டே கேட்டான்.

அவளின் கோபமும் அழுகையும் அதிகமாயிற்று. இந்தப் பிறப்பிலே பிரிய மாட்டேன் என்றால் அடுத்த பிறப்பிலே என்னைக் கைவிட்டு விடுவாயா? அடுத்த பிறப்பிலே நான் தேவையில்லையா? என் மீது உனக்கு இருக்கும் அன்பும் காதலும் இவ்வளவு தானா? என்று கேட்டாள் அந்தப் பெண்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள்

(திருக்குறள் புலவி நுணுக்கம் குறள் 1315)

19ம் பக்கத் தொடர்ச்சி

## மனிதர்கள் காத்திருக்கின்றார்கள்



“யார் இரண்டு கிழமைக்கு முன்பு வந்திருந்தார்களே அந்த அம்மாவின் பெயரா” என்றாள் சிற்பிகா. “ம் அந்த அம்மாதான், உன்னிடம் பேசாமல் எழுந்து சென்றதுபோல்தான் எங்களிடமும் எதுவும் பேசவில்லை. நான் விடாப்பிடியாய்க் கேட்டதில் பொன்னுத்தாயி என்று மட்டும் சொன்னாள்.

எப்பொழுது பார்த்தாலும் அந்த ஆலமரத்தடியில் போய் உட்கார்ந்து வாசலையே பார்த்துக்கொண்டு இருக்கின்றாள். யார் சொன்னாலும் கேட்பதில்லை" என்றாள் சங்கழகிப் பாட்டி.

"விடுங்கள் பாட்டி அவருக்கு என்ன கவலையோ, இங்கு விட்டுச் சென்றவர்கள் மீண்டும் வரக்கூடும் என்று பார்த்துக்கொண்டிருப்பார்போல" என்றாள். மற்றவர்களிடம் பேசிவிட்டு விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தபோது அந்தப் பெண்மணி அதே இடத்தில் அமர்ந்திருந்தாள். “வருகின்றேன் அம்மா” என்றாள். திரும்பிப் பார்த்தாள் ஆனால் பதில் இல்லை.

வண்டியை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தபோது, வாயில் காப்பாளியாக இருக்கும் மறவன் "சிற்பிகா நீ இரண்டு தடவை வந்தபோதும் சென்று பேசுவதைப் பார்த்தேன். அந்தப் பெண் பேசவில்லை என்று தவறாக எடுத்துக் கொள்ளாதே அவள் பாவம்” என்றார். “அண்ணா அவர் யார் என்று தெரியுமா? ஏன் இப்படி இருக்கின்றார்” என்றாள்.

அவள் காதல் திருமணம் என்ற பெயரில் ஏமாந்து போனவள். நம்பியவன் ஏமாற்றிச்செல்ல இருவருக்கும் பிறந்த பெண் பிள்ளையை இவள் வளர்த்தாள். அந்தப் பெண் படிக்கச் சென்ற இடத்தில் காதல் என்று வர தனக்கு நடந்தது போன்று மகளுக்கு ஆகிவிடக்கூடாது என்ற எண்ணத்தில் எதிர்த்தாள். அதைப் புரிந்து கொள்ளாத மகள் தான் காதலித்தவனோடு சென்று விட்டாள். உடன் இருந்தவர்கள் மகள் மேல் இவளுக்கிருந்த கோவத்தைப் பயன்படுத்தி இவளிடம் உள்ள கொஞ்சநஞ்சப் பணத்தையும் பறித்துக் கொண்டனர். ஒரு கட்டத்தின் பின் மகள் தன்னிடம் வரமாட்டாளா என்று தேடத் தொடங்கிய இவள் சொல்லிக்கொள்ளாமல் எங்கெங்கோ செல்லத் தொடங்கவும் இவள் தூரத்து உறவினர் இங்கு கொண்டுவந்து விட்டுச் சென்றுள்ளார். தன் மேல் உள்ள கோவத்தில் சென்ற மகள் திரும்பி வருவாள் என்ற நம்பிக்கையில் வாசலைப் பார்த்தபடி இருப்பாள். முதியோர் காப்பகத்தில் சேர்க்கும் வயதில்லை என்றாலும் அவள் நலன் கருதி இங்கேயே சேர்த்துக்கொண்டார்கள். மகளைத் தேடவும் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்” என்றார்.

“என்ன நன்றி கெட்ட பிள்ளைகளோ” என்று திட்டிவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்றாள்.

பாவம் இங்குள்ள எல்லோருக்கும் ஒரே கவலைதான் உள்ளது. நம்மைத் தேடி யாராவது வரமாட்டார்களா, உண்மையான அன்போடு பேசமாட்டார்களா என்பதுதான் அவர்களது எதிர்பார்ப்பாக இருக்கும். நிம்மதியை வெளியே தேடும் பல மனிதர்களுக்கு இங்கு அன்புக்காக காத்திருக்கும் மனிதர்களை ஏன் தெரிவதில்லை. இயந்திர உலகத்தில் பணம் சேர்ப்பதற்காய், வேறு சிக்கல்களுக்காய் பெற்றவர்களை இங்கு விடும் பிள்ளைகளை என்ன செய்வது என அவள் எண்ணம் வண்டியோடு ஓடிக்கொண்டிருந்தது.

அடுத்த கிழமை முக்கிய வேலை ஒன்று அலுவலகத்தில் கொடுக்கப்பட காப்பகத்திற்குச் செல்ல முடியாமல் போனது. இந்தக் கிழமை அவள் உள்ளே சென்று வண்டியை நிறுத்தி விட்டு ஆலமரத்தைக் கடக்க முனைந்தபோது அந்தப் பெண்மணி சிறு புன்னகையுடன் இவளை எதிர் கொண்டாள். “நீ ஏன் போன கிழமை வரவில்லை” என்ற ஏக்கமான அவள் குரல் அந்த ஆலமரத்தில் இருக்கும் பறவைகளின் குரலையும் தாண்டி இவள் காதுகளை வந்து சேர்ந்தது.

ஆம் மனிதர்கள் காத்திருக்கின்றார்கள். அன்புக்காக, அரவணைப்புக்காக, அக்கறையான சில வார்த்தைகளுக்காக எல்லா இடங்களிலும் மனிதர்கள் காத்திருக்கின்றார்கள்




அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்

# பெயருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டு பொய்களை தம் மனமறிந்து கூறும் மனிதர்கள்!




கௌசி



தர்மம் தலைகாக்கும் என்னும் பழமொழியை யாம் அனைவரும் அறிந்திருக்கின்றோம். அதுபோலவே சத்தியமும் ஒரு சந்தர்ப்பத்தில் வந்து கைகொடுக்கும் என்பது நிச்சயமான உண்மை. "உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால், வாக்கினில் ஒளி உண்டாகும்" என்பார் பாரதி. உள்ளத்தில் உள்ளது உண்மை என்னும் சத்தியம். வாய்வழி வருவது வாய்மை என்பதாகும். உள்ளத்தால் ஒன்றை நினைத்துவிட்டால், வாய்வழி அந்த உண்மை வாய்மையாக வெளிப்படும். உண்மை உள்ளத்தில் இல்லையென்றால், வாய்மை அந்தப் பொய்யை வெளிப்படுத்திவிடும். அப்படியென்றால், உள்ளம் சொல்வதைத்தான் உடல் செயல்படுத்துவதாக இருக்க வேண்டும். ஆனால், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் மனிதர்களே அதிகமானவர்களாக இருக்கின்றார்கள். எனவே வாய்வழி வருவது எல்லாம் உண்மையாக இருக்கும் என்று அர்த்தமில்லை. எனவே வாய்மை உண்மையென்ற பொருள்படாது. எனவே எமக்கு நாம் உண்மையாக இருக்க வேண்டும். அப்போதுதான் வாக்கிலும் உண்மை ஒளி உண்டாகும்.

பொய்மையும் வாய்மையிடத்துப் புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் என வள்ளுவர் கூறுகின்ற போது நன்மையைத் தரும் என்றால் பொய் கூட உண்மைக்குச் சமமானது என்பார்கள். இங்கு கூட உண்மைக்கு அப்பால் வாய்மை என்ற வார்த்தையையே வள்ளுவர் பயன்படுத்தியுள்ளார். இங்கு உள்ளத்தில் உண்மை இருக்க வாய்வழி வாய்மையாகப் பொய் வெளிப்படுகின்றது. பிறருக்கு நன்மை கிடைப்பதற்காக என்றே இதைக் கருதவேண்டியுள்ளது. ஆனால், அங்கு நன்மை கிடைப்பதற்காக மறைக்கப்பட்ட உண்மைகூட ஒரு இடத்தில் வெளிப்பட்டு விடும் என்பதே சத்தியம். அதனால், நம்பிக்கை உள்ளவர்களிடமும், நல்ல நண்பர்களிடமும், பெற்றோரிடமும் உண்மையை மறைத்தல் கூடாது. அது கொலைக்குச் சமமானதாகும்.
சரித்திரத்தில் இடம் பிடிப்பதற்கு மனமறிந்து உண்மைகளை மறைப்பதற்குப் பலர் முற்படுகின்றார்கள். உலோபியைப் போல உள்ளம் நிறைந்த உண்மையும் ஓலைக்குடிசையில் வாழ்கிறது என்று வில்லியம் ஷேக்ஸ்பியர் சொல்லியிருக்கின்றார். ஆனால் தோண்டத் தோண்டப் புலப்படும் அகழ்வாராய்ச்சிகள் போல என்றோ ஒருநாள் உண்மை வெளிவரும் என்னும் சத்தியத்தில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

பாவத்திற்குப் பல காரணங்கள் உண்டு. ஆனால், அவற்றுக்கெல்லாம் பொருத்தமான கருவியாகப் படுவது பொய்யே ஆகும். பாவமான காரியங் களைச் செய்துவிட்டு அவற்றை மறைப்பதற்குப் பொய் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. எனவே உண்மைக்கு மாறானது பொய் என்றால், பொய் சொல்பவர்கள் பாவம் செய்பவர்களாகவே கருதப் படுகின்றார்கள். உண்மை வெளிப்படும் பட்சத்தில் மானம், மரியாதை என்னும் பண்புகளை இழந்து தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலைமை பொய் கூறியவர்களுக்கு ஏற்படுகின்றது.

ஆயிரம் பொய்யைச் சொல்லி ஒரு கல்யாணம் நடத்தலாம் என்பார்கள். ஆனால், அந்தப் பொய்கள் வெளிப்படும் பட்சத்தில் அந்தக் குடும்பமே சிதைந்து போகும். இதனால், உண்மையை மறைத்தமைக்கு எந்தவித பயனுமில்லை. குடிகாரன் குடிக்கமாட்டேன் என்று கூறுகின்ற சத்தியமானது அடுத்த விநாடியே மறைந்து விடுகின்றது என்றால் உண்மையன்றி அக்குடிகாரன் கூறியது வாய்வழி வந்த வார்த்தைகளே ஆகும். அது நில்லாது ஓடிவிடும்.

சில உண்மைகள் கூட காலத்துக்குக் காலம் மாறக்கூடியது. சூரியன் பூமியை வலம் வருகின்றது என்று அன்று விஞ்ஞானிகள் கூறிய உண்மை இன்று பொய்யாகப்பட்டுள்ளது. சூரியன் நகர்வதில்லை பூமியே சூரியனைச் சுற்றி வருகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது. ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப் புக்களும் நிச்சயமான உண்மைகளாகாதவை. அவை காலத்துக்குக் காலம் மாறக்கூடியது.
நாம் காணுகின்ற இச்சமுதாயத்தில் தமக்கு பெயரும் புகழும் கிடைக்க வேண்டும் என்பதற்காக மனமறிந்து பல பொய்களை துணிந்து கூறு கின்றார்கள். ஆனால், அப்பொய்கள் ஒருநாள் பூதாகரமாக வெளிப்பட்டு நிற்கும் என்று அவர்கள் அறியாது இருக்கின்றார்கள். பாண்டிமாதேவியின் சிலம்பைக் கோவலன் திருடினான் என்று பொற்கொல்லன் கூறிய பொய்யானது, பொய்ப்பிக்கப்பட்டு உண்மை வெளிப்பட்டது. அப்போது பார்ப்பார், அறவோர் பசு, பத்தினிப் பெண்டீர், மூத்தோர், குழவி நீங்கலாக பாண்டியநாடு முழுவதுமாக எரிக்கப்பட்ட செய்தி சிலப்பதிகாரம் தெரியாத வர்கள் கூட தெரிந்த செய்தியாகும்.
போர்க்களத்தில் குற்றுயிரும் குறை உயிருமாகக் கிடக்கின்றான் கர்ணன். அவன் செய்த தர்மங்கள் அவன் உயிரைப் போகவிடாது காப்பாற்றுகின்றது. இங்கு தர்மம் தலைகாக்கின்றது. அந்த சந்தர்ப்பத்தில் மறைக்கப்பட்ட உண்மை வெளிப்படுகின்றது. குந்தியானவள் அத்தனை வருடங்களும் கர்ணன் தன்னுடைய மகன் என்று மறைத்து வைத்திருந்த உண்மை, அவனது இறப்பின் இறுதித் தருணத்தில் வெளிப்படுகின்றது. உண்மை கடைசிக் காலத்தில் கூட கைவந்து உதவும். தோண்டத் தோண்ட வெளிப்படுகின்ற அகழ்வாராய்ச்சித் தடயங்கள் போல உண்மைகள் எம்முன்னே வந்து நிற்கும்.

சத்தியம், உண்மை என்றவுடன் எம்முடைய மனதிலே முதலில் வந்து நிற்பது அரிச்சத்திர மன்னனே ஆவார். அவர் கனவிலே செய்த சத்தியத்தை மறைத்து ஒரு பொய் சொல்லியிருந்தால் தன் வாழ்நாள் முழுவதும் கஷ்டத்தை அனுபவித்திருக்கத் தேவையில்லை. பாம்பு கடித்து மகன் இறந்த போதும் கூட உண்மையை மறைக்கவில்லை. ஆனால், தக்க சந்தர்ப்பத்தில் உண்மை தன் வீரியத்தைக் காட்டியது. அரிச் சந்திரமன்னனும் சுவர்க்க வாழ்வு பெற்றார். கதைகள் எல்லாம் உண்மையானவையான இல்லை கட்டுக்கதைகளேதான் என்று நாம் கருதினாலும், இவை அனைத்தும் மனித வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களையே எமக்குத் தெரிகின்றன.
பாரிஸ்டர் பட்டம் பெற்ற பின் அரிச்சந்திர நாடகம் பார்க்கச் சென்ற காந்தியடிகள் தன்னுடைய நண்பனையும் அழைத்துச் சென்றாராம். நாடகம் பார்த்துத் திரும்பிய போது இந்நாடகம் பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்ட போது, இந்த நாடகம் என் வாழ்க்கையையே மாற்றப் போகிறது. சத்தியத்தை உயிருள்ளவரை காப்பாற்ற வேண்டும் என்று கருதுவதாகச் சொன்னாராம். அவருடைய நண்பரிடம் கேட்ட போது சத்தியத்தின் படி நடந்தால், மனைவி, பிள்ளைகளைக் கூட இழக்க வேண்டிவரும் என்று கூறினாராம். எனவே அனைத்தும் அவரவர் புரிதலின்படியே நடக்கும். இக்கட்டுரையைக்கூட உங்கள் புரிதலின்படியே ஏற்றுக் கொள்வீர்கள் என்பது நிச்சயம்.






## கவிஞர். பொத்துவில் அஸ்மினுடன்
## உங்களுக்காக ஒரு நேர்காணல்.

தமிழ் பேசும் உலகமெங்கும் நன்கு அறியப்பட்ட இலங்கை படைப்பாளியான பொத்துவில் அஸ்மின் கவிஞர், திரைப்படபாடலாசிரியர்,தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர்,நிகழ்ச்சி தொகுப்பாளர் என பன்முகம் கொண்டவர். 1997 ஆம் ஆண்டிலிருந்து எழுத்துலக பயணத்தை ஆரம்பித்த அஸ்மின், விடைதேடும் வினாக்கள்(2001), விடியலின் ராகங்கள்(2002), பாம்புகள் குளிக்கும் நதி(2013), ஆகிய நூல்களை தமிழுக்கு தந்துள்ளார். 2001 ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற அஸ்ரப் ஞாபகார்த்த கவிதைப்போட்டியில் முதலாமிடம் பெற்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கரங்களினால் விருதினை பெற்ற அஸ்மின் இதுவரை தேசிய, சர்வதேச மட்டத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட விருதுகளை பெற்ற இளம் இலக்கிய சாதனையாளர். தமிழ் சினிமாவில் பாடலாசிரியராக 2012 ஆம் ஆண்டில் "நான்" திரைப்படம் மூலம் தனக்கான ஒரு அடையாளத்தை உருவாக்கிக்கொண்ட அஸ்மின் 2015 ஆம் ஆண்டு "அமரகாவியம்" திரைப்படத்தில் எழுதிய பாடலுக்காக சிறந்த வெளிநாட்டு பாடலா சிரியருக்கான "எடிசன்" விருது பெற்றவர். வசந்தம் தொலைக்காட்சியில் இவர் தயாரித்த "தூவானம்" கலை, இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சி அரச தொலைக்காட்சி விருது விழாவில் மூன்று முறை தேசிய விருதினை பெற்றுள்ளது. பொத்துவில் அஸ்மினின் இலக்கிய பணியை பாராட்டி 2016 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேனா விருது வழங்கி கௌரவித்துள்ளார். கடந்த மாதம் நடைபெற்ற பாரம்பரிய ,நவீன,அரச கலைஞர் விருது விழா நிகழ்வில் இருபது ஆண்டு கால கலை இலக்கிய பணிக்காக "கலைச்சுடர்" விருது வழங்கி அஸ்மின் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் கம்போடியாவில் நடைபெற்ற உலக கவிஞர்கள் மாநாட்டில் தமிழ் இலக்கிய பணிக்காக கம்போடிய அரசினால் "சர்வதேச கவியரசு கண்ணதாசன் விருது" இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்படி இவரைப்பற்றி என்னும் எத்தனையோ விடயங்கள் சொல்லிக் கொண்டே போகலாம். வாருங்கள் அவருடன் பேசுவோம்.

1)திரைப்பட பாடல்கள் எழுதுவதுதற்கும், கவிதைகள் எழுதுவதற்குமான வேறுபாட்டினை எப்படி அடையாளம் காண்கிறீர்கள்?

பாடலாசிரியர்கள் எல்லோரும் கவிஞர்களல்லர் கவிஞர்களில் பாடலாசிரியர் களும் இருக்கின்றனர்.நல்ல கவிதைகள் பாடலாக பரிணமித்ததுண்டு. உன்னதமான பொருள் நிறைந்த பாடலென்றாலும் கவிதைகளின் உயர்வான இடத்தை ஒருநாளும் அந்தப் பாடலால் அடைய முடியாது.மரபுக் கவிதைகள் சிறகு முளைத்த சிட்டுக்குருவிகள் அதனால் பாடல் என்னும் வானத்தில் இலகுவாக பறக்க முடியும். புதுக்கவிதைகள்,நவீன ,பின்நவீன கவிதைகள் அப்படியல்ல பாடல் வானத்தில் பட்டம் போன்று அதனை பறக்க வைத்து பார்க்க வேண்டுமாயின் செயற்கை சிறகுகள் செய்தே ஆகவேண்டும்.பாடல் எழுதும் கவிஞன் வீடுகட்டும் கொத்தனுக்கு ஒப்பானவன்.யாரோ ஒருவரின் தேவைக்கு யாரோ ஒருவரின் வடிவமைப்புக்கு ஏற்ப யாரோ ஒருவரின் கட்டளைக்கு பணிந்து வீட்டினை அழகுற அவன் கட்டி கொடுத்தல் வேண்டும்.

அந்த வீட்டின் ஒரு செங்கல்லைக்கூட அவன் விருப்பத்துக்கு வைத்து கட்ட முடியாது. ஆனால் அதே கொத்தனார் தனது வீட்டினை தனக்குப்பிடித்தமான வடிவமைப்பில் அவன் நினைத்த நேரத்தில் பிறர் வீடுகளை விட நேர்த்தியாக தனித்துவமாக கட்ட முடியும். அது போலவே இயக்குனரின் கதையினை இசையமைப்பாளர் வழங்கும் இசைக்கு ஏற்ப பாடலாக எழுத பணிக்கப்படும்போது "தப்பெல்லாம் தப்புத்தான்" என்று தெரிந்திருந்தும் "தப்பெல்லாம் தப்பேயில்லை" என்று எழுத வேண்டுமாயின் எழுதித்தான் ஆகவேண்டும். ஆனால் கவிஞன் கவிதை எழுதும் போது சுதந்திரமாக செயற்பட்டு தனக்கு பிடித்த கருத்தினை தனக்கு பிடித்த வடிவத்தில் படைப்பாக தரமுடியும்.அடிப்படையில் நான் மரபுக் கவிஞன் இலக்கணம் பிசகாமல் கவிதை இயற்றும் நுட்பம் தெரிந்ததால் தத்தகாரத்துக்கு பாடல் வரிகளை எழுதுவது எனக்கு கடினமாக இருப்பதில்லை.நான் எழுதும் வரிகளை இசையமைப்பதற்கு இசையமைப்பாளருக்கும் சிரமமாய் இருந்ததில்லை.கவிதைகள் கருவாகி உருவாகி திருவாகி இயற்கையாக பிறக்கின்றன பாடல்களோ செயற்கையாக செய்யப்படுகின்றன.






கவிஞர். பொத்துவில் அஸ்மின்

2) இசைக்கும், கவிதைக்குமான காதல் எப்படிப் பட்டது?

இசைக்கும் கவிதைக்கும் இடையிலான காதல் இன்று நேற்று முளைத்ததல்ல ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முகிழ்த்தது.

வள்ளுவன் திருக்குறளை வரைந்தபோது, கம்பன் இராமாயணத்தை பாடிய போது, ஔவை தன் அழகிய பாடல்களால் வாழ்க்கை தத்து வத்தை வழங்கியபோது,அருணகிரிநாதர் திருப் புகழால் எம்மை திண்டாட வைத்தபோது ,பாரதி தன் கவிதைகளால் தீண்டாமைக்கு தீவைத்த போது கவிதையும் இசையும் கணவன் மனைவி யுகமாகவே இருந்தனர்.

என்று மேலைத்தேய இலக்கியம் தமிழில் இறக்குமதி செய்யப்பட்டதோ அன்றுமுதல் இசையை கவிதை மெல்மெல்ல கைவிடத்தொடங்கி இன்று முற்று முழுதாக விவாகரத்து செய்துவிட்டது. அந்த சோகத்தில் பாவம் தகப்பன் தமிழ் தாடிவைத்துக்கொண்டு அலைகிறது. இருந்தும் இசைக்கும் கவிதைக்குமான காதல் திருமணம் ஆங்காங்கே நடக்கவே செய்கின்றன. ஆனால் இவ்வாறான திருமணங்களை ஏதோ ஓரின சேர்க்கையாளர்களின் திருமணம்போல விசமத்தோடு பார்க்கின்றன இன்றைய இலக்கிய உலகம்.



# உனக்கு தெரியுமா





3 இலங்கை சூழலின் மொழியானது தமிழக சினிமாவின் பாடல் மொழிக்கு எவ்வகையில் பொருந்திப் போகிறது?

கவிஞன் பிறக்கிறான் எழுத்தாளனைப்போல பாடலாசிரியன் உருவாக்கப் படுகின்றான். பாடல் எழுதுவதற்கு பயிற்சி வேண்டும். அதுவும் தமிழக சினிமாவில் எழுதுவதற்கு முயற்சி வேண்டும்.பயிற்சியும் முயற்சியும் இணையும்போது என்றோ ஒருநாள் உயர்ச்சி தோன்றும்.

ஒரு பாடலாசிரியன் பலதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்க வேண்டும், புதுமையாக யோசிக்க வேண்டும். ஒரு பொருளின் எடை பூமியில் இருப்பதைவிட ஆறில் ஒரு பங்கு நிலவில் குறைவடையும் என்பது முதல் டொலரின் பெருமதி அதிகரிக்க பெற்றோலின் விலை மட்டுமல்ல பொருட்களின் விலையும் அதிகரிக்கும் என்பது வரை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கொடுத்த சந்தத்துக்கு வார்த்தைகளை இட்டு நிரப்பாமல் வாழ்க்கையை நிரப்புவனே சிறந்த பாடலாசிரியன். வாழ்நாளில் ஒரு புத்தகத்தையே வாசித்திராத ஒருவரால் எப்படி புத்தகம் எழுத முடியாதோ அதுபோல வாழ்நாளில் பாடல்களை ரசித்திராத ஒருவரால் ஒரு பாடலையும் எழுத முடியாது. சினிமாவில் கதை நிகழும் களத்துக்கேற்ப எவ்வாறு பாத்திரங் களின் உரையாடல் வடிவமைக்கப்படுகிறதோ அவ்வாறே பாடல்களும் எழுதப்படுகின்றன. இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் ஒரே தமிழ்தான் இருக்கிறது.மனிதர்கள்தான் பேசும்போது தமது வசதிக்கேற்ப தமிழை மொழிகின்றனர். இந்த உண்மைய ஆய்ந்துணர்ந்தால் இலங்கை கவிஞனாலும் தமிழ் சினிமாவில் வெற்றிகரமான பாடலை தரலாம் என்பது திண்ணம்.

4.இலங்கையில் இருக்கும் நீங்கள் பாடல் வாய்ப்புகளை எப்படி பெறுகின்றீர்கள்.கதைசூழல் மெட்டுக்களை எப்படி தெரிந்து கொள்கிறீர்கள்.

இசையமைப்பாளர் நடிகர் விஜய் ஆண்டனி அவர்களின் "நான்" திரைப்படத்தில் இடம்பெற்ற "தப்பெல்லாம் தப்பேயில்லை" என்ற பாடலினூடாகத்தான்

நான் தமிழ் சினிமாவில் நான் அறிமுகமானேன்.அதன் பின்னர் சுமார் 15 திரைப்படங்களில் நான் பணிபுரிந்துள்ளேன்.அமரகாவியம், சும்மாவே ஆடுவோம்,

எந்த நேரத்திலும் ஆகிய படங்கள் இதுவரை வெளியாகியுள்ளன. இயக்குனர் ஜீவாசங்கரின் அமரகாவியம் படத்தில் ஜிப்ரானின் இசையில் பத்மலதா பாடிய "தாகம் தீர கானல் நீரை காதல் இன்று காட்டுதே"

பாடலுக்கு சிறந்த வெளிநாட்டு பாடலாசிரியருக்கான "எடிசன்" விருது எனக்கு கிடைத்தது. எந்த நேரத்திலும் படத்தின் இயக்குனரையோ ,இசையமைப்பாளரையோ நேரடியாக சந்திக்காமலே இப் படத்தின் பாடல்கள் என்னால் எழுதப்பட்டன. கடல் கடந்து இருந்தாலும் தேவையேற்பட்டால்

அவ்வப்போது சென்னைக்கு சென்று வருகின்றேன். 2020 இல நான் பணிபுரிந்த பல படங்கள் வெளிவர இருக்கின்றன. புதிய படங்களுக்கும்

ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளேன். தூரத்தில் இருப்பதால் பல நல்ல வாய்ப்புகளும் கடைசி நேரத்தில் கைநழுவிப் போயிருக்கின்றன.தேடி வரும் வாய்ப்புகளை பயன்படுத்துகின்றேன். வாட்சப் தொழில் நுட்பம் என் பாடல் பணியை இலகுவாக்கிறது.

வாட்சப்பில் டியுன் கேட்டு, வாட்சப்பில் கதை கேட்டு வாட்சப்பில் பாட்டெழுதி, வாட்சப்பில் அதை திருத்தும், வாண்மை மிகு பாவலன் நான் வாழ்க்கையிலே கண்டவற்றை வார்த்தைகளில் கொண்டு வந்து வானளந்த தேன் கவியால் வரலாற்றில் பெயர் பதிப்பேன். வருங்காலம் என் காலம், வலியாவும் ஒளியாகும், வழியற்று அலைவோர்க்கும் வழியென்றன் வழியாகும்.

5. வெற்றிமணி வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

25 வருட உன்னதமான சேவை ஐரோப்பாவில் செய்வது சாதாரண விடயமல்ல. வெள்ளிவிழா கண்ட வெற்றிமணி பத்திரிகை தொடர்ந்து 25/50 வருடங்களென தொடரவேண்டும். திரு. சிவகுமாரன் அவர்களுக்கு என் நன்றியும் பாராட்டுகளும்.

பிரபாலினி ஒரு பன்முக கலைஞர். பாடுவது இசையசமைப்பது எழுதுவது இயக்குனர் தயாரிபாளர் என்று என்னை பிரமிக்க வைக்கும் ஒரு பெண். அவர் என்னை நேர்கண்டமைக்கு மனமார்ந்த நன்றிகள் தோழி.

அன்புடன் உங்கள் பொத்துவில் அஸ்மின்




## கர்ப்பம் சுமக்கும் தாயவள் கவனத்திற்கு.

13 ம் பக்கத் தொடர்ச்சி





**அகமும் புறமும் பரிசுத்தமாகவும், சாந்தியோடும் விளங்கும் போது சாத்வீகமானதொரு ஆன்மாவை வரவழைக்க முடியும்.**

குழந்தை கருவில் உருவாக முன்பே அதற்கான வரவு இனிதாக இருக்க வேண்டும் என்று மணமகள், மணமகனின் உடல், உள மேம்பாடு மற்றும் நாட்களின் சீதோஷ்ண நிலை, கிரக கதிர்வீச்சு நிலை, நிலவுக்கும் பூமிக்குமான விசை என இவைகள் நல்ல முறையில் இருக்கவே சாந்தி முகூர்த்தம் என சக்தி மிகுந்த நாளில் தம்பதியினரை ஒன்று சேர்க்கின்றனர். அந்த நாளில் அகமும் புறமும் பரிசுத்தமாகவும், சாந்தியோடும் விளங்கும் போது சாத்வீகமானதொரு ஆன்மாவை வரவழைக்க முடியும்.

தமிழ் வேதமாகிய திருமந்திரத்தில் திருமூலர், கருவின் தோற்றம், வளர்ச்சி, ஆண் பெண் குழந்தைப் பிறப்பு, ஊனத்துடன் குழந்தைப் பிறப்பதற்கான வாய்ப்பு முதலிய செய்திகளையும் கூறியுள்ளார்.

உதாரணமாக, உறவின் போது ஆணின் சுவாசம் வலது மூக்கின் வழியாக நடைபெற்றுக் கொண்டு இருக்குமாயின் குழந்தை ஆணாக இருக்கும். ஆணிடம் சுவாசம் இடது மூக்கின் வழியாக நடைபெற்றுக் கொண்டு இருக்குமாயின் பெண் குழந்தைப் பிறக்கும். ஆண் பெண் இருவருக்கும் நல்ல முறையில் சீரான சுவாசம் நடைபெற்றால் அழகான, சாத்வீகமான, அறிவான குழந்தைப் பிறக்கும் இதுபோன்றக் கருத்தை இப்பாடலில் கூறியுள்ளார்.

”குழவியும் ஆணாம் வலத்தது வாகில்
குழவியும் பெண்ணாம் இடத்தது வாகில்”

அதே போல் தாய் வயிற்றில் மலச்சிக்கல் ஏற்பட்டு மலம் மிகுந்தால், குழந்தை மந்தமாகப் பிறக்கும் எனவும், சிறுநீர் அடக்கி இருந்தால் குழந்தை ஊமையாகும் என்றும், வயிற்றில் மலசலம் இரண்டுமே நிறைந்திருப்பின் குழந்தையின் கண் பார்வை கெடும் எனவும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

”மாதா உதரம் மலமிகில் மந்தனாம்
மாதா உதரம் சலமிகில் மூங்கையாம்
மாதா உதரம் இரண்டொக்கில் கண்ணில்லை
மாதா உதரத்தில் வந்த குழவிக்கே”

திருமூலர் கூறும் கருத்தில் எத்தகைய உண்மை உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். உடலிலுள்ள பத்து வாயுக்களில் ஒன்றான தனஞ்சயன் என்னும் வாயுவினால் கால்வாதம், கூன், சிரங்கு முதலான நோய்கள் உருவாகும். கூர்மன் என்னும் வாயுவினால் கண்ணில் வீக்கம், பூ விழுதல் போன்ற கண் நோய்கள் வரும். சாதாரண நிலையில் இருக்கும் இவ் வாயுக்கள் மேலுள்ள பாடலில் காணப்படும் காரணிகளால் இப்பேற்பட்ட விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே குழந்தை பெறுதல் எனும் ஒரு பெரும் செயலில் இறங்குவதற்கு முன் அது பற்றிய விழிப்புணர்வு மிக அவசியம்.

ஒரு தாயானவள் மிகப் பெரும் யாகம் நிகழ்த்துவது போலவே ஒரு பிரசவத்தை எதிர் கொள்கிறாள். இன்னொரு உயிரை தருவிக்கப் போகும் அவள் அதன் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

சில உணவுகளை, உணர்வுகளை தவிர்த்து எத்தனையோ சிரமங்களை எதிர்கொண்டு இந்த தன்மையினை தாய் அடைகிறாள் என்பதே உண்மை. பிரசவத்தின் பின்பும் தாய்மைக்கான பொறுப்பு, கவனம் அதிகம்.
குழந்தையின் அடிப்படை உணர்வும் உடலும் தாயைச் சார்ந்ததே. ஒரு பெண்ணின் மனோதிடம் என்பது பிரசவத்தில் உயிர் போகும் வலியை அனுபவித்த பின்பும் மற்றுமொரு குழந்தை பெற்றுக்கொள்ள ஆயத்தமாகும் போதே வெளிப்பட்டுவிடும்.

தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை.

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம் ( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம் (Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில் துரிதகதியில் மொழிபெயர்ப்பதற்கும் நாடவேண்டிய இடம்.
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen



SJ SOUTH INDIAN FOOD
0621 33 93 53 64
SOUTH INDIAN & SRI LANKAN
RESTAURANT
G2,21-23
68159 Mannheim
Mobil:0173 68 28 990



மளிகைப் பொருட்களுக்கும் நாடுங்கள்
Ludwigshafen
Schulstr 7-9
67059 Ludwigshafen
Tel: 0621 545 44 276
Mannheim
S1 -11
68161 Mannheim
Tel: 0621 862 43 212
info@asian-afro.de
S.J ASIAN - AFRO STORE

# ஆரஞ்சு நிறத்திற்கு முன்னரே ஆரஞ்சுப்பழம், ஆரஞ்சு என்று தான் அழைக்கப்பட்டதா?

நண்பர்களே, எனது கட்டுரைகளை விரும்பிப் படிக்கும் உங்களுக்கு நன்றாகவே என்னைப் பற்றித் தேரியும். நான் எப்போதும் கொஞ்சம் வித்தியாசமான கேள்விகளுக்குப் பதிலைத் தேடுபவன் என்று. எனவே இப்பொழுது உங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்கிறேன், அதற்குப் பதிலைச் சொல்லுங்கள் பார்ப்போம். அது என்னவென்றால், ஆரஞ்சுப் பழத்தை, ஆரஞ்சு நிறத்தில் இருப்பதால் தானா ஆரஞ்சு என்று அழைக்கின்றோம்? அல்லது ஆரஞ்சு என்று அழைக்கப்படும் பழம் ஆரஞ்சு நிறத்தில் இருப்பதால் தானா அதன் நிறத்தை ஆரஞ்சு என்று அழைக்கின்றோம்? என்ன நண்பர்களே, குழப்பமாக இருக்கிறதா? சரி, இதை இலகுவாகக் கேட்கிறேன். முதலில் எதை ஆரஞ்சு என்று அழைத்தோம். பழத்தையா? நிறத்தையா? இதற்கு என்ன பதில் என்று உங்களுக்குத் தெரியுமா? இல்லையென்றால் தொடர்ந்து படியுங்கள்.









## Dr.நிரோஷனின் அதிசய உலகம்

இந்த கேள்விக்கு பதில் தெரியவேண்டுமென்றால் முதலில் ஆரஞ்சு என்கிற வார்த்தையின் வரலாற்றை பார்க்கவேண்டும். “ஆரஞ்சு” எனப்படும் ஆங்கில வார்த்தை 13ம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது, ஆனால் இந்த வார்த்தை அப்போது பழத்தை மட்டும் தான் குறித்தது. இதில் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அந்நேரத்தில் ஆரஞ்சு நிறத்திற்கு வேறு பெயர் இருந்தது. குறிப்பாக அந்த நிறத்தை மஞ்சளூசிவப்பு அதாவது yellowred என்று அழைத்தார்கள். அதற்குப் பிறகு, 16ம் நூற்றாண்டில் தான் ஆரஞ்சு நிறமாக அறியப்பட்டது.

சரி இத்துடன் பதில் கிடைத்து விட்டது தானே என்று என்னால் போக முடியாது. ஆரஞ்சு என்கின்ற வார்த்தையை சற்று சொற்பிறப்பியல் அதாவது etymylogy இன் பார்வையில் பார்ப்போம், அதாவது ஆங்கிலத்தில் பாவனையில் இருக்கும் இந்த ஆரஞ்சு எனும் சொல் எங்கிருந்து வந்தது? ஆரஞ்சு என்கிற வார்த்தை பிரெஞ்சு (french) மொழியிலிருந்து தான் ஆங்கிலத்துக்கு வந்ததது.
அப்படி என்றால் பிரெஞ்சு மொழிக்கு எப்படி வந்தது? பிரெஞ்சு நாட்டவர்கள் இதை இத்தாலி மொழியில் இருந்து பெற்றுக்கொண்டனர். அந்நேரம் இத்தாலியின் எந்தப் பகுதியில் நீங்கள் வாழ்ந்தீர்கள் என்பதைப் பொறுத்து, இன்றைய orange என்கின்ற வார்த்தையை அவர்கள் arancio (அரான்சியோ), arancia (அரான்சியா), narancia (நாரான்சியா), naranza (நரான்சா) என்று அழைத்தார்கள். ஆனால் உண்மை சொல்லப்போனால், இத்தாலியரும் இந்த வார்த்தையைக் கண்டுபிடிக்கவில்லை. இவர்களின் நரான்சா உண்மையில் அரபிக் மொழியில் உள்ள நராஞ் (naransch) என்கிற சொல்லில் இருந்து வந்தது. ஆனால் இவர்களுடன் முடியவில்லை, ஏனென்றால் அரபிக்காரரும் இதை பாரசீக மொழியில் உள்ள narang (நராங்) என்கிற சொல்லில் இருந்து பெற்றுக் கொண்டனர்.

ஆனால் நண்பர்களே, இந்தச் சொல்லோ உண்மையில் சமஸ்கிருதத்தில் உள்ள naranga (நரங்கா) என்கிற சொல்லிலிருந்து தான் வந்தது. ஆனால் இந்தச் சொல் வேறு ஏதோ ஒரு திராவிட மொழிக் குடும்பத்தில் உள்ள ஒரு மொழியில் இருந்து தான் வந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த மொழி என்று தெரியவில்லை. சபா… ஆரஞ்சு என்கிற வார்த்தைக்குப் பின்னால் இப்படி ஒரு சரித்திரமே இருக்கிறது என்று கனவில் கூட யோசித்திருக்க மாட்டீர்கள் இல்லையா? சரி சரி… ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்குப் பதிலை சுருக்கமாகச் சொன்னால், முதலில் ஆரஞ்சு என்று பழத்தைத் தான் அழைத்தார்கள். பின்பு தான் நிறத்தையும் ஆரஞ்சு என்று அழைத்தார்கள். இனி நீங்கள் கூறுங்கள்? இந்த விஷயம் உங்களுக்கு முன்பே தெரியுமா? இதற்குரிய பதிலை மட்டுமில்லாமல், எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook.com/scinirosh)

## வெற்றிமணி வெள்ளிவிழா மலர் வெளியீடு




நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்கள் மலரை வெளியிட முதல் பிரதியை வெற்றிமணியின் மூத்த எழுத்தாளர் திரு.ஏலையா முருகதாசன் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள்




மங்கல இசை

உங்கள் மங்களகரமான வைபவங்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்

ஐரோப்பிய தவில் சக்கரவர்த்தி
தவில் லயஞானச் சுடரொளி

கே.பி.செல்வநாயகம்
0049 157 388 27 634
0049 0178 666 44 26
0202 2713 698

















# ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தால் நிறுவப்படும் கலாச்சார மையத்துக்குள் அமையவிருக்கும் மண்டபத்தின் விபரம்

ஹிந்து சங்கரர் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தால் நிறுவப்படும் கலாச்சார மையத்துக்குள் அமையவிருக்கும் மண்டபத்தின் விபரம்

72x13 மீட்டர் நீளம் 21x20 மீட்டர் அகலமும் கொண்ட மண்டபமாகும் மொத்தமாக 1529.15 குவாட்மீட்டர் இருப்பளவாகும்

இதிலே சுமார் 600 பேர் இருக்கைகள் கொண்டது குறிப்பாக சொல்வதாக இருந்தால் மண்டபம் தற்காலத்திற்குரிய அதி உயர் தொழில் நுட்ப வசதிகளுடன் அமைந்திருக்கும் என்பாதாகும். இதனுடைய மொத்த கட்டுமானச் செலவு 28 லட்சம் ஈரோவாகும்.
இம்மண்டபம் 18.04.2020 இல் பூமி பூஜையிட்டு, 2022 முற்பகுதியில் அம்பாளின் திருவருளுடனும் குருவின் ஆசியுடனும் பக்தர்களாகிய உங்களுடைய பேராதரவுடனும் நிறைவுபெறும்.

இதனால் மக்கள் அடையக்கூடிய பயன்கள் யாவை?
ஒரே இடத்தில் தங்களுடைய மதச்சடங்குகளை முறையுடன் செய்வதற்கான வாய்பாக அமையும்.
இம்மண்டபத்திலேயே மாப்பிள்ளை பெண்பிள்ளை பால் வைத்து குளிக்கவார்த்து அலங்காரம் செய்து விதம்விதமான கண்காட்சிகளுடன் படங்கள் எடுக்கமுடியும்.
முதல் நாள் இரவிலிருந்தே மறுநாள் மாலை வரை தாய் தந்தையர்கள் திருமண மாப்பிள்ளை பெண்பிள்ளை இவர்களுக்கான தங்கு வசிகளும் உணவு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும் .
திருமண நாள் அன்று விருந்தினருக்குத் தேவையான சகல சைவ உணவுவகைகளும் செய்து தரப்படும்.
மக்கள் விரும்புகின்ற சகல வசதிகளுடன் அமைந்த மண்டபமாகவிருக்கும். மேலும் இதில் 750 வாகனதரிப்பு நிலையங்களும் மிக முக்கியமானவர்களுக்கு 10 வாகனதரிப்பு நிலையங்களும் அமைத்துத் தரப்படும். தேவைப் படின் வெளியூர்களில் இருந்து வருவதற்கான பஸ் வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

மொத்தமாக சொல்லுவதானால் குளிர்காலங்களிலும் சரி வெப்ப காலங்களிலும் சரி எந்தவொரு நிகழ்வுகளையும் நடாத்தக்கூடிய மண்டபமாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது.

**மக்களாகிய உங்களிடம் இருந்து ஆலயம் எதிர் பார்ப்பது என்னவென்றால் நீங்கள் ஒவ்வொ ருவரும் மேற்காட்டியுள்ள கட்டுமாண செலவில் ஒவ்வொரு குவாட் மீட்டர் அளவிற்குரிய செலவு 1800 ஈரோவை செலுத்தலாம்.**

இவ்வரும் பணிக்கு ஐரோப்பாவில் உள்ள அனைத்து மக்களும் கரம் கொடுக்கலாம்.

மேலும் உங்கள் பிள்ளைகளின் எதிர்கால நன்மைக்காக பணம் சேர்த்து வைத்திருந்தால் இத்திருப்பணிக்கு செலுத்தி உதவி செய்யலாம் பின் உங்கள் குழந்தைகளின் நன்மைக்காலம் வருகின்ற பொழுது அக்கொண்டாட்டத்தை இம்மண்டபத்தில் நிகழ்த்தினால் அப்பொழுது தள்ளுபடி செய்யப்படும். இதுவல்லாமல் வேறு இடத்தில் செய்ய நினைத்தால் 6 மாதத்திற்கு முன்பாக அறிவித்தல் செய்யும் பட்சத்தில் நீங்கள் கூறும் திகதியில் உங்கள் பணத்தை திருப்பிச் செலுத்தப்படும்.
ஆயிரம் ஈரோவிலிருந்து 10ஆயிரம் ஈரோவரையில் வட்டியில்லாக் கடனுதவி செய்யலாம்.
மேலும் கட்டுமானத்திற்குத் தேவைவையான நிதியை எப்படிச் சேர்க்கலாம் என்பதற்கு நல்ல யோசனைகள் தரலாம்.

இதனால் உங்களுக்குக் கிடைக்கக் கூடிய பலன் அல்லது லாபம் என்ன?

முதலாவதாக நீங்கள் ஒரு நல்ல பொது தர்ம காரியத்திற்கு உதவிபுரிந்தீர்கள் என்ற மனத்திருப் தியும் அத்துடன் உங்களுடைய பேரும் புகழும் வழிவழியாகப் பேசப்படும்.

அத்தோடு நீங்கள் கொடுத்த பணமும் 10 ஆண்டுகளுக்குப் பிறகு திரும்ப வந்துவிடும் ஆக உங்கள் பணமும் வீனாகாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றோம்.


இதுவொரு மாபெரும் திட்டம் எல்லோரும் உதவுங்கள் நமது கலைகலாச்சாரத்தைப் பாது காருங்கள் துன்பத்தை நீக்குங்கள் ஒற்றுமையாக செயல் படுங்கள் ஒற்றுமை கூடிவாழ்தல் சுமை யைக் குறைக்கும் உடல் நோயை விலக்கும் ஆனந்தம் பெருகும். மாற்றும் மேலதிக விபரம் அறிய விரும்புபவர்கள் எம்முடன் தனியாகத் தொடர்பு கொள்ளவும்.

Hinduistische Gemeinde in Deutschland
( K.d.ö.R )
Nr: DE48 4105 0095 0000 1775 92
BIC WELADED1HAM
bei der Sparkasse Bank Hamm
überweisen. **Verwendungweck Kulturzentrum**

தொடர்புகளுக்கு 0049 2388 30 22 23
Email info@kamadchi-ampal.de
இப்படிக்கு

ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய ஆதீனகர்த்தா
**சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்**
03.11.2019

விளம்பரத் தகவல்:
ஹம் ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய ஆதீனம்-யேர்மனி



# திருமந்திரமும் வாழ்வியலும் 44

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

## திருமந்திரத்தில் உள்ள உடல் நல அறிவியல்

உடலில் உள்ள வாயுக்கள், அவற்றின் செயற்பாடுகள் என்பதனை திருமூலர் திருமந்திரத்தில் கூறிய பாடல்களில் ஒன்று பாடல் எண் 653




"ஒத்தஇவ் ஒன்பது வாயுவும் ஒத்தன
ஒத்தஇவ் ஒன்பதின் மிக்க தனஞ்சயன்
ஒத்தஇவ் ஒன்பதில் ஒக்க இருந்திட
ஒத்தஉடலும் உயிரும் இருந்ததே"

உயிருடலில் உள்ள வாயுக்கள் ஒன்பது. அவை இருக்கும் இடங்களாவன இடப்பக்க நாசி நரம்பு (இடகலை), வலப்பக்க நாசி நரம்பு (பிங்கலை), நடு நரம்பு (சுழு முனை), உள் நாக்கு நரம்பு (புருடன்), வலக்கண் நரம்பு (காந்தாரி), இடக்கண் நரம்பு (அத்தி), வலக்காது நரம்பு (அலம்புடை), இடக்காது நரம்பு (சங்கினி), எருவாய் நரம்பு (குரு) ஆகிய இந்த வாயுக்கள் கூடவோ, குறையவோ செய்யாமல் ஒத்து இயங்குவன ஆகும். இவற்றுடன் கூட சிறந்ததான வாயு தனஞ்சயனும் ஒன்பது வாயுக்களுடனும் சேர்ந்து ஒன்பது நாடிகளில் சீராக இருந்து இயங்குமானால் உடம்பு உயிரோடு ஒத்து நீண்ட காலம் நிலைத்திருக்கும். இவ்வாயுக்கள் இயங்கும் தன்மையைக் கூறும் பாடல் எண் 790

"வெள்ளிவெண் திங்கள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்தன் இரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வலம் ஆமே"

பிராணன் வெள்ளி, திங்கள், புதன் கிழமைகளில் (இடகலை) இடப்பக்கமாகவும், சனி, ஞாயிறு, செவ்வாய் கிழமைகளில் (பிங்கலை) வலப்பக்கமாகவும், வியாழக்கிழமை வளர்பிறையில் இடப்பக்கமாகவும், தேய்பிறையில் வலப்பக்கமாகவும் இயங்குவதே முறையான சுவாசமாகும். தனஞ்சயன் உடலைவிட்டு வெளியேறினால் உயிர் பிரிந்துவிடும் எனக்கூறும் பாடல் எண் 654

"இருக்கும் தனஞ்சயன் ஒன்பது காலில்
இருக்கும் இருநூற்று இருபத்து நான்காய்
இருக்கும் உடலில் இருந்தில ஆகில்
இருக்கும் உடல் அது வீங்கி வெடித்ததே"

தனஞ்சயன் (முன் 653 ஆம் பாடலில் கூறிய) எனும் காற்று இருநூற்றி இருபத்தி நான்கு உலகங்களிலும் வாழும் உயிர்களின் உடல்களிலும் இருக்கும். இக்காற்று இருக்கும் வரைதான் இவ்வுடல் (உயிர்) இருக்கும். இத்தனஞ்சயன் உடலில் பொருந்தி இருக்கவில்லை என்றால் உயிரிருக்கும். இந்த உடல் உயிரற்ற பிணமாகும்.

தனஞ்சயன் மற்ற ஒன்பது வாயுக்களுடன் ஒத்துப் போகாவிட்டால் உடலில் பல நோய்கள் உண்டாகும் எனக் கூறும் பாடல் எண் 655

"வீங்கும் கழலை சிரங்கொடு குட்டமும்
வீங்கும் வியாதிகள் சோகை பலவதாய்
வீங்கிய வாதமும் கூனும்முடம் அதுஆம்
வீங்கு வியாதிகள் கண்ணின் மருவியே"

தனஞ்சயன் மற்ற ஒன்பது வாயுக்களுடன் ஒத்துப் போகாமல் மாறுபட்டு இயங்குமானால் வேனல் கட்டி, சொறி சிரங்கு, தொழுநோயாகிய குட்டம், உடல் வீக்கம், இரத்த சோகை, பல வகையான கால் வீக்கம், வாதக்கால், கூன் முதுகு, கை கால் குறைந்து முடமாதல் எனப் பலவான நோய்களும், கண் நோய்களும் கலந்து உடலை வருத்தும்.

கூர்மம் என்னும் வாயு கண் நரம்பில் பொருந்தாவிடின் கண்ணில் நோய் உண்டாகி கண் பார்வை போகும் எனக் கூறும் பாடல் எண் 656

"கண்ணில் வியாதி உரோகம் தனஞ்சயன்
கண்ணில் இவ்வாணிகள் காசம் அவனல்லன்
கண்ணில் கூர்மன் கலந்திலன் ஆதலால்
கண்ணில் சோதி கலந்ததும் இல்லையே"

கண்ணில் தனஞ்சயன் மாறினால் நோய்கள் பல உண்டாகும். ஆனால் கண்ணில் பூ விழுதல், காசம் (வெள்ளெழுத்து, திரை படருதல், அல்லது புரை விழுதல்) போன்ற நோய்கள் தனஞ்சயன் வாயு திரிவதால் வருவதல்ல. கண் நரம்பில் கூர்மன் வாயு பொருந்தாவிடில், கண்ணில் நோய் உண்டாகும். கண் பார்வை போகும்.

நாடி துடிக்கும் அசைவு கண்களிலும், இருதயத்திலும் உள்ளது எனக் கூறும் பாடல் 657

"நாடியின் ஓசை நயனம் இருதயம்
தூடி அளவும் சுடர்விடு சோதியைத்
தேவருள் ஈசன் திருமால் பிரமனும்
ஓவற நின்றங்கு உணர்ந்து இருந்தாரே"

நாடி துடிக்கும் அசைவு கண்களிலும், இருதயத்திலும் உள்ளது. சிறு உடுக்கையின் ஒலிபோல அசைவுண்டாக்கும் சோதிச் சுடரை தேவர்கள் தலைவனான உருத்திரன், திருமால், பிரமன் ஆகியோர் இடைவிடாது அந்த ஒலியில் பொருந்தி அதன் தன்மை அறிந்திருந்தார்கள். உடம்பில் ஒன்பது வாசல் இருப்பது போல ஒன்பது நாடிகளும், ஒன்பது வாயுக்களும் ஓடுகின்றன எனக்கூறும் பாடல் எண் 658

"ஒன்பது வாசல் உடையதோர் பிண்டத்துள்
ஒன்பது நாடி உடையதோர் இடம்
ஒன்பது நாடி ஒடுங்கவல் லார்கட்கு
ஒன்பது வாசல் உலைநல மாமே"

சுழுமுனையில் ஒன்பது நாடிகளிலும்
ஒன்பது வாயுக்கள் ஓடுகின்றன.
இவற்றை அடக்கி ஒடுக்கும்
தவயோகப் பயிற்சி உடையவர்களுக்கு
ஒன்பது வாசல் உள்ள உடல்
நன்மையைத் தருவதாகும்.













**Frankfurt** நகரில்...






# யார்ரடி அம்மா! இந்த சீரடி !

இந்த உலகில் உள்ள மிகப் பெரிய மூன்று மதங்களாகிய இந்து , முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவம் என்று மூன்றுடனும் தொடர்புடைய வகையில் வாழந்த மகா முனிதான் இந்த சீரடி சாயிபாபா என்றால் நம்புவீர்களா? 1838 புரட்டாசி 28 இல் பிறந்தார் என்று நம்பப்படும் இவரின் சிறப்பு இப்போது சில காலமாகவே பலரால் போற்றிக் கொண்டாடப்படும் மாபெரும் புகழ் மிக்க மஹா புனிதரின் சிறப்பாகக் கூறப்படுகின்றது.

பிறப்பால் சிவ பக்தர்களின் வீட்டில் மூன்றாவது குழந்தையாகப் பிறந்த பாபா வளரும் போது இஸ்லாமிய குருவின் ஆசியில் வளர்ந்தார். அதனால் இன்றும் சீரடி சாயிபாபா கோவிலில் இந்து முஸ்லீம் பக்தர்களை ஒருமையாகக் கணலாம். அப்படி என்றால் எப்படி இங்கு கிறிஸ்துவத்தின் சில தன்மைகள் நுழைகின்றது என்பது தான் மூன்றாவது அதிசயம்? சாய்பாபாவும் மக்களை ரட்சித்தார்.

நோய்வாய்ப்பட்ட மக்களின் நோயைத் தீர்ப்பது சாதாரணம் ஆனால் சாய்பாபா நோய்வாய்ப்பட்ட மக்களின் நோயை தானே எடுத்துக் கொள்வாராம். அதனால் அந்தத் துன்பங்களை தன் உடலில் ஏற்று மக்களை மீண்டும் சுகப்படுத்து வாராம் ஆனால் அந்த நோய்கள் எல்லாம் அவரை எதுவும் செய்யாதாம் என்று நேரில்க கண்ட வணிகர்கள், சீடர்கள் எழுதிய குறிப்பில் இருந்து தெரியவருகின்றது.

சீரடி கோவிலின் சிறப்பு பூசை செய்வதற்கு எந்த பணமும் இல்லை, நீங்கள் ஆண் பெண் ஏழை பணக்காரன் எந்த மதம் என்று எப்படி இருந்தாலும் சாதாரண சாயிபாபா பக்தனாகத் தான் அங்கு பார்க்கப்படுவார்கள். நான் எங்கும் கேள்விப்படாத இன்னுமோர் அற்புதம் தான் பெண்கள் குழந்தைகளிற்கு பால்கொடுப்பதற்கு என்று தனி இடம் இங்கு உள்ளதாம் அங்கு பெண்கள் அமைதியாக இருந்து எந்த இடையூறும் இன்றி தங்கள் குழந்தைகளின் பசியாற்ற முடியும் என்பதை விட உயர்ந்த பெண்ணியம் எங்கும் பேசிவிட முடியாது.

கோவிலிற்குள்ளே ஒரு உண்டியல் உண்டு அதில் நீங்கள் விரும்பிய தொகை போட விரும்பினால் போடலாம். நகையாக பொருளாக நன்கொடை செய்ய விரும்பினால் செய்யலாம். காரணம் சாயிபாபா பிச்சை எடுத்து வாழ்ந்த மஹா சித்தர் என்பதனால் அதே போன்றே இன்றும் கடைப் பிடிக்கப்படுகின்றது.

பிச்சை எடுத்தாலும் அவர் வாழ்ந்த காலத்தில் அவர் கையாலேயே சமைத்து உணவு கொடுப்பாராம். பிச்சை எடுத்த பொருட்கள் குறைவாக இருந்தாலும் அன்று அவரிடம் வந்த அனைவருக்கும் போதும் என்று கூறும் வகையில் எடுக்க எடுக்க குறையாமல் அவர் சமையல் செய்த பாத்திரத்தில் இருந்து உணவு வந்தவண்ணம் இருக்கும் என்றும் குறிப்புக்களில் அதிசயிக்கப் படுகின்றது.

சாயிபாபா சொன்னதில் சிறப்பு அன்பு ஒன்றே இறைவனை அடையும் மார்க்கம், நீங்கள் எந்த மதத்தில் உள்ளீர்களோ அதே மதத்தில் இருங்கள். ஆனால் மற்றைய உயிர்களை நேசியுங்கள் என்று சொன்ன அவர் ஜேசுவைப் போன்றே இறந்து மூன்று நாளில் மீண்டும் உயிர்த்தார் என்பது தான் மீண்டும் கிறிஸ்தவ மதத்தை நினைவு படுத்தும் இன்னுமோர் சிறப்புச் செய்தி.



ஆம் இவர் சமாதியில் இறங்கும் முன் தன் உடலைப் பாதுகாக்கும் படி சொல்லிவிட்டு சமாதியில் இறங்கினாராம். அப்போது பலர் சாய்பாபாபின் உடலைப் புதைக்க திட்டமிட்டுள்ளனர். ஆனால் பூசாரி அனைவரையும் தடுத்து மூன்று நாள் காத்திருக்க மூன்றாம் நாள் உயிர்த்துவந்து ஆசிவழங்கி அனைவரையும் ஆச்சரிய படுத்தினார் சாய்பாபா என்பது கண்கூடு நடந்த ஆச்சரியமாம்.

சி.சிவவினோபன்.

இஸ்லாமியர்களையும் இந்துக்களையும் சேர்ந்து வாழவைத்த சாய்பாபா மூன்று முக்கிய மதங்களை நினைவு படுத்தி வாழ்ந்த இன்றும் வாழ்ந்துகொண்டுள்ள மஹா சித்தரே எங்கள் சீரடி சாய்பாபா என்று பக்தர்கள் போற்றிக் கொண்டாடிவருகின்றார்கள்.






www.star-impex.de



# இயக்குநர் சிகரம்
# கே.பாலசந்தர்
## வாழ்வும் படைப்பும்

**வெற்றி மைந்தன்**

### தப்பாத தாளங்கள்

சென்னை எல்லோரையும் அரவணைத்துக் கொள்ளும். ஆனால் யாருக்கும் சிவப்புக் கம்பளம் விரிக்காது. அவரவருக்கான விரிப்பை அவரவரே தயாரித்துக் கொள்ள வேண்டும். பாலசந்தர் சென்னை வந்து கிளார்க் வேலையில் சேர்ந்தார். அக்கவுண்ட் ஜெனரல் அலுவலகத்தில் வேலை. அரசாங்க வேலை. அரசு வேலை என்பது அந்த காலகட்டத்தில் மிகப்பெரிய அங்கீகாரம். ஆசைப்பட்டது சினிமா, படித்தது விலங்கியல், கிடைத்த வேலை கிளார்க் என முரண்களின் மூன்று முடிச்சுகளுடன் அவருடைய பயணம் தொடர்ந்தது.

அவருடைய வாழ்க்கையின் திருப்புமுனையாக இருந்தது அவர் எழுதிய நாடகம் ”மேஜர் சந்திரகாந்த்”. அது ஒரு ஆங்கில நாடகம். அந்த நாடகத்தைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதினார். அண்ணன் தங்கை. தங்கையை ஏமாற்றிய காதலன். அவனை பழிவாங்கத் துடிக்கும் அண்ணன். அவனைக் காப்பாற்றத் துடிக்கும் தந்தை. நீதியை நிலைநாட்ட நினைக்கும் இன்னொரு மகன். என கதாபாத்திரங்களின் அடிப்படையிலானது இந்த நாடகம். இந்தப் படத்தில் தங்கையை ஏமாற்றிய வில்லன் கதாபாத்திரத்தின் பெயரைத் தான் உலகமே இப்போது உற்சாகமாய் உச்சரித்துத் திரிகிறது.
அந்த மந்திரப் பெயர் ரஜினிகாந்த் !

இந்த நாடகம் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது. இது பாலசந்தரின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான மைல் கல்லாக மாறிவிட்டது.
அதன் பிறகு அவர் எழுதிய பல நாடகங்கள் பிரமிக்கத் தக்க வரவேற்பைப் பெற்றன. அவற்றில் முக்கியமானவை நீர்க்குமிழி, சர்வர் சுந்தரம், நாணல், மெழுகுவர்த்தி போன்றவை.

வேலை செய்து கொண்டே நாடகங்கள் எழுதி, இயக்கி தனது கலை ஆர்வத்தை உயிர்ப்புடன் வைத்திருந்த பாலசந்தருக்கு திரை அனுபவம் 1964ம் ஆண்டு கிடைத்தது.
ஆர். எம் வீரப்பன் அவர்களுடைய சத்யாமூவீஸ் ஒரு திரைப்படம் தயாரித்தது. அந்தப் படத்தை இயக்கியவர் பி.மாதவன். பிற்காலத்தில் 49 படங்களை இயக்கி மிகப்பெரிய பெயரைப் பெற்ற இயக்குனர் மாதவனின் மூன்றாவது திரைப்படம் அது. விஸ்வநாதன் ராமமூர்த்தி இயக்கம். அந்தத் திரைப்படத்துக்கு வசனம் எழுதும் வாய்ப்பு பாலசந்தருக்குக் கிடைத்தது.

முதல் வாய்ப்பே அவருக்கு எம்.ஜி.ஆரிடமிருந்து நேரடியாகக் கிடைத்தது. பாலசந்தரின் நாடகங்களைப் பார்த்து வியந்திருந்த எம்.ஜி.ஆர் பாலசந்தரை அழைத்து தனது அடுத்தப் படத்துக்கான கதை வசனத்தை எழுதச் சொன்னார். பாலசந்தர் பயந்தார். அந்த நிலையை ”தண்ணீரிலிருந்து தரையில் தூக்கிப் போட்ட மீனைப் போல ஆனேன்” என்கிறார் பாலசந்தர். கிடைத்த வாய்ப்பை புளியங் கொம்பாய்ப் பிடித்து கதை வசனத்தை எழுதினார் பாலசந்தர். அதற்கு மிகவும் உதவியாக இருந்தவர் தயாரிப்பாளர் ஆர்.எம்.வீரப்பன்.



முதல் வாய்ப்பே அவரை முத்திரை பதிக்கச் செய்தது. ஷான் கானரி நடித்த ஆங்கில ஜேம்ஸ்பாண்ட் திரைப்படமான ”டாக்டர் நோ” வின் தழுவல் தான் அந்தப் படம்.
படத்தின் பெயர் : தெய்வத் தாய்

தொடர்ச்சி 38 ம் பக்கம்



**தப்பாத தாளங்கள்** 37 ம் பக்கத் தொடர்ச்சி

நடித்தவர் : எம்.ஜி.ஆர்.
கூடவே சரோஜா தேவி, நாகேஷ், எம்.என்.நம்பியார், அசோகன் என நட்சத்திரப் பட்டாளங்கள் அந்தத் திரைப்படத்தை அலங்கரித்தார்கள்.
பாலசந்தர் நாடகங்கள் எழுதி அரங்கேற்றிக்கொண்டிருந்தபோது ஒரு நடிகர் அவரிடம் வந்து

"எனக்கும் உங்க நாடகத்துல ஒரு கதாபாத்திரம் கொடுங்களேன்" என்று கேட்டார். கேட்டவர் நாகேஷ். "ஒரு கதாபாத்திரமென்ன உங்களுக்காகவே ஒரு நாடகம் நான் எழுதறேன். அதுல நீங்க தான் ஹீரோ" என்றார் பாலசந்தர். அப்படி உருவானது தான் சர்வர் சுந்தரம்.



சினிமாவில் கதாநாயகனாக வேண்டும் எனும் ஆசையில் சென்னைக்கு வருகிறான் ஒரு இளைஞன். பரம ஏழை. அவனுக்கு அவன் விரும்பிய சினிமா வாழ்க்கை கிடைக்கவில்லை. ஒரு ஹோட்டலில் சர்வராக வேலை பார்க்கிறான். அவனுக்கு ஒரு காதலும் துளிர் விடுகிறது. அவருடைய நண்பர் ஒருவரின் உதவியுடன் அவருக்கு சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

சினிமாவில் ஹீரோவான அவருடைய காதலி இன்னொருவருடன் மண ஒப்பந்தம் ஆகிவிடுகிறாள். தாய் திடீரென இறந்து விடுகிறார் என அடிமேல் அடி விழுகிறது. துயரத்தைத் தாங்க முடியாதவராக தனது சர்வர் வேலைக்கே திரும்ப முடிவு செய்கிறார் என கதை அமைக்கப்பட்டிருந்தது.

ஒருவகையில் நாகேஷின் சொந்த வாழ்க்கையின் திரை வடிவம் இது என்றும், நாகேஷ் தனது வாழ்க்கையைப் பாலசந்தரிடம் பகிர்ந்து கொண்டதால், அதையே அவருக்கான நாடகமாக மாற்றினார் என்றும் கூட சொல்வதுண்டு.எப்படியோ, சர்வர் சுந்தரம் நாடகமானது. அந்த நாடகம் அரங்கேறியது. நாகேஷ் ஹீரோவானார்.

அந்த நாடகத்தைப் பார்த்த ஏ.வி.எம் நிறுவனம் அதைத் திரைப்படமாக எடுக்க முடிவு செய்தார்கள். பாலசந்தருக்கு தனது கதை திரை வடிவம் பெறுவதில் மிகப்பெரிய உற்சாகம். அந்தக் கதைக்கான திரை வடிவத்தை எழுதும் வாய்ப்பையும் கே.பாலசந்தரிடமே கொடுத்து விட்டார்கள். நாகேஷ் நடித்தார். அவருடைய திரையுலக வாழ்க்கையிலேயே மிகப்பெரிய அடையாளமாக அந்தப் படம் நிலைபெற்று விட்டது.

திரைப்படத்துக்குள் திரைப்படம் எனும் புதுமை அப்போது தான் சினிமாவில் முதன் முறையாக புகுத்தப்பட்டது ! அவளுக்கென்ன, போகப் போகத் தெரியும் என பாடல்களும் பட்டையைக் கிளப்பின.

சூப்பர் டூப்பர் ஹிட் திரைப்படங்களின் வரிசையில் சர்வர் சுந்தரம் சேர்ந்து விட, பாலசந்தரின் காட்டில் சட்டென மழை அடிக்க ஆரம்பித்தது.
படம் இயக்கிறியா ? எனும் இன்பத் தேன் வந்து காதில் பாய்ந்தது அந்தக் காலத்தில் தான்.

**நீர்க்குமிழி !**

கே.பாலசந்தர் இயக்கத்தில் உருவான முதல் திரைப்படம். இயக்குகிற முதல் படத்துக்கே நிலையில்லாத "நீர்க்குமிழி" ந்னு பேரு வெச்சிருக்கே ? நல்ல பெயரா வை என அவருக்கு அறிவுரை சொன்னவர்கள் உண்டு. பாலசந்தர் ஒத்துக்கொள்ளவில்லை. பிரபலமான நாடகத்தின் அதே தலைப்பையே வைக்க வேண்டும் என பிடிவாதமாய் இருந்தார். பாலசந்தரின் சிந்தனைகளும், அவருடைய நோக்கமும் என்ன என்பதை அந்தத் தலைப்பே எடுத்துக் காட்டியது.
அந்தக் காலத்தில் திரைப்படங்களெல்லாம் ஆண்களை மையப்படுத்தியே எடுக்கப்பட்டு வந்தன. எனவே பாலசந்தர் தனது படங்களை வித்தியாசமான களத்தில் எடுக்க வேண்டும் என நினைத்தார். அதற்காக அவர் தேர்ந்து கொண்டது இரண்டு விஷயங்கள்.
ஒன்று நடுத்தர வர்க்க வாழ்க்கையில் நடக்கின்ற சம்பவங்கள், சிக்கல்கள். இரண்டாவது பெண்களை மையப்படுத்தும் கதாபாத்திரங்கள்.அந்த சூழலில் அவருடைய நீர்க்குமிழி நாடகத்தின் கதை வித்தியாசமானதாய் இருக்கும் என அவர் நினைத்தார். எனவே அந்த நாடகத்தையே திரைப்படமாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.
ஒரு மருத்துவமனை. அதில் ஒரு நோயாளி இளைஞன். யாருமற்ற அவனுக்கு இருக்கக் கூடிய ஒரே சொந்தம் அவனுடைய நகைச்சுவை உணர்வு. அந்தக் கதாபாத்திரம் நாகேஷுக்கானது !
அங்கே ஒரு நர்ஸ், அழகும் இளமையுமான நர்ஸ் இந்திரா காதல் வசப்படுகிறாள். அவளுக்கு வெளிநாடு சென்று படிக்க வேண்டும் எனும் கனவும் இருக்கிறது. அந்தக் கதாபாத்திரம் சௌகார் ஜானகிக்கானது.
அவள் காதல் வசப்படுபவர் ஒரு நோயாளி. கால்பந்து வீரன். சொத்துக்காக அவனைக் கொன்று விட சொந்தங்களே நிற்கிறார்கள். அந்தக் கதாபாத்திரம் வி.கோபாலகிருஷ்ணனுடையது. ஜெயந்தி அந்த மருத்துவமனையில் உள்ள ஒரு டியூட்டி நர்ஸ். கலகலப்பாகச் சென்று கொண்டிருக்கும் நாகேஷின் வாழ்க்கை, அவருடைய நீர்க்குமிழி போன்ற மிச்சவாழ்க்கையைப் பற்றி அறிந்ததும் திசை மாறுகிறது. காதலர்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென முடிவு செய்து அவனுடைய வாழ்க்கையை அதற்காகவே அர்ப்பணிக்கிறான்.
படம் வெளியான காலகட்டத்தில் மிகவும் பரபரப்பான நல்ல விமர்சனங்களை வாங்கி படம் வெற்றியடைந்தது.

சென்னையின் கெயிட்டி திரையரங்கில் நீர்க்குமிழி 82 நாட்கள் ஓடி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. மிகவும் குறைந்த பட்ஜெட்டில் தயாரான அந்தப் படத்துக்கு அது மிகப்பெரிய வசூல் வெற்றியாகவும் அமைந்தது. சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் பாடிய "ஆடி அடங்கும் வாழ்க்கையடா" பாடல் இசை ரசிகர்களை கட்டிப் போட்டது.1965ம் ஆண்டு நீர்க்குமிழி வெளியானது. அவருடைய இயக்குனர் வாழ்க்கையின் பயணம் செழிப்படைய ஆரம்பித்தது.
அதே ஆண்டு நீல வானம் எனும் திரைப்படத்துக்கான கதை, திரைக்கதையை பாலசந்தர் எழுதினார். பி.மாதவன் தான் இந்தப் படத்திலும் இயக்குனர். இந்தப் படத்திலும் நாகேஷ் உண்டு. ஆனால் படத்தின் கதாநாயகன் வேறொரு நபர்.
அவர் தான் சிவாஜி கணேசன்.




நடிகர் திலகம் சிவாஜி கணேசனோடு பாலசந்தர் பணியாற்றிய முதல் திடைப்படம் நீலவானம்.
இந்தப் படமும் 1965ம் ஆண்டு வெளியானது.கே பாலசந்தரின் இந்தி பிரவேசமும் அந்த ஆண்டு நிகழ்ந்தது.

தொடரும்....

JM
Milin Impex GmbH
மலிவான தரமான மளிகைப்பொருட்களின் மொத்த சில்லறை விற்பனையாளர்
அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்
தாயக மரக்கறிகள் பழவகைகள் மற்றும் உணவுப் பொருட்களை மொத்தமாக பெற்றுக்கொள்ள நாடுங்கள்
Tel: 0231 45 96 17
விபரங்களுக்கு


தரமும் மலிவும் ஒரே இடத்தில்
Web :www.milinimpex.de
எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்
Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288



# நூறு கோடி கொட்டிய கைதி

இயக்குனர் லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், கார்த்தி நடிப்பில் வெளியான 'கைதி' இந்திய மதிப்பில் நூறு கோடி ரூபாயை வசூலித்து சாதனை படைத்திருக்கிறது.
இந்த ஆண்டு வெளியான தமிழ் திரைப்படங்களில் 'தல' அஜித் நடித்த விஸ்வாசம் மற்றும் நேர்கொண்ட பார்வை, சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த 'பேட்ட', ராகவா லோரன்ஸ் நடித்த 'காஞ்சனா 3', தளபதி விஜய் நடித்த 'பிகில் 'ஆகிய படங்கள் 100 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்து சாதனை படைத்திருக்கின்றன.

இந்தப் பட்டியலில் தற்பொழுது கார்த்தி நடிப்பில் வெளியான 'கைதி 'படமும் இணைந்திருக்கிறது. இந்த படம் வெளியாகி மூன்றாவது வாரத்தில் உலகம் முழுவதும் நூறு கோடி ரூபாயை வசூலித்து, இந்த சாதனையை எட்டியிருக்கிறது. இதன் மூலம் 100 கோடி ரூபாய் கிளப்பில் முதன் முறையாக நடிகர் கார்த்தி இணைந்திருக்கிறார். இதன் காரணமாக அவரது ரசிகர்கள் உற்சாகத்தில் இருக்கிறார்கள்.
இதனிடையே முதன் முறையாக 'கைதி 'படத்தின் மூலம் நூறு கோடி ரூபாய் கிளப்பில் இணைந்திருக்கும் கார்த்தி உற்சாகத்தில் இருக்கிறார். அத்துடன் அவர் தற்போது இயக்குனர் பாக்கியராஜ் கண்ணன் இயக்கத்தில் 'சுல்தான்' என்ற படத்திலும், இயக்குநர் ஜீத்து ஜோசப் இயக்கத்தில் 'தம்பி' என்ற படத்திலும் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# ரஜினி – டி இமான் இணையும் புதிய படம்

ரஜினி படத்திற்கு இசையமைக்கிறார். டி இமான் பேட்ட, தர்பார் ஆகிய படங்களை தொடர்ந்து சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், சன் பிக்சர்ஸ் தயாரிப்பில் நடிக்கும் பெயரிடப்படாத படத்தை சிவா இயக்குகிறார்.
இப்படத்திற்கு டி இமான் இசையமைக்கிறார். இது குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை தயாரிப்பு நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. விஸ்வாசம், நம்ம வீட்டு பிள்ளை ஆகிய படங்களை தொடர்ந்து டி இமான் இசையமைக்கும் பெரிய பட்ஜட் படம் இது என்பதும், கிராமப்புறங்களில் விஸ்வாசம் மற்றும் நம்ம வீட்டு பிள்ளை படத்தின் பாடல்களுக்கு கிடைத்த வரவேற்பை பொருத்தும் டி இமானுக்கு இந்த வாய்ப்பு கிடைத்திருப்பதாக திரையுலக வணிகர்கள் தெரிவிக்கிறார்கள்.

25ம் பக்கத் தொடர்ச்சி

## இனிமேல் நான் நயந்தாரவின் விசிறி அல்ல





## கறுப்பழகி Gabrella

ஒரு பெண்ணின் மதிப்பு, அவளது வெள்ளை மேனியிலே கணிக்கப்படுகிறது என்பதை ஐரா எதிரொலித்தாலும், பவானியின் காதாலன் அமுதனும் அவளை, அவளது உள்ளத்து அழகிற்காக விரும்புவது, கறுப்பு மேனி அழகில்லை என்பதை மீண்டும் நிர்ணயிப்பதை எதிர்ப்பதாக இல்லை.

வறுமையான, பரிதாபமான வாழ்வு, அக்கிரமங்கள், சித்திரவதைகள், துன்பங்கள் மற்றும் அசிங்கங்கள் என்பவை முக்கியமாக கறுப்பு மேனி கொண்டவர்களுக்கே நடைபெறும் என்பதையும் பவானியின் துரதிஸ்டமான வாழ்க்கையினால் இத்திரைப்படம் மீண்டும் நிலைநாட்டுகிறது. செம்மேனி யமுனாவாக, நயன்தாராவின் கதா பாத்திரம் நினைத்தைச் செய்து, வரும் வரன்களை எதிர்த்துப்பேசி, தன் தொழிலில் சிறந்தவளாக வீர நடை போடுகிறாள். இருட்டுமேனி பவானியோ, சுற்றியுள்ளோரின் அக்கிரமங்களை தாங்கிக் கொண்டே உள்ளாள். ஒரு ஆணையும் வாழ்க்கையில் விடாது யமுனா செல்ல, பவானியின் வாழ்க்கை காதலன் அமுதன் மூலமாக மட்டுமே சிறு இன்பத்தைக் காண்கிறது. பெண்ணியம் என்பது அழகான பெண்களுக்கு மட்டும் தானா?

கறுப்பு மேனி கொண்டவர்களாக வெள்ளையர்கள் வேடம் போட்டு, கறுப்பினத்து மக்களை அசிங்கபடுத்தியது உலகறியும் அக்கிரமம். அதுவே நயன்தாரா இங்கு செய்ததுடன் நேரடியாக ஒப்பிடமுடியாது. ஏனெனில், கறுப்பு மக்களின் தாக்குதல் வரலாற்று ரீதியாக எம்மிலிருந்து வேறுபட்டது. இருந்தும் நயன் தாராவின் பவானி வேடம், வெறும் வேடம் அல்ல. இன்னொருவருடைய துரதிருஸ்டத்தை இவர் வேடமாகப் போட்டுக் கொண்டு நடத்திச் செல்லலாம், ஆனால் சராசரி பவானி தனது மேனியை எப்படிக் கழுவினாலும் அது வெள்ளையாகாது. படத்தின் போக்கை முற்போக்குச் சிந்தனையாகக் கொண்டு செல்ல நிறைய இடங்கள் இருந்தன. ஆனால், இயக்குனர்கள் முன்வரவில்லை. நயன்தாரா போன்ற தேர்ச்சி பெற்ற நடிகைகள் நியாயமற்ற இத்தகைய படங்களை மறுத்துச்செல்லாம் அல்லது மாற்றிக்கொள்ளலாம். நயன்தாரா தனது சமூகப்பொறுப்பை விட்டுச் சென்றதால் என்னைப் போன்ற பல விசிறிகளை இழந்தார்.




ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
தரமும் மலிவும் நிரந்தரம்!
ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய
பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள்,
கடல் உணவுவகைகள், அனைத்திற்கும், எம்மை நாடுங்கள்.
அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு வாழ்த்துக்கள்

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan



துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven

உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு

# EurAsian - Tours



LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...

Tel: 02131 273 692

அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு
வாழ்த்துக்கள்

Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!

Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com

இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!



# Jasmine Silk House


நேரில் வந்து பாருங்கள்
பட்டுச்சேலை, பஞ்சாபி, குருதார்
மற்றும் சிறுவர்களுக்கான ஆடைகள்
அனைத்தும் வகை வகையாக உண்டு.

அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு
வாழ்த்துக்கள்

HP:0173 1937 325

Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen





# ASIA BAZAR

Ria Money Transfer
MoneyGram
VALUTRANS

துரித பண மாற்றுச் சேவை!

அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு
வாழ்த்துக்கள்

ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவும் பொருட்கள்.இன்னும் பல...

உரிமையாளர்:
பா.கணேஷ்

An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282



Stuttgart நகரில்...

# Pirruntha Silks

அனைவருக்கும் நத்தார்,புத்தாண்டு
வாழ்த்துக்கள்

தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்

பிருந்தாஸ்

0170 334 4059

Ludwig str.87a - 70197 Stuttgart Tel: 0711 615 8976



Photography Cinematography Album Making Graphic Designing

Wedding Events Live Birthday Saree Ceremony Graphic Design Printing

# AKR Visualizers

PHOTOGRAPHY AND CINEMATOGRAPHY
professional photography cinematography

அனைவருக்கும்
நத்தார்,புத்தாண்டு
வாழ்த்துக்கள்



+49 231 1087 6361
+49 162 803 1647
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com
Rheinische Str. 72
44137 Dortmund

# SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN



069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main





India | Singapore | Malaysia | Thailand | Hong Kong | U.A.E. | K.S.A. | Oman | Qatar | Bahrain | Kuwait | U.K. | France | Germany | Australia | South Africa | Canada | U.S.A.

இனிய
கிறிஸ் துமஸ்
நல்வாழ்த்துகள்

Double Horse
Nila
AGAM அகம்
BTM
Aachi
Rabeena

Merry Christmas

StaR Impex :
Inh :K.Sivasubramaniam

Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00

# STAR IMPEX

Lebensmittel Grosshandel e.K.

Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
FOR SHOPS ONLY